# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
வார்டு குழுத்தலைவர்கள், ஆளும்கட்சி
மற்றும் எதிர் கட்சித் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, மேற்கு,
தொண்டாமுத்தூர், பேரூர் மற்றும்
சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதிகள்),
பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் நீலகிரி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண்: 9104/ 2008 / எம்சி. 8 நாள்: 22.8.2008**

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற சாதாரணக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் வருகின்ற 29.8.2008 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத்தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/ உண்மைநகல் / உத்திரவின்படி/

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## ஆகஸ்ட் 2008 மாமன்ற சாதாரண கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| **பொருளடக்கம்** | |
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்** |
| 1 | பொறியியல் பிரிவு - பள்ளிகளுக்கு தேவையான பெஞ்ச், டெஸ்க் போன்ற தளவாட சாமான்கள் வாங்குதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 2 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் -வார்டு எண் 32- காந்திபுரம் 5-வது வீதி தொடர்ச்சி – சங்கனூர் பள்ளத்தில் ஆர்.சி.சி. பாலம் கட்டுதல் - மதிப்பீடு ரூ. 25 இலட்சம் -நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 3 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 65- ரயில்வே மென்ஸ் காலனி முதல் நல்லாம்பாளையம் சாலை வரை மழைநீர் வடிகால் கட்டுதல் - மதிப்பீடு ரூ.25 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 4 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் -வார்டு எண் 14- தடுப்புச்சுவர் அமைத்தல் பணி - மதிப்பீடு ரூ.24.6 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 5 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் -வார்டு எண் 26- காமராஜர் சாலை மேற்கு மற்றும் அப்துல் ரஹீம் சாலை – நடைபாதை, தடுப்புச்சுவர் கட்டுதல் - மதிப்பீடு ரூ.24. இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 6 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் -வார்டு எண் 3- பீளமேடு லட்சமி கார்டன் பகுதி – கற்சாலை அமைத்தல் பணி - மதிப்பீடு ரூ. 24.8 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 7 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் -வார்டு எண் 9- தச்சன் தோட்டம் மற்றும் அங்கம்மாள் லேஅவுட் பகுதி –கான்கிரீட் கால்வாய் அமைத்தல் பணி - மதிப்பீடு ரூ.25 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 8 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 31- கோகுலே வீதியில் தார் சாலை புதுப்பித்தல் பணி - மதிப்பீடு ரூ. 17.7 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 9 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் -3 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 10 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் -வார்டு எண் 31- கோகுலே வீதி சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் கட்டுதல் பணி - மதிப்பீடு ரூ. 22.5 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 11 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 6- கே.பி.ஆர். லேஅவுட் - தார்தளம் புதுப்பித்தல் பணி - மதிப்பீடு ரூ.17.5 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 12 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் -வார்டு எண் 4- காவேரி நகர் - தார்தளம் புதுப்பித்தல் பணி - மதிப்பீடு ரூ.17.5 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 13 | பொறியியல் பிரிவு - பிரதான அலுவலகம் - குடிநீர் தொட்டியின் கீழ் உள்ள அலுவலகம் - அனைத்து இந்திய உள்ளாட்சி நிறுவனத்திற்கு வாடகைக்கு விடுதல் - வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்றம் முடிவு செய்தல் - தொடர்பாக |
| 14 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் -வார்டு எண் 39 மற்றும் 40- வின்சென்ட் சாலையில் 10 பொது குடிநீர் குழாய்கள் - மாற்றி அமைத்தல் -மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 15 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் -வார்டு எண் 27- அவிநாசி சாலை – மாநகராட்சி வணிக வளாகம் - பாஸ்போர்ட் அலுவலகம் -டீசல் ஜெனரேட்டர் மற்றும் பேனர் போர்டு அமைத்தல் பணி -மதிப்பீடு ரூ.25 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 16 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 49- திருவேங்கடசாமி சாலை வடக்கு –கான்கிரீட் நடைபாதை அமைத்தல் பணி - மதிப்பீடு ரூ. 25 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| 17 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் -வார்டு எண் 36- சீதாலட்சுமி மகப்பேறு மருத்துவமனை-மாநகராட்சி பிரசவ விடுதியில் தரை தளம் B பகுதி கட்டிடம் கட்டுதல் - மதிப்பீடு ரூ.25 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 18 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் -இரத்தினபுரி மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் கழிப்பிடம் - காவலர் அறை மற்றும் சுற்றுச்சுவர் கட்டுதல் - மதிப்பீடு ரூ.25 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 19 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் -9 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 20 | நகரமைப்புப் பிரிவு -வடக்கு மண்டலம் -விளாங்குறிச்சி கிராமம் - சர்வே எண் 383/1 – 1.40 ஏக்கர் நிலம் - பலஅடுக்குமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 21 | நகரமைப்புப் பிரிவு -மேற்கு மண்டலம் -வார்டு எண் 34 – தெலுங்குபாளையம் கிராமம் - க.ச.எண். 548/2 பகுதி - பலஅடுக்குமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 22 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - டாக்டர் நஞ்சப்பா சாலை – வணிக வளாகம் - தளம் எண் 3 ல் உள்ள கடை – தமிழ்நாடு டெக்ஸ்டைல் கழகத்திற்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 23 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - 8 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 24 | பொறியியல் பிரிவு - 16 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 25 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் -வார்டு எண் 3- ஹோப் காலேஜ் பகுதி - மழைநீர் வடிகால் கட்டுதல் பணி - மதிப்பீடு ரூ. 25 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 26 | பொறியியல் பிரிவு - வெள்ளலூர் குப்பைக் கிடங்கு – மேற்கு பகுதியில் சுற்றுச்சுவர் கட்டுதல் - மதிப்பீடு ரூ. 25 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 27 | பொறியியல் பிரிவு - வெள்ளலூர் குப்பைக் கிடங்கு – தார்சாலை அமைத்தல் பணி - மதிப்பீடு ரூ. 25 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 28 | பொறியியல் பிரிவு - வெள்ளலூர் குப்பைக் கிடங்கு – வடக்குப் பகுதியில் தார்சாலை அமைத்தல் பணி - மதிப்பீடு ரூ. 25 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 29 | தெற்கு மண்டலம் - மாநகராட்சி பேருந்து நிலையங்கள் - புத்தக வெளியீட்டாளர்களுக்கு கடை ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 30 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண் 44 – பெரிய கடை வீதி – மறு தார்தளம் அமைத்தல் பணி – மதிப்பீடு ரூ. 19 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல். – தொடர்பாக |
| 31 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண் 13 – வீரப்பத்தேவர் காலனி பகுதி – மழைநீர் வடிகால் அமைத்தல் பணி - மதிப்பீடு ரூ. 25 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல். – தொடர்பாக |
| 32 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 49 – திருவேங்கடசாமி சாலை தெற்கு – சிமெண்ட் கான்கிரீட் நடைபாதை அமைத்தல் பணி – மதிப்பீடு ரூ. 25 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல். – தொடர்பாக |
| 33 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண் 28 – ரங்கநாதபுரம் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி – ஆய்வுக்கூடம் மற்றும் நூலகம் கட்டுதல் பணி - மதிப்பீடு ரூ. 25 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல். – தொடர்பாக |
| 34 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் -வார்டு எண் 36- சீதாலட்சுமி மகப்பேறு மருத்துவமனை- மாநகராட்சி பிரசவ விடுதியில் முதல் தளம் B பகுதி கட்டிடம் கட்டுதல் - மதிப்பீடு ரூ.25 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| 35 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் -வார்டு எண் 25- அரசு கலைக்கல்லூரி சாலை – மறுதார்தளம் அமைத்தல் பணி –மதிப்பீடு ரூ.21.5 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 36 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் -வார்டு எண் 44- கருப்பகவுண்டர் சாலை - மறுதார்தளம் அமைத்தல் பணி –மதிப்பீடு ரூ.19 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 37 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் -வார்டு எண் 72- ஸ்ரீ லட்சுமி நகர் -தார்தளம் புதுப்பித்தல் பணி –மதிப்பீடு ரூ.17 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 38 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் -வார்டு எண் 61- ராமசாமி மனை பிரிவு - பொது ஒதுக்கீட்டு இடத்தில் பூங்கா மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல் பணி –மதிப்பீடு ரூ.25 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 39 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் -வார்டு எண் 56- மாசாணியம்மன் கோயில் வீதி – மறுதார்தளம் அமைத்தல் பணி – மதிப்பீடு ரூ.15.1 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 40 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் -வார்டு எண் 53- செல்வபுரம் மாநகராட்சி ஆரம்பப் பள்ளியில் வகுப்பறைகள் மற்றும் உணவுக்கூடம் கட்டுதல் -மதிப்பீடு ரூ.20 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 41 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் -வார்டு எண் 56- சொக்கம்புதூர் மின்சார மயானத்தை எரிவாயு மயானமாக மாற்றியமைத்தல் - மதிப்பீடு ரூ.21 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 42 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் -வார்டு எண் 34- இராமலிங்கம் காலனி –மாநகராட்சி மருத்துவமனை –சுற்றுச்சுவர் மற்றும் பராமரிப்பு பணி செய்தல் -மதிப்பீடு ரூ.22.5 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 43 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் -வார்டு எண் 37- சிட்டி மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி – மராமத்துபணி செய்தல் - மதிப்பீடு ரூ.18 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 44 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் -வார்டு எண் 37- சிட்டி மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி – உணவகம் கட்டுதல் பணி - மதிப்பீடு ரூ.19 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 45 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் -வார்டு எண் 2-பீளமேடு மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி-கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் - மதிப்பீடு ரூ.25 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 46 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் -வார்டு எண் 49- திருவேங்கடசாமி சாலை கிழக்கு – வணக்கத்திற்குரிய மேயர் குடியிருப்பு -புதியதாக கட்டுதல் பணி - மதிப்பீடு ரூ.25 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 47 | Jnnurm –பில்லூர் II குடிநீர் திட்டம் -24 x 7 குடிநீர் திட்டம் - விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க தொழில்நுட்ப திட்ட ஆலோசகர்களை நியமித்தல் – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 48 | வடக்கு மண்டலம் -ஆம்னி பேருந்து நிறுத்தம் - நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமம் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 49 | வடக்கு மண்டலம் - பட்டேல் ரோடு உள்ளிட்ட இடங்கள்- மாநகராட்சி வணிக வளாக கடைகள் -உரிமக்காலம் புதுப்பித்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| 50 | வடக்கு மண்டலம் - வார்டு எண் 32 – காந்திபுரம் 7வது வீதி விரிவு - விநாயகர் கோயில்,அம்மன் கோயில்களுக்கு வரிவிலக்கு அளித்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக. |
| 51 | வடக்கு மண்டலம் -வார்டு எண் 33- டாடாபாத் யார்டு சாலை மற்றும் 100 அடி சாலை சந்திப்பு - மீன்வளத்துறைக்கு இடம் ஒதுக்கீடு செய்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 52 | வடக்கு மண்டலம் - வார்டு எண் 1 – பாரதி காலனி - ஸ்ரீ சக்தி விநாயகர் கோயிலுக்கு வரிவிலக்கு அளித்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக. |
| 53 | பொறியியல் பிரிவு - 9 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| 54 | பொறியியல் பிரிவு - 13 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 55 | வடக்கு மண்டலம் - வார்டு எண் 33 – அழகப்பா காலனி –அருள்மிகு மகா கணபதி, மகா மாரியம்மன் திருக்கோயில்களுக்கு வரிவிலக்கு அளித்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக. |
| 56 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 56 – சொக்கம்புதூர் மின் மயானத்தின் தென்புறம் சுற்றுச்சுவர் கட்டுதல் - மதிப்பீடு ரூ. 25 இலட்சம் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 57 | நகரமைப்புப் பிரிவு-வடக்கு மண்டலம் -சௌரிபாளையம் கிராமம் - சர்வே எண் 427/2B-பரப்பு 14344 ச.அ. – குடியிருப்பு பகுதி –பொது உபயோகப் பகுதி நிலப்பயன்பாடாக அறிவிப்பு செய்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக. |
| 58 | நகரமைப்புப் பிரிவு- தெற்கு மண்டலம் -வார்டு எண் 42 – நகரளவு எண் 535 உள்ளிட்டவை -40 அடி அகல திட்ட சாலை அமைத்தல் -நில ஆர்ஜிதம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக. |
| 59 | நகரமைப்புப் பிரிவு-மேற்கு மண்டலம் -குமாரபாளையம் கிராமம் - க.ச.எண் 514 /2 உள்ளிட்டவை – 5.51 1/2 ஏக்கர் விவசாய நிலத்தை குடியிருப்பு பகுதியாக அறிவிப்பு செய்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக. |
| 60 | நகரமைப்புப் பிரிவு-கிழக்கு மண்டலம் -வார்டு எண் 9 உப்பிலிபாளையம் கிராமம் -க.ச.எண் 271/1 – 55.25 சென்ட் நிலம் - தொழிற்சாலை நில பயன்பாட்டிலிருந்து குடியிருப்பு நில பயன்பாடாக அறிவிப்பு செய்தல் –மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக. |
| 61 | Jnnurm-பாதாள சாக்கடைத் திட்டம் -வார்டு எண் 54 – உக்கடம் கழிவுநீர் பண்ணை அமைந்துள்ள இடத்தில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய கட்டுமானப் பணி செய்தல் -400 தைல மரங்கள் அப்புறப்படுத்துதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 62 | Jnnurm-பாதாள சாக்கடைத் திட்டம் -பணித்தொகுப்பு I - திருத்திய மதிப்பீடு – மறு ஒப்பந்தப்புள்ளி கோருவது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 63 | Jnnurm-பில்லூர் II-ம் குடிநீர் திட்டம் -பணித்தொகுப்பு V- மெசர்ஸ் சுபாஷ் பிராஜெட் & மார்க்கெட்டிங் லிமிடெட், பெங்களூர் நிறுவனம் செலுத்திய முன்வைப்புத் தொகைக்கான வங்கி உத்திரவாத வைப்பு தொகை –பறிமுதல் செய்தல் -அரசு ஆணை பதிவு செய்தல்-திருத்திய மதிப்பீடு – மறு ஒப்பந்தப்புள்ளி கோருவது-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 64 | வடக்கு மண்டலம் -சீனிவாசபுரம் மாநகராட்சி திருமண மண்டபம் - உரிமக்காலம் புதுப்பித்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 65 | பொறியியல் பிரிவு - சர்வதேச அளவிலான உள்ளாட்சி நிறுவனங்களின் சுற்றுச்சூழல் நிறுவனம் - புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி முன்மாதிரி வரைவுத் திட்டம் - கோயம்புத்தூர் மாநகராட்சி உறுப்பினராக இணைதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக. |
| 66 | மேற்கு மண்டலம்-சாஸ்திரி மைதானம் -உத்திரபிரதேச ஜன்ஹத் சேவா சன்ஸ்தன் -துர்கா பூஜை நடத்த வாடகை நிர்ணயித்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 67 | நகரமைப்புப் பிரிவு -மேற்கு மண்டலம் -கவுண்டம்பாளையம் கிராமம் - க.ச.எண் 55/1 உள்ளிட்டவை – 1.71 சென்ட் 309 சதுரடி நிலம் - தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கிரய விற்பனை செய்வது – மாமன்றம் முடிவு செய்தல் -தொடர்பாக |
| 68 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 34 – ராமலிங்கம் காலனி – மீனாட்சி மகப்பேறு மருத்துவமனையில் கூடுதல் கட்டிடம் கட்டுதல் - மதிப்பீடு ரூ. 25 இலட்சம் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 69 | பணியமைப்பு -திரு ம. சுந்தரராஜன், மாமன்ற செயலாளர் -வீடு வாங்க முன்பணம் கோருதல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 70 | மேற்கு மண்டலம் - வார்டு எண் 55 – வேளாங்கன்னி ஆரோக்கிய மாதா ஆலயம்- வரிவிலக்கு கோருதல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| 71 | கிழக்கு மண்டலம் -சிங்காநல்லூர் பேருந்து நிலையம் - நேரங்காப்பாளர் அறை ஒதுக்கீடு செய்தல் -மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 72 | கிழக்கு மண்டலம் -இராமநாதபுரம் மாநகராட்சி வணிக வளாகக் கடை எண் 11 –உரிமக்காலம் நீட்டிப்பு செய்தல் -மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |

| | |
|---|---|
| **73** | கிழக்கு மண்டலம் -இராமநாதபுரம் மாநகராட்சி வணிக வளாகக் கடைகள் –உரிமக்காலம் நீட்டிப்பு செய்தல் -மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **74** | கிழக்கு மண்டலம் -சிங்காநல்லூர் பேருந்து நிலையம் -குத்தகை இனங்கள் - உரிமக்காலம் நீட்டிப்பு செய்தல்-மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **75** | நகரமைப்புப் பிரிவு -பஸ் செல்ட்டர்கள் ஒதுக்கீடு செய்தல் -கட்டணம் நிர்ணயம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| **76** | தெற்கு மண்டலம் -உக்கடம் பேருந்து நிலையம் - பாலகம் -கடை ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| **77** | பொதுப்பிரிவு -பேருந்து நிலையங்கள் மற்றும் அலுவலக கட்டிடங்கள்- பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா - பெயர் சூட்டுதல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| **78** | பொது சுகாதாரப் பிரிவு -சுற்றுச்சூழல் குறித்த திரைப்பட விழா நடத்துதல் -மாநகராட்சி கலையரங்கம் - இலவசமாக அளித்தல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **79** | பொதுப்பிரிவு- மாநகராட்சி கலையரங்கம் - புத்தக வெளியீட்டு விழா போன்ற நிகழ்ச்சிகள் நடத்துதல் -வாடகை நிர்ணயம் செய்தல்- மாமன்றம் முடிவு செய்தல்-தொடர்பாக. |
| **80** | பொறியியல் பிரிவு - 7 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **81** | பொறியியல் பிரிவு -வடக்கு மண்டலம் -தெருவிளக்கு பராமரித்தல் மற்றும் சுவிட்சுகள் இயக்குதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல்-மாமன்றம் முடிவு செய்தல் - தொடர்பாக |
| **82** | பொறியியல் பிரிவு -கிழக்கு மண்டலம் -தெருவிளக்கு பராமரித்தல் மற்றும் சுவிட்சுகள் இயக்குதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல்-மாமன்றம் முடிவு செய்தல் - தொடர்பாக |
| **83** | பொறியியல் பிரிவு -தெற்கு மண்டலம் -தெருவிளக்கு பராமரித்தல் மற்றும் சுவிட்சுகள் இயக்குதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல்-மாமன்றம் முடிவு செய்தல் - தொடர்பாக |
| **84** | பொறியியல் பிரிவு -மேற்கு மண்டலம் -தெருவிளக்கு பராமரித்தல் மற்றும் சுவிட்சுகள் இயக்குதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல்-மாமன்றம் முடிவு செய்தல் - தொடர்பாக |
| **85** | மேற்கு மண்டலம் -நகரமைப்புப் பிரிவு -கே.கே.புதூர் மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி- கவுண்டம்பாளையம் உரக்கிடங்கு பகுதியில் 5 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்தல் - மாமன்றம் முடிவு செய்தல்- தொடர்பாக |
| **86** | பொது சுகாதாரப் பிரிவு -துப்புரவு பணியாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்கள்- 2008-09 தீபாவளி – சீருடைகள் காலணிகள் மற்றும் தையல் கூலி வழங்குவது – மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| **87** | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் -வார்டு எண் 27-அவிநாசி சாலை மாநகராட்சி வணிக வளாகம் -தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (நகர பிரிவு ) அலுவலக கட்டிடம் கட்டுதல் -மதிப்பீடு ரூ. 25 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல்-தொடர்பாக |
| **88** | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண் 27-அவிநாசி சாலை மாநகராட்சி வணிக வளாகம் - தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (பராமரிப்புப் பிரிவு) அலுவலக கட்டிடம் கட்டுதல் -மதிப்பீடு ரூ. 25 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல்-தொடர்பாக |
| **89** | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - அவிநாசி சாலை – மின்கம்பங்களுடன் கூடிய தெரு விளக்குகள் அமைத்தல் பணி- மதிப்பிடு ரூ. 25 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல்-தொடர்பாக |
| **90** | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - அவிநாசி சாலை – மின்கம்பங்களுடன் கூடிய தெரு விளக்குகள் அமைத்தல் பணி- மதிப்பிடு ரூ. 25 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல்-தொடர்பாக |
| **91** | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - அவிநாசி சாலை – மின்கம்பங்களுடன் கூடிய தெரு விளக்குகள் அமைத்தல் பணி- மதிப்பிடு ரூ. 25 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல்-தொடர்பாக |
| **92** | பொது சுகாதாரப் பிரிவு - வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களின் பட்டியல் - மாமன்றம் பதிவு செய்தல் - தொடர்பாக |
| **93** | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - அவிநாசி சாலை – மின்கம்பங்களுடன் கூடிய தெரு விளக்குகள் அமைத்தல் பணி- மதிப்பிடு ரூ. 25 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல்-தொடர்பாக |

| | |
|---|---|
| **94** | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - அவிநாசி சாலை – மின்கம்பங்களுடன் கூடிய தெரு விளக்குகள் அமைத்தல் பணி- மதிப்பிடு ரூ. 25 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல்-தொடர்பாக |
| **95** | பொறியியல் பிரிவு - மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான கவுண்டம்பாளையம் உரக்கிடங்கு மைதானம் -உயர்நிலைப்பள்ளி (கிழ மேற்கு) கட்டிடம் கட்டுதல் பணி மதிப்பீடு ரூ. 25 இலட்சம் நிர்வாக அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **96** | பொறியியல் பிரிவு - மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான கவுண்டம்பாளையம் உரக்கிடங்கு மைதானம் -உயர்நிலைப்பள்ளி (தென்வடல்) கட்டிடம் கட்டுதல் பணி மதிப்பீடு ரூ. 25 இலட்சம் நிர்வாக அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **97** | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் -மண்டல அலுவலகம் - இரண்டாம் தளத்தில் கூடுதலாக அலுவலக கட்டிடம் கட்டுதல் பணி- மதிப்பீடு ரூ. 25 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **98** | பணியமைப்பு -பெண் மருத்துவ அலுவலர் பணியிடங்கள் நிரப்புதல்- மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| **99** | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு 33-டாடாபாத் ஆரம்பப்பள்ளி கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் பணி – மதிப்பீடு ரூ. 25 இலட்சம் -நிர்வாக அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| **100** | பணியமைப்பு -உதவி பொறியாளர்கள் பணியிடங்கள் நிரப்புதல்- மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| **101** | மேற்கு மண்டலம் -நகரமைப்புப் பிரிவு -பாரதி மெட்ரிக் பள்ளி -15.89 மீட்டர் உயர கட்டிடம் - பலமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக. |
| **102** | தெற்கு மண்டலம் -நகரமைப்புப் பிரிவு -வார்டு எண் 25- ரேஸ்கோர்ஸ் சாலை- நகரளவு எண் 947/1 , 948/1,2 –பலமாடி வணிக கட்டிடம் பகுதியாக அறிவிப்பு செய்தல் -மாமன்றம் முடிவு செய்தல்-தொடர்பாக |
| **103** | தெற்கு மண்டலம் -வார்டு எண் 40- உக்கடம் பேருந்து நிலையம் - மராமத்து பணி மற்றும் அபிவிருத்திப் பணிகள் செய்தல் - மதிப்பீடு ரூ. 25 இலட்சம் -நிர்வாக அனுமதி கோருதல் -தொடர்பாக |

**இணைப்பு -3**

**நன்றியுரை**

## திருக்குறள்

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

(குறள் -479)

## விளக்கம்

இருப்பது, இயற்றக்கூடியது, இனியும் ஈட்டக்கூடியது ஆகியவற்றின் அளவு அறிந்து செயல்திட்டங்களை வகுத்துக் கொள்ளாவிட்டால், வலிமையோ அல்லது வளமோ இருப்பதுபோல் தோன்றினாலும்கூட இல்லாமல் மறைந்து போய்விடும்.

திருவள்ளுவர்.

---

## ஆ. தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய/குடிமகளாகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் சமூக வேற்றுமையை, மனம்,வாக்கு,செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதி அளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சாதி, சமய வேறுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும். மேலும், தீண்டத்தகாதவர்கள் என்ற கொடுமைக்கு ஆளாகியுள்ள மக்களிடையே காணப்படும் தீண்டாமை உணர்வையும் போக்குவது நமது சமூகக் கடமை என்பதையும் உணர்ந்து செயல்படுவேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப் பற்றிற்கும் இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

---

பொருள் எண் 1

கோவை மாநகராட்சி பள்ளிகளுக்கு தேவையான பெஞ்ச், டெஸ்க் போன்ற தளவாட சாமான்கள் வாங்குவதற்கு நான்கு மண்டலங்களுக்கும் உரிய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு மாமன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டு மாமன்றத்தின் தீர்மானத்தின்படி ஒப்பந்தப்புள்ளிகள் 14.12.2007 அன்று கோரப்பட்டன.

| வ. எண் | கோப்பு எண் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | மண்டலத்தின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிட்டுள்ள சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | 17366/07/ எம்டி2 | 22.75 | வடக்கு | தி/ள்.காரைக்குடிகார்ப்பென்டரி ப்ளாக்ஸ்மித் மல்டிபர்பஸ் இன்டஸ்ட்ரியல்ஸ் யூனிட் காரைக்குடி சிவகங்கை மாவட்டம் | 15.03 குறைவு |
| 2 | 17367/07/ எம்டி2 | 21.00 | கிழக்கு | தி/ள்.காரைக்குடிகார்ப்பென்டரி ப்ளாக்ஸ்மித் மல்டிபர்பஸ் இன்டஸ்ட்ரியல்ஸ் யூனிட் காரைக்குடி சிவகங்கை மாவட்டம் | 15.05 குறைவு |
| 3 | 15894/07/ எம்டி4 | 24.00 | மேற்கு | தி/ள்.காரைக்குடிகார்ப்பென்டரி ப்ளாக்ஸ்மித் மல்டிபர்பஸ் இன்டஸ்ட்ரியல்ஸ் யூனிட் காரைக்குடி சிவகங்கை மாவட்டம் | 15.03 குறைவு |
| 4 | 15893/07/ எம்டி4 | 19.75 | தெற்கு | தி/ள்.காரைக்குடிகார்ப்பென்டரி ப்ளாக்ஸ்மித் மல்டிபர்பஸ் இன்டஸ்ட்ரியல்ஸ் யூனிட் காரைக்குடி சிவகங்கை மாவட்டம் | 15.00 குறைவு |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு ஆய்வு செய்து மேற்கண்ட நிறுவனம் மட்டுமே தகுதியானது என கண்டறியப்பட்டு திருவாளர்கள் காரைக்குடி கார்ப்பென்டரி பிளாக் ஸ்மித் மல்டிபர்பஸ் இன்டஸ்டிரியல் யூனிட் காரைக்குடி , சிவகங்கை மாவட்டம் அவர்களது ஒப்பந்தப்புள்ளியை ஏற்க 31.03.2008 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு கூட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டது. இதன் தொடர்ச்சியாக மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்ய கல்விக்குழுவின் அனுமதி வேண்டி கல்விக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டது.

கல்விக்குழு தனது தீர்மான எண்கள் 5,6,4,3 நாள் 10.04.2008ல் கல்விக்குழு நேரில் சென்று ஆய்வு செய்த பிறகு இப்பொருள் பரிசீலிக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 12.06.2008 நாளிட்ட கல்விக்குழுத் தலைவர் ஒப்புதலிட்ட குறிப்பில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

“காரைக்குடி, தி/ள். காரைக்குடி கார்பென்டரி பிளாக்ஸ்மித் மல்டிபர்பஸ் இன்டஸ்ட்ரியல் யூனிட், கல்விக்குழுத் தலைவர், உறுப்பினர்கள், மாநகராட்சி கல்வி அலுவலர் மற்றும் மாநகராட்சி உதவி நிர்வாகப் பொறியாளர் ஆகியோரால் நேரடியாக 24.04.2008 அன்று ஆய்வு செய்யப்பட்டது. மேற்படி நிறுவனத்தில் தேவையான கட்டமைப்பு வசதிகள் குறைவாக உள்ளதும், போதுமான அளவு பணியாளர் இல்லாததும் கண்டறியப்பட்டது. மேற்காண் காரணங்களால் குறிப்பிட்ட நிறுவனத்தால் தேவையான தளவாட பொருட்களை உரிய தரத்தில், உரிய காலத்திற்குள் விநியோகம் செய்ய இயலாது எனக் கருதுவதாலும் தமிழக சட்டமன்றத்தில் மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் அவர்களால் அரசுப் பள்ளிகள் மற்றும் நிறுவனங்களுக்கு தேவையான தளவாடப் பொருட்களை அரசு நிறுவனமான டான்சி மூலம் வாங்க தெரிவித்துள்ளதாலும், 6.6.2008 அன்று கல்விக்குழுத் தலைவர் தலைமையில் மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற கல்விக்குழு கூட்டத்தில் தரமான தளவாடப் பொருட்களை உரிய காலத்திற்குள் டான்சி நிறுவனம் மூலம் வாங்கலாம் என கருத்து தெரிவிக்கப்பட்டது. மேற்படி பொருள் சார்ந்து மாமன்றம் தீர்மானிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது”.

எனவே மேற்படி பொருள் குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :
மாமன்றத்தின் பரிசீலனைக்கும் ஒப்புதலுக்கும் ந.க.எண். 17366/07/எம்டி2

மா.ந.ம.தீர்மானம் எண் : 129 நாள் : 29.08.2008

திரு/ள். காரைக்குடி கார்ப்பென்ட்ரி ப்ளாக்ஸ்மித் மல்டிபர்பஸ் இன்டஸ்ட்ரியல்ஸ் யூனிட், காரைக்குடி, சிவகங்கை மாவட்டம் அவர்களது ஒப்பந்தப் புள்ளியை ரத்து செய்ய தீர்மானிக்கப்பட்டது. நான்கு மண்டலங்களிலும் உள்ள மாநகராட்சி பள்ளிகளுக்குத் தேவையான பென்ஞ், டெஸ்க் போன்ற தளவாட சாமான்களை டான்சி நிறுவனத்திடமிருந்து வாங்கவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 2

கோவை மாநகராட்சி – வடக்கு மண்டலம்–பொறியியல் பிரிவு எண்.3 வார்டு எண். 32 சங்கனூர் பள்ளத்தின் குறுக்காக காந்திபுரம் 5வது வீதி தொடர்ச்சி மற்றும் கணேஷ் நகரை இணைத்து ஆர்.சி.சி. பாலம் கட்ட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.25,00,000/–க்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி கோருதல்.

மேற்படி பகுதியில் பாலம் கட்ட கோரி வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் கடிதம் கொடுத்துள்ளார்கள். இதனை உதவி நிர்வாக பொறியாளர் நேரில் ஆய்வு செய்து வழங்கப்பட்ட அறிவுரையின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.25,00,000/–க்கு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதி அளிக்கலாம். ந.க.எண். 06623/08/எம்டி2

மா.ந.ம.தீர்மானம் எண் : 130 நாள் : 29.08.2008

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. கட்டப்படவுள்ள பாலம் வார்டு எண். 69 மற்றும் 32-ல் அமைகிறது என்பதனைப் பதிவு செய்யப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 3

கோவை மாநகராட்சி – வடக்கு மண்டலம்–பொறியியல் பிரிவு எண்.5 வார்டு எண். 65ல் ரயில்வே மென்ஸ் காலனி முதல் நல்லாம்பாளையம் சாலை ரயில்வே நுழைவு பாலம் வரை மழைநீர் வடிகால் வசதி இல்லாததால், இவ்வார்டு மாமன்ற உறுப்பினர் கேட்டுக் கொண்டதற்கு இணங்கவும், அவசியம் கருதி மழைநீர் வடிகால் கட்டுதல் பணிக்கு மதிப்பீடு ரூ.25,00,000/–க்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்காண் பணிக்கான மதிப்பீட்டு தொகைக்கு நிர்வாக பொறியாளரால் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் இப்பணிக்கான மதிப்பீட்டிற்கு 2008–09ம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:அனுமதி அளிக்கலாம். ந.க.எண். 4580/08/எம்டி2

மா.ந.ம.தீர்மானம் எண் : 131 நாள் : 29.08.2008

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 4

கோவை மாநகராட்சி – கிழக்கு மண்டலம்– வார்டு எண். 14க்கு உட்பட்ட கண்ணபிரான் ரோடு அருகில் கிருஷ்ணசாமி பள்ளத்தில் தடுப்புச்சுவர் அமைத்தல் பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.24,60,000/–க்கு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.

இப்பணிக்கான மதிப்பீடு நடப்பு 2008–09ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால் இப்பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம். ந.க.எண்.15343/07/எம்டி2

மா.ந.ம.தீர்மானம் எண் : 132 நாள் : 29.08.2008

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 5

கோவை மாநகராட்சி – கிழக்கு மண்டலம்– வார்டு எண். 26ல் உள்ள காமராஜர் சாலையின் மேற்குபுறம் சிமெண்ட் கற்கள் நடைபாதை மற்றும் கான்கிரீட் தடுப்புச்சுவர் அப்துல் ரஹீம் சாலை முதல் (சர்க்யூட் ஹவுஸ் சாலை) அவிநாசி சாலை வரை அமைக்க மதிப்பீடு ரூ.24,00,000/– க்கு தயாரிக்கப்பட்டது.

இப்பகுதியிலுள்ள நடைபாதை மற்றும் வடிகால் மிகவும் பழுதடைந்து பொது மக்களின் அன்றாட நடைபயணத்திற்கு தடையாக இருப்பதாலும் இதுகுறித்து இப்பகுதி மாமன்ற உறுப்பினர் விண்ணப்பித்துள்ளதாலும் உதவி நிர்வாக பொறியாளர்/கிழக்கு அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு அவசர அவசியத்தைக் கருதி இம்மதிப்பீடு தயாரிக்கப்பட்டது.

இப்பணிக்கு 2007–08ஆம் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம். ந.க.எண்.10144/07/எம்டி2

**மா.ந.ம.தீர்மானம் எண் : 133 நாள் : 29.08.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 6

கோவை மாநகராட்சி – பிரிவு எண்.1 வடக்கு மண்டலம் – வார்டு எண்.3க்குட்பட்ட பீளமேடு இன்டஸ்ட்ரியல் எஸ்டேட் மற்றும் லட்சுமி கார்டன் பகுதியில் கற்சாலை அமைத்துத் தருமாறு இப்பகுதி மாமன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்கள் கோரியுள்ளனர்.

இப்பணிக்கு ரூ.24,80,000/–க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 4968/08/எம்டி2

**மா.ந.ம.தீர்மானம் எண்: 134 நாள் : 29.08.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 7

கோவை மாநகராட்சி – கிழக்கு மண்டலம் பிரிவு எண்.2 – வார்டு எண்.9ல் உள்ள தச்சன்தோட்டம் மற்றும் அங்கம்மாள் லே அவுட் பகுதிக்கிடையே உள்ள மழைநீர் வடிகால் மற்றும் கழிவுநீர் கால்வாய் தூர் எடுத்து புதிதாய் கான்கிரீட் மூலம் கால்வாய் அமைத்தல் மற்றும் சிறு பாலங்கள் அமைக்கும் பணிக்கு ரூ.25,00,000/–க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்படி பணியை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.25,00,000/–க்கு அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 7099/08/எம்டி2

**மா.ந.ம.தீர்மானம் எண்: 135 நாள் : 29.08.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 8

கோவை மாநகராட்சி - வடக்கு மண்டலம் - பொறியியல் பிரிவு எண்.4, வார்டு எண்.31ல் உள்ள கோகுலே வீதியில் தார்தளம் புதுப்பித்தல் பணிக்கு மாமன்ற உறுப்பினரின் வேண்டுகோளின்படி ரூ17,70,000க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்படி, இப்பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 04388 / 2008 / எம்.டி.2

**மா.ந.ம.தீர்மானம் எண் : 136 நாள் : 29.08.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 9

கோவை மாநகராட்சி பகுதிகளில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப் புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிட்டுள்ள சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 20304/07/ எம்டி2 | கிழக்கு மண்டலத்தில் உள்ள மாநகராட்சி பள்ளிகளுக்கு பாதுகாக்கப் பட்ட குடிநீர் வழங்கும் சாதனங்கள் பொருத்துதல் பணி (கல்விக்குழு மாமன்றத்திற்கு இப்பணியினை ஏற்க பரிந்துரை செய்துள்ள தீர்மான எண்.6 நாள்.6.6.08) | 21.00 | 30.04.08 முதல் அழைப்பு | தி/ள். செந்தில் & கோ | 0.05 குறைவு |
| 2 | 12376/07/ எம்டி2 | வார்டு எண்.16ல் பீளமேடு புதூரில் உள்ள பழைய பழுதடைந்த பொதுக் கழிப்பிடக் கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதிய கட்டிடம் கட்டுதல் | 6.75 | 27.05.08 இரண்டாம் அழைப்பு | திருமதி. கே.ரேணுகா தேவி | 4.96 அதிகம் |
| 3 | 153/08/ எம்டி2 | வார்டு எண்.11 வரதராஜபுரம் உயர்நிலைப் பள்ளியில் உள் விளையாட்டு அரங்கம் கட்டுதல் | 11.50 | 27.05.08 முதல் அழைப்பு | தி/ள். எம்.எஸ்.இன் ஜினியர்ஸ் | 4.04 அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: வ.எண்.1–ல் உள்ள பணியின் மதிப்பீடு மாமன்ற அனுமதி வரம்பிற்குள் வருவதாலும் வ.எண்.2 மற்றும் 3ல் உள்ள பணிகள் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப் புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும், அனுமதிக்கலாம். ந.க.எண்.20304/07/எம்டி2.

**மா.ந.ம.தீர்மானம் எண் : 137 நாள் : 29.08.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 10**

கோவை மாநகராட்சி - வடக்கு மண்டலம் - பொறியியல் பிரிவு எண்.4, வார்டு எண்.31ல் உள்ள கோகுலே வீதியில் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் திரும்பக்கட்டி மூடுபலகை அமைக்கும் பணிக்கு மாமன்ற உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளின்படி ரூ22,50,000/-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி, இப்பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.03840 / 2008 / எம்.டி.2

**மா.ந.ம.தீர்மானம் எண் : 138 நாள் : 29.08.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 11**

கோவை மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - வார்டு எண்.6, கே.பி.ஆர் லே அவுட் பகுதியில் தார்தளம் புதுப்பித்தல் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ17,50,000/-க்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.5974 / 2008 / எம்.டி.2

**மா.ந.ம.தீர்மானம் எண் : 139 நாள் : 29.08.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 12**

கோவை மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - வார்டு எண்.4, காவேரி நகர், ஒண்டிப்பதூர் பகுதியில் உள்ள தார் சாலைகளை புதுப்பித்தல் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கான மதிப்பீடு ரூ17,50,000/-க்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 5976 / 2008 / எம்.டி.2

**மா.ந.ம.தீர்மானம் எண் : 140 நாள் : 29.08.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 13**

கோவை மாநகராட்சி பிரதான அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள குடிநீர் தொட்டியின்கீழ் தற்பொழுது மின் வாரியத்தினரால் உபயோகத்தில் உள்ள கட்டிடத்தின் முதல்தளம் தற்பொழுது காலியாக உள்ளது. காலியாக உள்ள முதல் தளக்கட்டிடத்தை அனைத்து இந்திய உள்ளாட்சி அமைப்புகளுக்கான (All India Institute of Local Self Government) நிறுவனத்தினரால் பார்வையிடப்பட்டது. பார்வையிடப்பட்ட மேற்படி நிறுவனத்தினர், தங்களது கிளை அலுவலகம் அமைக்க இவ்விடம் தகுதியாக உள்ளதாகவும், மேற்படி முதல் தளத்தை தங்களுக்கு வாடகைக்கு தருமாறும், தங்களது கடிதத்தின் மூலம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

மேற்படி முதல் தளத்தை பொதுப்பணித்துறையின் தற்போதைய விலை விகிதத்தின்படி சதுரஅடிக்கு ரூ15.76 என மாத வாடகையாக மதிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி முதல் தளத்தை சதுரஅடிக்கு ரூ15.76/- என மாதவாடகையாக நிர்ணயம் செய்யவும், மேற்படி தளத்தை மேற்படியாருக்கு மாத வாடகை அடிப்படையில் ஒப்படைப்பு செய்யவும் மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது. மேலும் இந்நிறுவனம் கீழ்க்கண்ட இடங்களில் வாடகைக்கு எடுத்து பணி செய்து கொண்டுள்ளனர். கொச்சி நகராட்சியில் 4864.81 சதுரஅடி மாதவாடகையாக ரூ 5,363/- இரண்டு ஆண்டிற்கும், திருவனந்தபுரத்தில் ரூ.5.00/- லட்சம் டெப்பாசிட்டுடன் மூன்றாண்டுகளுக்கும் மாதவாடகை ரூ25,000-மும், பெங்களூர் மாநகராட்சியில் 2708 சதுரடி வருட உயர்வு 10% வீதம் மாத வாடகை ரூ 5,000-மும், புவனேஸ்வரில் மாதவாடகை ரூ1,000/- வீதம் காப்பு தொகை ரூ20,000/-மும், நாசிக் மாநகராட்சியில் 1900 சதுரடி மாத வாடகை ரூ 5,000/-மும், விசாகபட்டினத்தில் 1550 சதுரஅடி மாத வாடகை ரூ.5,000/-மும், மும்பையில் 1726.14 சதுரடி Joint Project ஆக செய்து வருகின்றார்கள். கோவை மாநகராட்சியில் 4830 சதுரடி பரப்பிற்கு மாதவாடகை நிர்ணயம் ரூ.76,146/- செய்யப்பட்டுள்ளது. மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றத்தின் முடிவிற்கு ந.க.எண்.4623 / 08/ எம்.டி.4

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 141 நாள் : 29.08.2008</u>

விண்ணப்பதாரரின் கோரிக்கையினை நிராகரிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 14

கோவை மாநகராட்சி – தெற்கு மண்டலத்தைச் சார்ந்த வார்டு 39 மற்றும் 40க்குட்பட்ட வின்செண்ட் சாலையில் ஏற்கனவே உள்ள 10 குடிநீர் பொதுக்குழாய்கள் தென்புறமாக உள்ளதை தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்புகள் இடிக்கப்பட்டதால், மேற்படி பொதுக்குழாய்களை வடபுறமாக மாற்றியமைக்க மாமன்ற உறுப்பினர் கடிதம் கொடுத்துள்ளார். அதன் பேரில் தெற்கு மண்டல வார்டு குழு கூட்டத்தில் தீர்மான எண்.104 நாள்.29.04.08ல் அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே தென்புறமாக உள்ள 10 குடிநீர் பொதுக்குழாய்களை சாலையின் எதிர்புறம் மாற்றியமைக்க பிரதான அலுவலக மாமன்ற கூட்டத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம். ந.க.எண்.4077/08/எம்டி4

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 142 நாள் : 29.08.2008</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 15

கோவை மாநகராட்சி – தெற்கு மண்டலம் பிரிவு எண். II - வார்டு எண். 27 அவினாசி சாலையிலுள்ள மாநகராட்சி வணிக வளாகத்தில் புதிதாக கட்டப்பட்டு வரும் பாஸ்போர்ட் (Passport) அலுவலகத்திற்கு தங்கு தடையின்றி மின்சாரம் வழங்குவதற்கும் லிப்ட் அறை தடையில்லாமல் செயல்படவும் வேண்டி டீசல் ஜெனரேட்டர் மற்றும் பேனல் போர்டு பொருத்துவதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.25,00,000/– க்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம். ந.க.எண்.6917/08/எம்டி4

**மா.ந.ம.தீர்மானம் எண் : 143 நாள் : 29.08.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 16

கோவை மாநகராட்சி- மேற்கு மண்டலம்- பிரிவு எண் 1 வார்டு எண் 49 திருவேங்கடசாமி சாலையில் வடக்கு பக்கத்தில் மேட்டுபாளையம் சாலை முதல் மேற்காக சிமென்ட் கான்கிரிட் நடைபாதை அமைத்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.25,00,000/க்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு-அனுமதிக்கலாம் ந.க.எண் 4038 /08/ MD4

**மா.ந.ம.தீர்மானம் எண் : 144 நாள் : 29.08.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 17

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண் 36-க்குட்பட்ட புரூக்பாண்ட் சாலை, S.L.M,Home மாநகராட்சி பிரசவ விடுதியில் தரைத்தளம் 'B' பகுதி கட்டிடம் கட்டுதல் பணிக்கு மதிப்பீடு ரூ.25,00,000/-க்கு தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே இம்மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு-அனுமதிக்கலாம் ந.க எண் 7869 /08/ MD4

**மா.ந.ம.தீர்மானம் எண் : 145 நாள் : 29.08.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 18

கோவை மாநகராட்சி – வடக்கு மண்டலம் – பிரிவு எண்.6 – இரத்தினபுரி மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களுக்கு கூடுதலாக கழிப்பிடம், காவலர் அறை மற்றும் சுற்றுச்சுவர் உயர்த்தி கட்டித் தருமாறு மாமன்ற உறுப்பினர் அவர்கள் மற்றும் தலைமை ஆசிரியர் அவர்கள் கடிதம் கொடுத்துள்ளார்கள்.

இதன்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.25,00,000/–த்திற்கு நிர்வாகப் பொறியாளர் அவர்களிடம் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. இம்மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.9613/08/எம்டி2

**மா.ந.ம.தீர்மானம் எண் : 146 நாள் : 29.08.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள பள்ளி 68-வது வார்டில் அமைந்துள்ளது என்பதனைப் பதிவு செய்யப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 19

கோவை மாநகராட்சி பகுதிகளில் கீழ்க்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க 19.05.08 மற்றும் 13.06.08 அன்று பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 18731/07/ எம்டி4 | வார்டு எண்.27 அவினாசி சாலை மாநகராட்சி வணிக வளாகத்தில் அமைய உள்ள பாஸ்போர்ட் அலுவலகத்தின் மேற்குப் பகுதியில் உள் கட்டமைப்பு பணி செய்தல் | 24.80 | 06.05.08 முதல் அழைப்பு | திருமதி. சாந்திசுகா | 1.23 குறைவு |
| 2 | 18732/07/ எம்டி4 | வார்டு எண்.27 அவினாசி சாலை மாநகராட்சி வணிக வளாகத்தில் அமைய உள்ள பாஸ்போர்ட் அலுவலகத்தின் வடக்குப் பகுதியில் உள் கட்டமைப்பு பணி செய்தல் | 24.70 | 06.05.08 முதல் அழைப்பு | திருமதி. சாந்திசுகா | 0.41 குறைவு |
| 3 | 17362/07/ எம்டி4 | வார்டு எண்.45 ரங்கே கவுடர் வீதியில் வணிக வளாகம் கட்டுதல் | 20.00 | 13.06.08 முதல் அழைப்பு | தி/ள். கேசிபி இன்ஜினியர்ஸ் & ஃபேபரிகேட்டர்ஸ் | 4.99 அதிகம் |
| 4 | 15957/07/ எம்டி4 | வார்டு எண்.27 காளீஸ்வரா நகரில் அலுவலர் குடியிருப்பு பி – பிளாக்–ல் முதல் தளம் கட்டுதல் | 20.00 | 13.06.08 மூன்றாம் அழைப்பு | தி/ள். கேசிபி இன்ஜினியர்ஸ் & ஃபேபரிகேட்டர்ஸ் | 4.99 அதிகம் |
| 5 | 15956/07/ எம்டி4 | வார்டு எண்.27 காளீஸ்வரா நகரில் அலுவலர் குடியிருப்பு ஏ – பிளாக் தரை தளம் கட்டுதல் | 20.00 | 13.06.08 மூன்றாம் அழைப்பு | தி/ள். கேசிபி இன்ஜினியர்ஸ் & ஃபேபரிகேட்டர்ஸ் | 4.99 அதிகம் |
| 6 | 16960/07/ எம்டி4 | வார்டு எண்.36 சீதாலட்சுமி மகப்பேறு மருத்துவமனைக்கு மருத்துவர் மற்றும் செவிலியர்களுக்கு குடியிருப்பு (தெற்கு பிளாக்) கட்டுதல் | 20.00 | 13.06.08 மூன்றாம் அழைப்பு | தி/ள். என்.பி.கே. அசோஸியேட்ஸ் | 4.08 அதிகம் |
| 7 | 14809/07/ எம்டி4 | வார்டு எண்.36 ப்ரூக்பாண்ட் சாலை சீதாலட்சுமி மகப்பேறு மருத்துவமனையில் பிரசவ விடுதியை நவீன வசதிகளுடன் மேம்படுத்த தரைதள கட்டிடம் கட்டுதல். | 25.00 | 13.06.08 மூன்றாம் அழைப்பு | தி/ள். என்.பி.கே. அசோஸியேட்ஸ் | 4.49 அதிகம் |
| 8 | 19745/07/ எம்டி4 | வார்டு எண்.28 காந்திபுரம் நகர பேருந்து நிலையத்தில் தகவல் மையம் கட்டுதல் | 10.00 | 13.06.08 முதல் அழைப்பு | தி/ள். கேசிபி இன்ஜினியர்ஸ் & ஃபேபரிகேட்டர்ஸ் | 4.97 அதிகம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9 | 12511/07/ எம்டி4 | வார்டு எண்.36 தேவாங்க பேட்டை மாநகராட்சி ஆரம்ப பள்ளிக் கட்டிடத்தின் முதல் தளத்தில் பழுதான ஏ.சி.சீட் கூரையை ஆர்சிசி கூரையாக மாற்றி அமைத்தல் | 14.80 | 13.06.08 மூன்றாம் அழைப்பு | திரு.என். குருவாயூரப்பன் | 4.90 அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: வரிசை எண். 1 முதல் 2 வரை உள்ள பணிகளின் மதிப்பீடு மாமன்ற அனுமதி வரம்பிற்குள் வருவதாலும் வரிசை எண்.3 முதல் 9 வரையிலான பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல்பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.18731/07/எம்டி4.

**மா.ந.ம.தீர்மானம் எண் : 147 நாள் : 29.08.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 20

மனுதாரர் திரு. சி. எஸ். இராமசாமி, கோயம்புத்தூர் என்பவர் தனது 13.6.2008 ம் நாளைய மனுவில் விளாங்குறிச்சி கிராமம், சர்வே எண். 383 / 1 ல் உள்ள 1.40 ஏக்கர் நிலத்தை பல அடுக்கு மாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்யக் கோரியுள்ளார்.

மனையிடம் சிங்காநல்லூர் விரிவு அபிவிருத்தித் திட்டம் எண். 8, மற்றும் முழுமைத் திட்டத்தின் படி குடியிருப்பு நில உபயோகப்பகுதியில் உள்ளது. மனைக்கு அணுகு சாலையாக 100' அகல உத்தேச திட்ட சாலையில் 30' அகல புழக்க சாலை உள்ளது. மேற்படி சாலையை விஸ்தரிக்கும் திட்டம் ஆய்வில் உள்ளது. மனுதாரின் மனையிடத்தில் சாலை விஸ்தரிப்பு இல்லை. மேற்படி மனையில் 28.0 மீட்டர் உயரத்திற்குள் பல அடுக்கு மாடி குடியிருப்புக் கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மனுவை நகர் ஊரமைப்பு ஆணையருக்கு அனுப்பலாம் என்று மாமன்ற கூட்டத்திற்கு பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- மாமன்றம் முடிவு செய்யலாம். ந.க. எண்.08322 / 2008 / எச்1 (வ)

**மா.ந.ம.தீர்மானம் எண் : 148 நாள் : 29.08.2008**

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள மனைக்கு அணுகுசாலையாக உள்ள 100' அடி அகல உத்தேச திட்டசாலை குறித்து கூடுதல் விபரம் தேவைப்படுவதால் முழு விபரங்களுடன் மீண்டும் மாமன்றத்தின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 21

பொருள்.கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம், வார்டு எண். 34, க.ச. எண். 548 – 2 பகுதி – தெலுங்குபாளையம் கிராமம் பகுதியில் உள்ள மனையிடத்தை குடியிருப்பு உபயோகத்திலிருந்து பல குடியிருப்புகள் கொண்ட பலமாடி கட்டிட பகுதியாக அறிவித்தல் தொடர்பாக.

* * *

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், வார்டு எண். 34, க.ச. எண். 54/ 2 பகுதி – தெலுங்குபாளையம் கிராமம் பகுதியில் 4047.73 ச.மீ பரப்புள்ள மனையிடத்தை குடியிருப்பு உபயோகத்திலிருந்து பல குடியிருப்புகள் கொண்ட 26 மீ உயரத்திற்குள் தரை மற்றும் 8 மாடிகள் கொண்ட பலமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்ய மனுதாரர் திரு. எஸ். ஜெயகுமார் என்பவர் விண்ணப்பித்துள்ளார்.

இம்மனையிடத்தில் திட்டச் சாலை ஏதும் அமையவில்லை. இதன் மொத்த அளவு 4047.73 சதுர மீட்டராகும். நிலையில் 60 அடி அகல என்.எஸ்.ஆர் சாலை அணுகு சாலையாக அமைந்துள்ளது. மனையின் முன்புறம் 117 அடி அகலம் கொண்டதாகவும் அமைந்துள்ளது. இதில் மனுதாரர் தரைத்தளம் மற்றும் எட்டு தளங்கள் கொண்ட கட்டிடத்தினை கட்ட உத்தேசித்துள்ளார்.

இது தொடர்பாக வட்டாட்சியர் தடையின்மை சான்று பெறப்பட்டுள்ளது. இம்மனையிடம் பலமாடிக் கட்டிடம் கட்ட ஏதுவாக அமைகிறது. எனவே 26 மீ உயரத்திற்குள் தரை மற்றும் 8 தளங்கள் கொண்ட குடியிருப்பு உபயோகக் கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிக்கக்கோரும் மேற்படி மனுவினை உள்ளூர் திட்டக் குழுமம் வாயிலாக நகர் ஊரமைப்பு இயக்குநருக்கு அனுப்பி வைக்க மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- அனுமதிக்கலாம். ந.க. எண். 5593 / 08 / எச்1 (மே)

**<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 149 நாள் : 29.08.2008</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 22

பொருள் - கடைகள் - கோயமுத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலத்திற்குட்பட்ட டாக்டர் நஞ்சப்பா சாலையில் உள்ள வணிக வளாகம் தளம் எண் 3-ல் உள்ள கடை ஒதுக்கீடு – தொடர்பாக.

-----------------

கோயமுத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட டாக்டர் நஞ்சப்பா சாலையில் உள்ள வணிக வளாகம் - தளம் எண். 3-ல் உள்ள கடை 2580 ச.அடி கொண்டது. இந்த கடையில் செயல்பட்டு வந்த காவல்துறை குற்றப்புலனாய்வுத்துறை தற்போது காலி செய்துவிட்டதால், இதனை ஒதுக்கீடு கோரி தமிழ்நாடு டெக்ஸ்டைல் கழகம் மனு செய்துள்ளது.

மேற்கண்ட கடையினை பொதுப்பணித்துறையினரால் நிர்ணயம் செய்யப்பட்ட ஒரு சதுர அடிக்கு ரூ.2.80 என்ற விகிதத்தில் 2580 ச.அடிக்கு ரூ. 7224/- க்கு மாத வாடகையாக தமிழ்நாடு டெக்ஸ்டைல் கழகத்திற்கு ஒதுக்கீடு செய்ய மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண் 5608 /2008 /அ 10

**<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 150 நாள் : 29.08.2008</u>**

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 23

கோவை மாநகராட்சி பகுதிகளில் கீழ்க்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க 19-05-2008 மற்றும் 06-06-2008 அன்று பரிந்துரை செய்துள்ளது.

| வ. எ ண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூபாய் இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிட்டு உள்ள சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | 19382/07/ MD4 | வார்டு எண் 41, உக்கடம் மீன்மார்க்கெட்டில் குளிர் சாதன வசதி கிடங்கு அமைத்தல் | 22.70 | 06-05-2008 முதல் அழைப்பு | தி/ள் புவனா கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 0.017 குறைவு |
| 2. | 19383/07/ MD4 | வார்டு எண் 41, உக்கடம் மீன்மார்க்கெட்டில் குளிர் சாதன வசதி கிடங்கு அமைத்தல் | 25.00 | 06-05-2008 முதல் அழைப்பு | தி/ள் புவனா கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 0.16 குறைவு |
| 3 | 15083/07/ MD4 | வார்டு எண்.27, வ.உ.சி. பூங்காவில் உள்ள நீருற்றுகளில் நடைபாதை பாலம் கட்டுதல் மற்றும் நீருற்றுக்கு அழகு படுத்தும் பணி செய்தல் | 24.75 | 06-05-2008 முதல் அழைப்பு | தி/ள் சென்னை லைட்டிங்ஸ் | 0.58 குறைவு |
| 4. | 717/08/ MD4 | நஞ்சுண்டாபுரம் பம்பிங் ஸ்டேசனில் ஆழ்குழாய் கிணற்றை ஆழப்படுத்தி நுண் கிருமி கலவை தெளித்தல் | 4.00 | 22-4-2008 முதல் அழைப்பு | தி/ள் சப்தகிரி போர்வெல்ஸ் | 0.12 அதிகம் |
| 5. | 18104/07/ MD4 | வார்டு எண் 28 காந்திபுரம் நகரப் பேருந்து நிலையத்தை நவீனப்படுத்தி மராமத்து பணிகள் செய்தல் | 25.00 | 28-05-2008 மூன்றாம் அழைப்பு | தி/ள் கே.சி.பி. இன்ஜினியர்ஸ் அண்ட் பேப்ரிகேட்டர்ஸ் | 4.76 அதிகம் |
| 6. | 4845/07/ MD4 | வார்டு எண் 42 பேரூர் மெயின் ரோட்டில் காட்டேரி தோட்டம் முதல் சலிவன் வீதி வரை பாதாள சாக்கடை குழாய் அமைத்தல் | 4.70 | 22-2-2008 இரண்டாம் அழைப்பு | தி/ள் குருவாயூரப்பன் அண்ட் கம்பெனி | 4.90 அதிகம் |
| 7 | 7246/07/ MD4 | வார்டு எண் 40 சாமியார் புது வீதி எண்.1ல் சமுதாய கூடம் கட்டுதல் | 6.90 | 06-05-2008 முதல் அழைப்பு | திரு.கே. கோவிந்தராஜ் | 3.54 அதிகம் |
| 8. | 10598/07/ MD4 | வார்டு எண் 43 உப்புமண்டி பகுதியில் உள்ள சாக்கடைகளுக்கு கான்கிரீட் மூடு பலகை அமைத்தல் | 5.00 | 22-04-2008 மூன்றாம் அழைப்பு | தி/ள் பி.செந்தில் அண்ட் கோ | 4.82 அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு ; வரிசை எண்.1 முதல் 3 வரை உள்ள பணிகளின் மதிப்பீடு மாமன்ற அனுமதி வரம்பிற்குள் வருவதாலும் வரிசை எண்.4 முதல் 8 வரையிலான பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும், அனுமதிக்கலாம்.

ந.க.எண். 19382/07/MD4

**மா.ந.ம.தீர்மானம் எண் : 151 நாள் : 29.08.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 24

கோவை மாநகராட்சி பகுதிகளில் கீழ்க்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க 18.07.08 அன்று பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 3839/08/ எம்டி4 | வார்டு எண்.62 கே.கே.புதூர் சாலை (தெற்குப்பகுதி) கணபதி லே–அவுட்டிலிருந்து சின்னம்மாள் வீதி வரை மழைநீர் வடிகால் கட்டுதல் | 16.50 | 28.05.08 முதல் அழைப்பு | திருமதி. சி. பாப்பாத்தி | 0.54 குறைவு |
| 2 | 4501/08/ எம்டி4 | வார்டு எண்.38 நவாப் ஹக்கீம் ரோட்டில் மழைநீர் வடிகால் திரும்பக் கட்டுதல் | 25.00 | 28.05.08 முதல் அழைப்பு | தி/ள். எம்.எஸ். இன்ஜினியர்ஸ் | 15.03 குறைவு |
| 3 | 4517/08/ எம்டி4 | வார்டு எண்.36 அண்ணா பூங்காவில் சுற்றுச்சுவர் கட்டுதல் மற்றும் அபிவிருத்திப் பணிகள் செய்தல் | 25.00 | 28.05.08 முதல் அழைப்பு | தி/ள். எம்.எஸ். இன்ஜினியர்ஸ் | 18.00 குறைவு |
| 4 | 2423/08/ எம்டி4 | வார்டு எண்.34 ஜவஹர் நகர் மற்றும் நெசவாளர் காலனியில் மறு தார்தளம் அமைத்தல் | 17.00 | 28.05.08 முதல் அழைப்பு | திரு. பீ.சுனில்குமார் | 10.08 குறைவு |
| 5 | 4352/08/ எம்டி4 | வார்டு எண்.50 தமிழ்நாடு விவசாயப் பல்கலைக்கழக வளாகத்தில் மழைநீர் வடிகால் கட்டுதல் | 23.00 | 28.05.08 முதல் அழைப்பு | தி/ள். எம்.எஸ். இன்ஜினியர்ஸ் | 0.41 குறைவு |
| 6 | 3970/08/ எம்டி4 | வார்டு எண்.59 மருதமலை ரோடு லிங்கனூர் பாலம் அருகிலுள்ள பள்ளத்திற்கு தடுப்புச்சுவர் கட்டுதல் | 24.00 | 28.05.08 முதல் அழைப்பு | தி/ள். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் & பேப்ரிகேட்டர்ஸ் | 0.56 குறைவு |
| 7 | 2420/08/ எம்டி4 | வார்டு எண்.34 மேட்டுப் பாளையம் சாலையில் அவினாசிலிங்கம் கல்லூரி முதல் என்.எஸ்.ஆர்.ரோடு வரை மழைநீர் வடிகால் திரும்பக் கட்டுதல். | 22.00 | 28.05.08 முதல் அழைப்பு | தி/ள். பி.செந்தில் & கோ | 0.43 குறைவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 8 | 3529/08/ எம்டி4 | வார்டு எண்.60 தவசி நகர் பொது ஒதுக்கீட்டு இடத்தில் பூங்கா அமைத்தல் மற்றும் சுற்றுச்சுவர் கட்டுதல் | 25.00 | 28.05.08 முதல் அழைப்பு | திருமதி.யு. மணி | 0.73 குறைவு |
| 9 | 3173/08/ எம்டி4 | வார்டு எண்.63 என்.எஸ்.ஆர் சாலையின் வடக்குப் புறத்தில் 7வது வீதியில் இருந்து கிழப்புறமாக பாலசுப்ரமணியம் நகர் வரை மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் நடைபாதை அமைத்தல் | 25.00 | 28.05.08 முதல் அழைப்பு | தி/ள். எம்.எஸ். இன்ஜினியர்ஸ் | 29.49 குறைவு |
| 10 | 3969/08/ எம்டி4 | வார்டு எண்.58 எஸ்.எம். மருதாசலம் வீதி எண்.1, 2, கோபால் தோட்டம், ராஜன் காலனி, பாரதியார் வீதி, லட்சுமி நகர் விரிவு பகுதிகளில் மெட்டல் சாலை அமைத்தல் | 16.00 | 28.05.08 முதல் அழைப்பு | திரு.ஆர். செல்வராஜ் | 22.48 குறைவு |
| 11 | 20795/07 / எம்டி4 | வார்டு எண்.37 துப்புரவாளர் காலனியில் உள்ள சமூகக் கூடத்திற்கு சமையலறை மற்றும் உணவருந்தும் அறை கட்டுதல் | 25.00 | 28.05.08 முதல் அழைப்பு | திரு.என். குருவாயூரப்பன் | 4.94 அதிகம் |
| 12 | 3911/08/ எம்டி4 | வார்டு எண்.40 பிரதான அலுவலகத்தில் உள்ள JNNURM திட்ட அலுவலகத்திற்கு லிப்ட் வசதி செய்தல் | 25.00 | 28.05.08 முதல் அழைப்பு | தி/ள். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் & பேப்ரிகேட்டர்ஸ் | 4.92 அதிகம் |
| 13 | 1171/08/ எம்டி4 | வார்டு எண்.40 பிரதான அலுவலகத்தில் உள்ள JNNURM திட்ட அலுவலகத்திற்கு தனியாக புதிய மாடிப்படி கட்டுதல் மற்றும் கூடுதல் அபிவிருத்திப் பணிகள் செய்தல் | 25.00 | 28.05.08 முதல் அழைப்பு | தி/ள். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் & பேப்ரிகேட்டர்ஸ் | 4.99 அதிகம் |
| 14 | 13081/07/ எம்டி4 | வார்டு எண்.64 மேட்டுப் பாளையம் சாலையிலுள்ள மொத்த காய்கறி மார்க்கெட்டினுள் உள்ள மைதானத்திற்கு மறு தார் தளம் அமைத்தல் | 20.00 | 10.07.08 இரண்டாம் அழைப்பு | திரு.ஏ. அம்மாசையப்பன் | 4.60 அதிகம் |
| 15 | 13082/07/ எம்டி4 | வார்டு எண்.64 மேட்டுப் பாளையம் சாலையிலுள்ள மொத்த காய்கறி மார்க்கெட்டினுள் மறு தார் தளம் அமைத்தல் | 20.00 | 10.07.08 இரண்டாம் அழைப்பு | தி/ள். கே.ஜி. லட்சுமிபதி & கோ | 4.62 அதிகம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 16 | 19112/07/ எம்டி4 | வார்டு எண்.49ல் உள்ள எஸ்.ஆர்.பி. அம்மணியம்மாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மாணவிகளுக்கு உணவு அருந்தும் அறை கட்டுதல் | 7.30 | 08.07.08 நான்காம் அழைப்பு | திரு.ஆர். மயில்வாணன் | 4.20 அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: வரிசை எண். 1 முதல் 10 வரை உள்ள பணிகளின் மதிப்பீடு மாமன்ற அனுமதி வரம்பிற்குள் வருவதாலும் வரிசை எண்.11 முதல் 16 வரையிலான பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல்பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண்3839/08/எம்டி4.

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 152 நாள் : 29.08.2008</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. பொருளில் வரிசை எண். 1, மழைநீர் வடிகால் கட்டுதல் பணியினை கோவில்மேடு சாலை முதல் கணபதி லேஅவுட் தெற்குப்பகுதி மற்றும் மணியம் காளியப்பா வீதி தெற்குப் பகுதி வரையிலும் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 25

கோவை மாநகராட்சி – வடக்கு மண்டலம்–பொறியியல் பிரிவு எண்.1 வார்டு எண். 3ல் உள்ள அவினாசி சாலையில் ஹோப் காலேஜ் ரயில்வே லைன் முதல் பி.கே.டி. நகர் வரை உள்ள மழைநீர் வடிகால் திரும்பக் கட்டுதல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.25,00,000/–க்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- அனுமதிக்கலாம். ந.க.எண்.04183/08/எம்டி2

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 153 நாள் : 29.08.2008</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 26

கோவை மாநகராட்சி - வெள்ளலூா் குப்பைக் கிடங்கில் மேற்குப் பகுதியில் மதிற்சுவா் கட்டுதல் பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 25,00,000/-க்கு தொழில் நுட்பஅனுமதி பெறப்பட்டுள்ளது. வெள்ளலூா் குப்பைக்கிடங்கின் மேற்குப்பகுதியில் மதிற்சுவா் இல்லாததால் சமூக விரோதிகள் அடிக்கடி குப்பைகளுக்கு தீவைத்து சுற்றுப்புற சூழல் கெடுகிறது. எனவே இப்பணி அவசியமாகிறது. எனவே இப்பணிக்கான மதிப்பீடு ரூ. 25,00,000/-க்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு- அனுமதிக்கலாம் ந.க.எண் 8804/08/MD 3

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 154 நாள் : 29.08.2008</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 27

கோவை மாநகராட்சி - வெள்ளலூா் குப்பைக் கிடங்கில் புதிதாக அமைக்கபட்ட கப்பி சாலை மீது தார்சாலை அமைத்தல் பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.25,00,000/-க்கு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. வெள்ளலூா் குப்பைக்கிடங்கில் குப்பை கொட்டுவதற்காக வாகனங்கள் செல்வதற்கு இச்சாலை அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறது. எனவே இப்பணிக்கான மதிப்பீடு ரூ. 25,00,000/-க்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு- அனுமதிக்கலாம் ந.க.எண் 9404/08/MD3

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 155 நாள் : 29.08.2008</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 28

கோவை மாநகராட்சி - வெள்ளலூா் குப்பைக் கிடங்கின் வடக்குப் பகுதியில் புதிதாக தார் சாலை அமைத்தல் பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 25,00,000/-க்கு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. வெள்ளலூா் குப்பைக் கிடங்கில் குப்பை கொட்டுவதற்காக வாகனங்கள் செல்வதற்கு இச்சாலை அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறது. எனவே இப்பணிக்கான மதிப்பீடு ரூ.25,00,000/-க்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு- அனுமதிக்கலாம் ந.க.எண் 8805/08/MD3

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 156 நாள் : 29.08.2008</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 29

பொருள் - கடைகள் - கோயமுத்தூா் மாநகராட்சி – தெற்கு மண்டலத்திற்குட்பட்ட காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம், காந்திபுரம் நகர பேருந்து நிலையம் மற்றும் உக்கடம் பேருந்து நிலையம் -தமிழ் புத்தகக் கடைகள் ஒதுக்கிடு – தொடா்பாக.

-----------

கோயமுத்தூா் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம், காந்திபுரம் நகர பேருந்து நிலையம் மற்றும் உக்கடம் பேருந்து நிலையம் ஆகிய மூன்று இடங்களில் தமிழ் புத்தகங்கள் விற்பனை செய்திட 8,9'x8,3' என்ற அளவுகளில் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட கடைகளை பொதுஏலம் தவிர்த்து தென்னிந்திய புத்தக விற்பளையாளா் மற்றும் வெளியீட்டாளா்களுக்கு மாத வாடகை ரூ. 200/- என்ற அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய அரசு ஆணை எண். 64 ந.நி.கு.வ.துறை நாள் 05.05.2008-ல் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட இடங்களில் புத்தகக் கடைகள் வைப்பதற்காக

1) விஜயா பதிப்பகம்
2) கீதா ப்பளிக்கேசன்ஸ்
3) நியூ செஞ்சுரி புத்தக நிலையம்
4) திரு பி. ராஜப்பா

ஆகியோா் விண்ணப்பித்து உள்ளனா்.

மேற்படி கடைகளை ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு - மேற்குறிப்பிட்ட இடங்களில் புத்தக விற்பனையாளா் மற்றும் வெளியீட்டாளா்களுக்கு மட்டுமே கடை ஒதுக்கீடு செய்யப்படும். எனவே,

1) விஜயா பதிப்பகம் - காந்திபுரம் நகர பேருந்து நிலையம்

2) கீதா ப்பளிக்கேசன்ஸ் - உக்கடம் பேருந்து நிலையம்

3) நியூ செஞ்சுரி புத்தக நிலையம் -காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம்

ஆகியோருக்கு ஒதுக்கீடு செய்ய ஒப்புதல் அளிக்கலாம்.

அரசு ஆணை எண். 64 ந.நி.கு.வ.துறை நாள் 05.05.2008–யை பதிவு செய்யலாம்.

ந.க.எண். 5982/2008/அ 10

<u>மா.ந.ம.தீா்மானம் எண் : 157 நாள் : 29.08.2008</u>

அரசு ஆணை எண். 64 ந.நி. (ம) கு.வ.துறை நாள் 05.05.2008-ஐ பதிவு செய்யப்பட்டது. பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு

1) காந்திபுரம் நகர பேருந்து நிலையம்
2) உக்கடம் பேருந்து நிலையம்
3) காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம்

ஆகிய இடங்களில் தமிழ்புத்தகக் கடை நடத்த அனுமதி வழங்க தீா்மானிக்கப்பட்டது. மேலும் சிங்காநல்லூா் பேருந்து நிலையத்திலும் தமிழ் புத்தகக் கடை நடத்த அனுமதி வழங்க தீா்மானிக்கப்பட்டது.

தமிழ் புத்தக் கடை நடத்துவதற்கான பெட்டி, சம்பந்தப்பட்ட விற்பனையாளா்/ வெளியீட்டாளா்களால் நிறுவிக்கொள்ளப்படவேண்டும் எனவும், தமிழ் நூல்கள் மட்டுமே விற்பனை செய்யப்படவேண்டும், தினசரி, வாராந்திர, மாதாந்திர பத்திரிக்கைகள் உள்ளிட்ட வேறு எப்பொருள்களும் விற்பனை செய்யக்கூடாது எனவும் நிபந்தனையுடன்

1) காந்திபுரம் நகர பேருந்து நிலையத்தில் தி/ ள். நியு செஞ்சுரி புக் உறவுஸ், கோவை
2) உக்கடம் பேருந்து நிலையத்தில் தி/ள். கீதம் பப்ளிகேஷன்ஸ், சென்னை
3) காந்திபுரம் மத்திய பேருந்து நிலையத்தில் தி/ ள். விஜயா பதிப்பகம் , கோவை
4) சிங்காநல்லூா் பேருந்து நிலையத்தில் தி /ள். கோயம்புத்தூா் புத்தக விற்பனையாளா்கள் மற்றும் வெளியீட்டாளா்கள் சங்கம், கோவை

ஆகிய நிறுவனங்களுக்கு தமிழ் புத்தக்கடை நடத்த அனுமதிக்க தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

பொருள் எண் 30

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் வாா்டு எண் 44 ல் உள்ள பெரிய கடைவீதி ஒப்பணகார வீதி முதல் சலிவன் வீதி வரை உள்ள சாலைக்கு மறுதார் தளம் புதுப்பித்தல் பணிக்கு ரூ.19,00,000/- செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது . மேலும் இப்பணிக்கு உதவி நிா்வாக போறியாளா் அவா்களால் நிா்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிக்கு நிா்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு சமா்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு-அனுமதிக்கலாம் ந.க.எண் 5796 /08/ MD4

<u>மா.ந.ம.தீா்மானம் எண் : 158 நாள் : 29.08.2008</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

பொருள் எண் 31

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் பொறியியல் பிரிவு எண்.1 வாா்டு எண் 13ல் உள்ள வீரப்ப தேவா் காலனி மனைப்பிரிவு முதல் நஞ்சுண்டாபுரம் பிரதான சாலை வரை மழை நீா் வடிகால் கட்டுதல் பணிக்கு (For disposal of main drain) தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.25,00,000/- க்கு நிா்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் சமா்பிக்கப்படுகிறது..

அலுவலகக்குறிப்பு- அனுமதிக்கலாம் ந.க.எண் 6248 /08/ MD4

<u>மா.ந.ம.தீா்மானம் எண் : 159 நாள் : 29.08.2008</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

பொருள் எண் 32

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் பொறியியல் பிரிவு எண்.1 வாா்டு எண் 49ல் திருவேங்கடசாமி சாலையில் தெற்கு பக்கத்தில் தடாகம் சாலை முதல் கிழக்காக சிமெண்ட் கான்கிரிட் நடைபாதை அமைத்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.25,00,000/-க்கு நிா்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு-அனுமதிக்கலாம் ந.க.எண் 4040 /08/ MD4

**மா.ந.ம.தீர்மானம் எண் : 160  நாள்  : 29.08.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 33

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண்.28-க்குட்பட்ட ரங்கநாதபுரம் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் ஆய்வுக்கூடம் மற்றும் நூலகம் கட்டுதல் பணிக்கு மதிப்பீடு ரூ. 25,00,000/-க்கு தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. இப்பள்ளியில் உள்ள மாணவர்களின் வசதிக்காக ஆய்வுக்கூடம் மற்றும் நூலக வசதி செய்ய இம்மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே இம்மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு-அனுமதிக்கலாம்                ந.க.எண் 17363 /07/ MD4

**மா.ந.ம.தீர்மானம் எண் : 161  நாள்  : 29.08.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 34

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண் 36-க்குட்பட்ட புரூக்பாண்ட் சாலை, S.L.M,Home மாநகராட்சி பிரசவ விடுதியில் முதல்தளம் B -பகுதி கட்டிடம் கட்டுதல் பணிக்கு மதிப்பீடு ரூ. 25,00,000/-க்கு தயாரிக்கபட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே இம்மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு-அனுமதிக்கலாம்                ந.க எண் 7870 /08/ MD4

**மா.ந.ம.தீர்மானம் எண் : 162  நாள்  : 29.08.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 35

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண் 25 ல் உள்ள அரசு கலைக் கல்லூரி சாலை பகுதியில் மறுதார் தளம் அமைத்தல் பணிக்கு ரூ.21,50,000/- க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுளளது. மேலும் நடப்பு 2008-2009ம் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு-அனுமதிக்கலாம்                ந.க.எண் 7615 /08/ MD4

மா.ந.ம.தீர்மானம் எண் : 163 நாள் : 29.08.2008

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 36

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண் 44- ல் இடையர் வீதி முதல் தர்மராஜா கோவில் வீதி வரை கருப்பகவுண்டர் சாலைக்கு மறுதார்தளம் அமைத்தல் பணிக்கு ரூ.19,00,000/- செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணிக்கு உதவி நிர்வாக பொறியாளர் அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு-அனுமதிக்கலாம் ந.க.எண் 5793 /08/ MD4

மா.ந.ம.தீர்மானம் எண் : 164 நாள் : 29.08.2008

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 37

கோவை மாநகராட்சி – வடக்கு மண்டலம்–பொறியியல் பிரிவு எண்.5 வார்டு எண். 72ல் ஸ்ரீ லட்சுமி நகரில் உள்ள தார் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதால், இவ்வார்டு மாமன்ற உறுப்பினர் இச்சாலையை புதுப்பித்துத் தரும்படி கேட்டுக் கொண்டதற்காகவும், அவசியம் கருதியும் மதிப்பீடு ரூ.17,00,000/–க்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்காண் பணிக்கான மதிப்பீட்டுத் தொகைக்கு நிர்வாகப் பொறியாளரால் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் இப்பணிக்கான மதிப்பீட்டுத் தொகைக்கு 2008–09ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே இப்பணிக்கான மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- அனுமதிக்கலாம். ந.க.எண்.06553/08/எம்டி2

மா.ந.ம.தீர்மானம் எண் : 165 நாள் : 29.08.2008

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 38**

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் .61 ராமசாமி மனை பிரிவு பொது ஒதுக்கீட்டு இடத்தில் பூங்கா அமைத்தல்- நிர்வாக அனுமதி வேண்டுதல் -தொடர்பாக.

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் .61 ராமசாமி மனை பிரிவு பொது ஒதுக்கிட்டு இடத்தில் பூங்கா அமைத்து சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்கு மாமன்ற உறுப்பினரின் வேண்டுகோளின் பேரில் மதிப்பீடு ரூ.25 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு நிர்வாக பொறியாளரால் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலுக்காக.

அலுவலகக்குறிப்பு- அனுமதிக்கலாம் ந.க.எண் 3528 /08/ MD4

**மா.ந.ம.தீர்மானம் எண் : 166 நாள் : 29.08.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 39**

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம்- பிரிவு எண்.3-ல் வார்டு எண் 56-ல் உள்ள மாசாணியம்மன் கோயில் வீதி மற்றும் இராமமூர்த்தி இணைப்புச் சாலை வரை மறுதார் தளம் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 15,10,000/-க்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே இப்பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது. இப்பணிக்கு 2008-2009-ம் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அலுவலகக்குறிப்பு-அனுமதிக்கலாம் ந.க.எண் 3614 /08/ MD4

**மா.ந.ம.தீர்மானம் எண் : 167 நாள் : 29.08.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 40**

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் பொறியியல் பிரிவு எண் .3-ல் வார்டு எண் 53-ல் உள்ள செல்வபுரம் மாநகராட்சி ஆரம்பப்பள்ளியில் (வடக்கு) கூடுதல் வகுப்பறைகள் திரும்ப கட்டுதல் மற்றும் உணவுக்கூடம் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 20,00,000/க்கு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே இப்பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

இப்பணிக்கு 2008-2009-ம் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அலுவலகக்குறிப்பு- அனுமதிக்கலாம் ந.க.எண் 3611 /08/ MD4

**மா.ந.ம.தீர்மானம் எண் : 168 நாள் : 29.08.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 41**

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் 56-க்குட்பட்ட சொக்கம்புதூர் மயானப் பகுதியிலுள்ள மின்சார மயானத்தை எரிவாயு மயானமாக மாற்றும் பணிக்கு மதிப்பீடு ரூ. 21,00,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்கு 2007-2008 வரவு-செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆணையரது அறிவுரையின்படி சொக்கம்புதூர் பகுதியிலுள்ள மின்மயானத்தை எரிவாயு மயானமாக மாற்றுதல் பணிக்கு மதிப்பீடு ரூ. 21,00,000/- க்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு- அனுமதிக்கலாம் ந.க.எண் 8543 /07/ MD4

**மா.ந.ம.தீர்மானம் எண் : 169 நாள் : 29.08.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 42**

கோவை மாநகராட்சி - மேற்கு மண்டலம் - வார்டு எண் 34- மாநகராட்சி மருந்துவமனை- இராமலிங்கம் காலனி -சுற்றுச்சுவர் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கோள்ளுதல்-நிர்வாக அனுமதிக்காக-

வார்டு எண் .34-க்குட்பட்ட இராமலிங்கம் காலனி மேட்டுபாளையம் சாலையில் உள்ள மாநகராட்சி மருந்துவமனைக்கு சுற்றுச்சுவர் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வது தொடர்பாக மேற்படி மருத்துவமனையின் மருத்துவர் வேண்டிக்கொண்டதன் பேரில் மதிப்பீடு ரூ. 22,50,000/-க்கு தயாரிக்கப்பட்டு நிர்வாக பொறியாளரால் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டது. மேலும் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலுக்காக.

அலுவலகக்குறிப்பு- அனுமதிக்கலாம் ந.க.எண் :7177 /07/ MD4

**மா.ந.ம.தீர்மானம் எண் : 170 நாள் : 29.08.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 43**

கோவை மாநகராட்சி- தெற்கு மண்டலம் வார்டு எண் 37-ல் உள்ள வெரைட்டி ஹால் சாலையில் அமைந்துள்ள சிட்டி மேல்நிலைப்பள்ளியில் மராமத்துப்பணிகள் செய்தல் மதிப்பீடு ரூ. 18,00,000/-

மேற்கண்ட பொருளின்படி கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண் 37-ல் உள்ள வெரைட்டி ஹால் சாலையில் அமைந்துள்ள சிட்டி மாநகராட்சி மேல் நிலைப்பள்ளியில் சில மராமத்துப் பணிகள் செய்ய அத்தியா அவசியத்தையும் முக்கியத்துவத்தைக் கொண்டும் மதிப்பீடு ரூ. 18,00,000/- தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே இப்பணியினை செய்ய நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு- அனுமதிக்கலாம் ந.க.எண் 9035 /08/ MD4

**மா.ந.ம.தீர்மானம் எண் : 171 நாள் : 29.08.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 44

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண் 37- க்குட்பட்ட சிட்டி மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் மாணவர்கள் உணவகம் கட்டுதல் பணிக்கு மதிப்பீடு ரூ. 19,00,000/-க்கு தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே இம்மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு- அனுமதிக்கலாம் ந.க..எண் 18099 /07/ MD4

மா.ந.ம.தீர்மானம் எண் : 172 நாள் : 29.08.2008

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 45

கோவை மாநகராட்சி – வடக்கு மண்டலம் – பொறியியல் பிரிவு எண்.1 – வார்டு எண். 2க்குட்பட்ட பீளமேடு மேல்நிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் பணிக்கு ரூ.25,00,000/–த்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது..

அலுவலகக் குறிப்பு- அனுமதிக்கலாம் ந.க.எண்.9376/08/எம்டி2

மா.ந.ம.தீர்மானம் எண் : 173 நாள் : 29.08.2008

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 46

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் பிரிவு எண்.1 வார்டு எண்.49 கிழக்கு வெங்கிடசாமி சாலையில் உள்ள மிகவும் பழமையான பழுதடைந்துள்ள மேயர் குடியிருப்பை இடித்து அப்புறப்படுத்தி புதியதாக குடியிருப்பு கட்ட மதிப்பீடு ரூ.25,00,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்பணிக்கு உதவி நிர்வாகப் பொறியாளர் அவர்களால் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கான மதிப்பீட்டுத் தொகைக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 8054/ 08 / எம்.டி.4

மா.ந.ம.தீர்மானம் எண் : 174 நாள் : 29.08.2008

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 47

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கோவை மாநகராட்சிக்கென தனி குடிநீர் (பில்லூர் II) திட்டம் ரூ.113.74 கோடி செலவில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு தேசிய அளவிலான ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டு உள்ளது.

இத்திட்டத்தின் மூலம் மாநகராட்சிக்கு பெறப்படவுள்ள 125 எம்.எல்.டி கொள்ளளவு பாதுகாக்கப்பட்ட குடிநீருடன், சிறுவாணி குடிநீர் திட்டத்திலிருந்து பெறப்படும் 75 எம்.எல்.டி குடிநீரும் சேர்த்து, மாநகராட்சியில் பெறப்படும் 200 எம்.எல்.டி குடிநீரினை மாநகராட்சி பகுதிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும், அனைத்து நாட்களிலும் சீரான குடிநீர் விநியோகத்துடன் 24 மணி நேரமும் கிடைக்கும் வகையில் வடிவமைக்கவும், கூடுதல் மேல்நிலை தொட்டிகள் கட்டுவதற்க்கு வடிவமைக்கவும், மாநகராட்சிக்கென பில்லூர் அணைக்கட்டு பகுதியிலிருந்து பெறப்படும் கூடுதல் குடிநீர் பெரிய கோம்பை மற்றும் கட்டன் மலையில் தமிழ்நாடு குடிநீர் வாரியத்தால் (பில்லூர் I) திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள சுரங்கக்குகை வழி பாதையின் மூலம் பெறப்பட உள்ளதால், பெருகிவரும் மக்கட்தொகைக்கு ஏற்ப பிற்காலத்தில் மாநகராட்சிக்கென தேவைப்படும் இரு மலைகளில் தனி சுரங்ககுகை பாதை அமைக்கவும், திட்ட அறிக்கை தயாரிக்கவும், முதற்கட்டமாக மாதிரி பகுதியாக (Demonstration Zone) மாநகராட்சி வார்டு எண். 4, 5, 6, 8, 9/பகுதி, 10/பகுதி, 11/பகுதி, 25/பகுதி, 26, 27, 28, 29, 30, 31, 32 மற்றும் 33 பகுதியில், சீரான, சம அளவில் 24x7 குடிநீர் திட்டம் உடனடியாக செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க தகுதியான தொழில்நுட்ப திட்ட ஆலோசகர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் உத்தரவிற்கிணங்க திட்ட அறிக்கை அழைப்பு L.O.I (Letter of Invitation) கடந்த 12.03.2008ல் கோரப்பட்டது. அவ்வாறு கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஏழு (7) ஆலோசகர்களிடமிருந்து தொழில்நுட்ப கருத்துரை அடங்கிய உறை (Technical Proposal) மற்றும் விலை ஒப்பந்தப்புள்ளி (Financial Bid) அடங்கிய உறைகள் பெறப்பட்டன.

1. திரு/ள்.வாகாப் லிமிடெட், ஹரியானா
2. திரு/ள். டி.டி.ஐ.கன்சல்டிங் இன்ஜினியர்ஸ்(இந்தியா) பிரைவேட் லிட், பெங்களூர்.
3. திரு/ள். வில்பர் ஸ்மித் அசோஸியேட்ஸ் (பி) லிமிடெட், பெங்களூர்.
4. திரு/ள். பிட்சனர் கன்சல்டிங் இன்ஜினியர்ஸ்(இந்தியா) பிரைவேட் லிட், சென்னை.
5. திரு/ள். நேசனல் கன்சல்டன்ஸி ஃபார் பிளானிங் அண்டு இஞ்சினியரிங், ஹைதராபாத்.
6. திரு/ள். எஸ்.சி. இன்ஜினியரிங் கன்சல்டன்ஸி, சென்னை.
7. திரு/ள். ஷா டெக்னிகல் கன்சல்டண்ட் (பி) லிமிடெட், சென்னை

அவ்வாறு பெறப்பட்ட 7 நிறுவன அறிக்கைகளில் தொழில்நுட்ப தகுதியுடைய மூன்று ஆலோசகர்கள் தொழில்நுட்ப ஆய்வுக்குழுவில் தெரிவு செய்யப்பட்டு 12.06.2008 அன்று விலைப்புள்ளி அடங்கிய உறைகள் (Financial Bid) திறக்கப்பட்டன. தகுதி பெற்ற நிறுவனங்கள் வழங்கிய ஒப்பந்தவிலைப்புள்ளி விபரம் பின்வருமாறு.

| வ.எண் | நிறுவன விபரம் | ஒப்பந்தவிலைப்புள்ளி | சேவை வரி 12.36% | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | தி/ள். டி.டி.ஐ.கன்சல்டிங் இன்ஜினியர்ஸ்(இந்தியா) பிரைவேட் லிட், பெங்களூர். | ரூ. 1,75,50,000 | ரூ. 14,38,704 | ரூ. 1,89,88,704 |
| 2. | தி/ள். பிட்சனர் கன்சல்டிங் இன்ஜினியர்ஸ்(இந்தியா) பிரைவேட் லிட், சென்னை. | ரூ. 59,67,450 | ரூ. 7,37,577 | ரூ. 67,05,027 |
| 3. | தி/ள். ஷா டெக்னிகல் கன்சல்டண்ட் (பி) லிமிடெட், சென்னை | ரூ. 2,93,69,000 | ரூ. 36,30,000 | ரூ. 3,29,99,000 |

மேற்கண்ட ஆலோசகர்களில் அதிக மதிப்பெண்கள் பெற்றுள்ள மெஸ்ஸர்ஸ். பிட்சனர் கன்சல்டிங் இஞ்சினியரிங் இந்தியா (பி) லிமிடெட், சென்னை. அவர்கள் தனது குறைந்த ஒப்பந்தவிலைப்புள்ளியாக ரூ.67,05,027/—க்கு குறிப்பிட்டுள்ளார். இதில் கன்சல்டிங் தொகையாக ரூ. 59,67,450/—ம், சேவை வரியாக (12.36%) சதவீதம் ரூ. 7,37,577 ம் ஆகும். மேற்படி நிறுவனத்தினரை 02.07.2008 அன்று விலைப்புள்ளியை குறைத்துதரக் கோரியதில் மேற்படி நிறுவனம் தனது விலைப்புள்ளியை மேலும் குறைத்துத்தர இயலாதென 10.07.2008 தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 01.07.08 ம் தேதிய ஆய்வு கூட்டத்தில் குடிநீர் திட்டப் பணிகளை விரைந்து செய்து முடிக்க விரிவான திட்ட அறிக்கையினை 31.08.2008 — க்குள் மத்திய அரசு ஒப்புதல் பெறுவதற்க்கு நடவடிக்கை எடுக்க அறிவுரை வழங்கி உள்ளார்கள்.

எனவே மெஸ்ஸர்ஸ். பிட்சனர் கன்சல்டிங் இன்ஜினியரிங் இந்தியா (பி) லிமிடெட், சென்னை நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தவிலைப்புள்ளியான ரூ.67,05,027/—க்கு இத்திட்ட ஆலோசனை பணியினை மேற்கொள்ள ஒப்படைப்பு செய்ய மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - (அ) பில்லூர் II கோவை மாநகராட்சி தனி குடிநீர் திட்டத்தில் பெறப்படும் கூடுதல் குடிநீரினை கொண்டு சீரான குடிநீர் விநியோகம், 24 x 7 அடிப்படையில் மாநகராட்சி பகுதியில் வழங்க, திட்ட அறிக்கை தயாரிக்க குறைந்த விலைப்புள்ளி வழங்கிய மெஸ்ஸர்ஸ் பிட்சனர் கன்சல்டிங் இன்ஜினியரிங் இந்தியா (பி) லிமிடெட், சென்னை நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப் விலைப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.

(ஆ) இச்செலவினத்தினை ஜவஹர்லால்நேரு தேசிய நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தில் அனுமதிக்கப்படும் நிதியிலிருந்தோ அல்லது மாநகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்தோ மேற்க்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். 9190/02/MD'man

**மா.ந.ம.தீர்மானம் எண் : 175 நாள் : 29.08.2008**

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள, திட்ட அறிக்கை தயாரிக்க, குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள தி/ ள். பிட்சனர் கன்சல்டிங் இஞ்சினியர்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க தீர்மானிக்கப்பட்டது.

திட்ட அறிக்கை தயாரிப்பு செலவினத்தை ஜவஹர்லால்நேரு தேசிய நகர புனரமைப்பு திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 48

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட ஆம்னி பேருந்து நிறுத்தத்தில் பேருந்து நுழைவுக்கட்டணம் வசூலிக்க மாநகராட்சி பணியாளர்கள் பற்றாக்குறையால் வசூல் பணி பாதிக்கப்படும் நிலையை கருத்தில் கொண்டு பேருந்து நுழைவுக்கட்டணம் வசூலிக்கும் உரிமையை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்ய மாமன்ற தீர்மானம் எண்.286, நாள்.27.03.2008-ன்படி அனுமதி அளித்ததன் அடிப்படையில் 30.05.2008 அன்று முதன் முதலாக 01.04.2008 முதல் 31.03.2009 வரையிலான காலத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் கீழ்கண்டவர்கள் ஏலத்தில் கலந்து கொண்டு ஏலக் கேள்வி கேட்டுள்ளனர்.

| வ.எண். | ஏலதாரர் பெயர் | கேட்கப்பட்ட உச்ச கேள்வி (ரூ.) | உயர்ந்தபட்ச ஏல கேள்வி (ரூ.) |
|---|---|---|---|
| 1. | குமலாவதி | 6,91,000/- | - |
| 2. | C.R. மணிகண்டன் | 6,92,000/- | - |
| 3. | G. ரங்கராஜ் | 6,96,000/- | - |
| 4. | P. கதிரேசன் | 6,97,000/- | - |
| 5. | B. ராமசாமி | 7,01,000/- | - |
| 6. | V.M. நாச்சி முத்து | 7,02,000/- | 7,02,000/- |

மேற்கண்ட ஏலக்கேள்விகளில் திரு. V.M. நாச்சிமுத்து என்பவர் உச்ச கேள்வியாக ரூ.7,02,000/- கேட்டுள்ளார்.

ஆம்னி பேருந்து நிறுத்தத்திற்கு வரும் ஆம்னி பேருந்துகளின் நுழைவுக் கட்டணத்தை துறை மூலம் வசூலிக்கும்போது ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ.7,80,000/- வசூல் செய்யப்படுகிறது. தினம் ஒரு மாநகராட்சி பணியாளர் வசூல் பணியை மேற்கொண்டு வருகிறார். அவரது மாதச்சம்பளம் ரூ.9000/- (9000 X 12 = 1,08,000/-) ஆண்டு ஒன்றுக்கு சம்பளம் ரூ.1,08,000/- நீங்கலாக மீதி வருவாய் ரூ.6,72,000/- நிகர வருவாயாக உள்ளது.

இந்நிலையில் தற்போது ஏலத்தில் கேட்கப்பட்டுள்ள உச்சக் கேள்வியான ரூ.7,02,000/- என்ற ஓராண்டு கட்டணம் கூடுதலாக உள்ளது.

எனவே, ஆம்னி பேருந்து நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமையை உச்ச கேள்விதாரர் திரு. V.M. நாச்சி முத்து என்பவருக்கு பொறுப்பேற்கும் நாள் முதல் கணக்கிட்டு ஒப்படைக்கவும் பத்திரிக்கைகளில் செய்யப்பட்ட விளம்பர செலவினங்களை ஏற்கவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் 15-06-2008 தீர்மான எண். 71-ல் ஒப்புதல் அளித்துள்ளது.

வடக்கு மண்டலத்தில் மாநகராட்சி மூலம் வசூல் செய்ய போதுமான பணியாளர்கள் இல்லாததாலும் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களிடம் 23.07.2008ல் முன் அனுமதி பெற்று உச்சகேள்விதாரருக்கு ஒப்படைக்கப்பட்டது. இது சம்பந்தமாக பின்னேற்பாக மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண். 551/2008/அ1

**மா.ந.ம.தீா்மானம் எண் : 176 நாள் : 29.08.2008**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மானம் எண். 71 நாள் 15.06.08 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

**பொருள் எண் 49**

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட பட்டேல் ரோடு, ராஜா ரோடு, டாடாபாத், பழைய டாடாபாத், காந்திபுரம் கிராஸ்கட் ரோடு, காந்திபுரம் 7-வது வீதி தொடா்ச்சி ஆகிய இடங்களில் உள்ள வணிக வளாகங்களில் உள்ள கடைகளில் உரிமக்காலம் முடிவுற்ற கடைகளின் (பட்டியல் தனியாக இணைக்கப்பட்டுள்ளது) உரிமதாரா்களிடமிருந்து அரசு ஆணை எண்.92 நகராட்சி நிா்வாகம் மற்றும் குடிநீா் வழங்குதுறை நாள் 3.7.07 ன் படியும் மாமன்ற தீா்மான எண்.92 நாள் 24.9.07-ன்படியும் கடைகளின் அளவீடுகளின்படி உரிமம் புதுப்பிக்க கட்டணம் பெறப்பட்டுள்ளது. மேலும் கடையை நீட்டிக்க இசைவு கடிதமும் பெறப்பட்டுள்ளது.

உரிமம் முடிவுற்ற கடைகளுக்கு அரசு ஆணைப்படி ஏற்கெனவே பெறப்பட்டு வரும் வாடகையில் 15% உயா்வு செய்து உரிமம் முடிவுற்ற நாளிலிருந்து மேலும் மூன்று ஆண்டுகளுக்கு உரிமத்தை நீட்டிக்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில், வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீா்மான எண்.74 நாள் 16.6.2008-ன்படி ஒப்புதல் அளித்துள்ளது. இது சம்பந்தமாக மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.2730/2008/அ1

**மா.ந.ம.தீா்மானம் எண் : 177 நாள் : 29.08.2008**

1. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் 16.6.08-ம் தேதிய தீா்மானம் எண். 74-ஐ ஏற்று பொருளில் வரிசை எண் 1 முதல் 8 வரை, 15 முதல் 18 வரை மற்றும் 25-ல் உள்ள இனங்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு உரிமம் நீட்டிப்பு செய்ய தீா்மானிக்கப்பட்டது.

2. பழைய டாடாபாத் வணிக வளாகம் உள்ள இடத்தில் புதியதாக கட்டிடம் எழுப்பும் உத்தேசம் இருப்பதால், கட்டிடம் கட்டப்படும் சமயத்தில் உடனடியாக உரிமதாரா்கள் காலிசெய்து கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரிசை எண். 9 முதல் 14 வரை உள்ள இனங்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு உரிமம் நீட்டிப்பு செய்ய தீா்மானிக்கப்பட்டது.

3. பலஅடுக்கு வாகன நிறுத்துமிடம் அமைக்கும் திட்டம் மாநகராட்சி வசம் இருப்பதனால், பொருளில் வரிசை எண் 19 முதல் 24 வரையுள்ள கிராஸ்கட் ரோடு கடை உரிமதாரா்கள், திட்டம் செயல்படுத்தப்படும் நேரத்தில் உடனடியாக காலிசெய்து கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் மூன்று ஆண்டுகளுக்கு உரிமம் நீட்டிப்பு செய்ய அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

**பொருள் எண் 50**

கோயம்புத்தூா் மாநகராட்சி வடக்கு மண்டலம் வாா்டு எண்.32ல் காந்திபுரம் 7வது வீதி (விரிவு) கருணை எல்லை காலனியில் அமைந்துள்ள விநாயகா் கோவில், அம்மன் கோவிலுக்கு வரிவிலக்கு அளித்து குடிநீா் இணைப்பு வழங்குமாறு கோவிலின் அறக்கட்டளை செயலாளா் தனது 21.04.2008-ம் தேதிய கடிதத்தில் கேட்டுள்ளாா்.

மேற்கண்ட இடத்தை நேரில் ஆய்வு செய்து, சம்பந்தப்பட்ட வரிவசூலா் மற்றும் உதவி வருவாய் அலுவலா் மேற்கண்ட கோவிலுக்கு வருவாய் தரத்தக்க குடியிருப்புகளோ, கடைகளோ இல்லை என அறிக்கை சமா்ப்பித்துள்ளனா். மேலும் கோவிலுக்கு தற்போதுள்ள வரிவிதிப்பு எண். 336944-க்கு 2007-2008 முதலாம் அரையாண்டு வரை வரி செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, கோவிலுக்கு வரும் பொது மக்களின் நலன் கருதி குடிநீா் இணைப்பு வழங்குவதற்காக சொத்துவரி விதிப்பிலிருந்து கோயம்புத்தூா் மாநகராட்சி சட்டம் 1981 விதி 123-(a) ன் கீழ் விலக்கு அளித்து வரிவிதிப்பு எண்.336944- ஐ கேட்பு பதிவில் நீக்கம் சேய்ய வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீா்மான எண்.70 நாள் 16.6.2008-ன்படி ஒப்புதல் அளித்துள்ளது. இது சம்பந்தமாக மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண் 5430/2008/அ4

**மா.ந.ம.தீா்மானம் எண் : 178 நாள் : 29.08.2008**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீா்மானம் எண். 70 நாள் 16.06.08 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

**பொருள் எண் 51**

கோயம்புத்தூா் மாநகராட்சி வடக்கு மண்டலம் 33வது வாா்டு டாடாபாத் யாா்டு சாலை மற்றும் 100 அடி சாலை சந்திப்பில் மீன் வளத்துறையினருக்கு 20' x 16" அளவு கொண்ட இடம் ஒதுக்கீடு செய்ய மீன் வளா்ச்சித் துறை துணை மேலாளா் தனது 20.12.2007-ந் தேதிய கடிதத்தில் கேட்டுள்ளாா்.

இது சம்பந்தமாக உதவி ஆணையா், உதவி செயற்பொறியாளா், இளம்பொறியாளா் ஆகியோா் நேரில் ஆய்வு செய்து பொதுப்பணித்துறை வழிகாட்டு நெறிப்படியும் நில வாடகை நிா்ணயத்தின்படியும் 10' x 11' அளவு கொண்ட இடத்தை ரூ.3,386/- என்ற மாதவாடகை அடிப்படையில் தற்காலிகமாக வழங்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீா்மான எண்.60 நாள் 16.6.2008-ன்படி ஒப்புதல் அளித்துள்ளது. இது சம்பந்தமாக மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்: 15404/2007/அ4

**மா.ந.ம.தீா்மானம் எண் : 179 நாள் : 29.08.2008**

மீன்வளத்துறையினருக்கு 10'x10' அளவு கொண்ட இடத்தை யாா்டு சாலையில் மாத வாடகை ரூ. 3386/- என்று நிா்ணயம் செய்து தற்காலிக அடிப்படையில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீா்மானம் எண். 60 நாள் 16.6.2008-ஐ ஏற்று வழங்க அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

**பொருள் எண் 52**

கோயம்புத்தூா் மாநகராட்சி வடக்கு மண்டலம் வாா்டு எண். 1, பீளமேடு பகுதியில் உள்ள பாரதி காலனியில் வசிக்கும் ஊா் பொதுமக்கள் தங்கள் பகுதியில் உள்ள ஸ்ரீ சக்தி விநாயகா் கோவிலுக்கு வரிவிலக்கு அளித்து குடிநீா் இணைப்பு வழங்க கோரியுள்ளனா்.

மேற்படி கோவில் பாரதி காலனி அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு பொது ஒதுக்கீட்டு இடத்தில் அமைந்துள்ளது. மேற்குறிப்பிட்ட இடம் மாநகராட்சியிடம் ஒப்படைக்கவில்லை. அப்பகுதி பொது மக்கள் பராமரிப்பில் உள்ளது. பல ஆண்டுகளுக்கு முன் பொதுமக்கள் பராமரிப்பில் உள்ளது. பல ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட கோவில், அனுமதி ஏதும் பெறப்படவில்லை.

வருவாய் தரத்தக்க கடைகள் ஏதும் இலலை. எனவே, மேற்கண்ட கோவிலுக்கு வரிவிதிப்பிலிருந்து விலக்களித்து குடிநீா் இணைப்பு வழங்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீா்மான எண்.72 நாள் 16.6.2008-படி ஒப்புதல் அளித்துள்ளது. இது சம்பந்தமாக மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்: 05487/2008/அ4 (வ)

**மா.ந.ம.தீர்மானம் எண் : 180 நாள் : 29.08.2008**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 72 நாள் 16.06.08 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 53

கோவை மாநகராட்சி பகுதிகளில் கீழ்க்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 13721/06/ எம்டி2 | வார்டு எண்.65 சங்கனூர் சண்முகா நகரில் பொதுக் கழிப்பிடம் திரும்பக் கட்டுதல் | 5.00 | 02.07.08 மூன்றாம் அழைப்பு | திரு.எம். தண்டபாணி | 3.66 அதிகம் |
| 2 | 16006/07 எம்டி2 | வார்டு எண்.68 இரத்தின புரி நேரு வீதியில் மாநகராட்சி சுகாதார மருத்துவமனை வளாகத்தில் நவீன மகப்பேறு மருத்துவமனை கட்டுதல் | 15.50 | 09.07.08 ஐந்தாம் அழைப்பு | தி/ள். என்.பி.கே. அசோஸியேட்ஸ் | 4.55 அதிகம் |
| 3 | 131/08/ எம்டி2 | வார்டு எண்.7 சிங்காநல்லூர் பகுதியில் நவீன ஆடு அறுவைமனை கட்டுதல் | 25.00 | 09.07.08 மூன்றாம் அழைப்பு | தி/ள். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் & பேப்ரிகேட்டர்ஸ் | 0.24 அதிகம் |
| 4 | 7740/08/ எம்டி2 | வார்டு எண்.72 கே.ஆர்.ஜி நகரில் சுகாதார ஆய்வாளர் அலுவலகம் கட்டுதல் | 20.00 | 09.07.08 முதல் அழைப்பு | தி/ள். என்.பி.கே. அசோஸியேட்ஸ் | 4.60 அதிகம் |
| 5 | 4579/07/ எம்டி2 | வார்டு எண்.66 கண்ணப்பன் நகர் பகுதியில் ஆடு அறுவை மனை கட்டுதல் | 25.00 | 09.07.08 நான்காம் அழைப்பு | தி/ள். என்.பி.கே. அசோஸியேட்ஸ் | 3.41 அதிகம் |
| 6 | 4940/08/ எம்டி2 | வார்டு எண்.72 தென்றல் நகர் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைகளில் மறுதார்தளம் அமைத்தல் | 25.00 | 09.07.08 முதல் அழைப்பு | திரு. கே. நடராஜன் | 0.29 குறைவு |
| 7 | 5419/08/ எம்டி2 | வார்டு எண்.72 பாரதி நகர் முதல் சத்தி மருத்துவ மனை வழியாக போலீஸ் குடியிருப்பு வரை மறு தார்தளம் அமைத்தல் | 25.00 | 09.07.08 முதல் அழைப்பு | திரு. கே. நடராஜன் | 0.30 குறைவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 8 | 1457/08 எம்டி2 | வார்டு எண்.65க்குட்பட்ட தேமையன் வீதி மற்றும் கருப்புசாமி நகர் பகுதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் பணி | 24.80 | 09.07.08 முதல் அழைப்பு | தி/எ. கே.சி.பி. இன்ஜினியர்ஸ் & பேப்ரிகேட்டர்ஸ் | 11.59 குறைவு |
| 9 | 4941/08/ எம்டி2 | வார்டு எண்.66 தயிர் இட்டேரி சாலை தெற்குப் பகுதியில் ரயில்வே லயின் முதல் சங்கனூர் பிரதான சாலை வரை மறு தார்தளம் அமைத்தல் | 25.00 | 09.07.08 முதல் அழைப்பு | தி/எ. பி.செந்தில் & கோ | 0.09 குறைவு |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: வரிசை எண். 1 முதல் 2 வரையிலான பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், வரிசை எண். 3 முதல் 9 வரையிலான பணிகளின் மதிப்பீடு மாமன்ற அனுமதி வரம்பிற்குள் வருவதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் செய்ய உள்ளதாலும் இப்பணிகளுக்கு பொறியியல்பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.13721/06/எம்டி2

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 181 நாள் : 29.08.2008</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. பொருளில் வரிசை எண் 5-ல் உள்ள ஆடு அறுவை மனை கட்டுதல் பணியினை வேறு ஒரு பொருத்தமான இடத்தில் அமைக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 54

கோவை மாநகராட்சி பகுதிகளில் கீழ்க்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 4253/08/ எம்டி2 | வார்டு எண்.11 சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் கழிப்பிடம் கட்டுதல் | 10.00 | 18.07.08 முதல் அழைப்பு | திரு. ஆர். நடராஜன் | 0.18 அதிகம் |
| 2 | 3045/08 எம்டி2 | வார்டு எண்.17 வி.ஜி.ராவ் நகரில் பள்ளி அறைகள் கட்டுதல் | 25.00 | 18.07.08 முதல் அழைப்பு | தி/எ. கே.சி.பி. இன்ஜினியர்ஸ் அண்ட் பேப்ரிகேட்டர்ஸ் | 4.43 அதிகம் |
| 3 | 11646/07/ எம்டி2 | வார்டு எண்.18 வடக்கு மண்டல அலுவலகத்தில் இரண்டாம் தளம் கட்டுதல் | 25.00 | 18.07.08 முதல் அழைப்பு | திரு. பி. வானமாமலை | 4.78 அதிகம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | 3044/08/ எம்டி2 | வார்டு எண்.17 வி.ஜி.ராவ் நகரில் பி பிளாக்கில் பள்ளி அறைகள் கட்டுதல் | 25.00 | 18.07.08 முதல் அழைப்பு | தி/ள். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் அண்ட் பேப்ரிகேட்டர்ஸ் | 4.42 அதிகம் |
| 5 | 3324/08/ எம்டி2 | வார்டு எண்.2 விளாங்குறிச்சி சாலை ரயில்வே கேட் முதல் தொலைபேசி காலணி வரை மறுதார்தளம் அமைத்தல் மற்றும் சாலை அகலப்படுத்துதல் | 25.00 | 18.07.08 முதல் அழைப்பு | திரு. ஆர். சுந்தரராஜ் | 0.24 குறைவு |
| 6 | 3678/08/ எம்டி2 | வார்டு எண்.3 ராமண செட்டியார் பள்ளி கேட் முதல் தண்ணீர்பந்தல் ஆறாவது குறுக்கு சந்திப்பு வரை மறு தார்தளம் அமைத்தல் | 22.25 | 18.07.08 முதல் அழைப்பு | திருமதி. எம் சரோஜினி | 0.09 குறைவு |
| 7 | 3675/08/ எம்டி2 | வார்டு எண்.3 தியாகி குமரன் வீதியில் புதிய மெட்டல் சாலை அமைத்தல் | 18.50 | 18.07.08 முதல் அழைப்பு | திரு. எ.ராஜு | 21.58 குறைவு |
| 8 | 474/08 எம்டி2 | வார்டு எண்.1 பி.ஆர்.பி. கார்டன் மாநகராட்சி பொது ஒதுக்கீட்டு இடத்தில் காம்பவுண்டு சுவர் கட்டுதல் | 20.00 | 18.07.08 முதல் அழைப்பு | தி/ள். எம்.எஸ். இன்ஜினியர்ஸ் | 0.004 குறைவு |
| 9 | 1882/08/ எம்டி2 | வார்டு எண்.71 கணபதி ஜெயபிரகாஸ் நகரில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் | 18.00 | 18.07.08 முதல் அழைப்பு | திரு. ஆர். செல்வராஜ் | 0.97 குறைவு |
| 10 | 3331/08/ எம்டி2 | வார்டு எண்.2 எல்லைத் தோட்டம் தொடர்ச்சி பகுதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் | 16.80 | 18.07.08 முதல் அழைப்பு | திரு. ஆர். தங்கவேல் | 0.28 குறைவு |
| 11 | 5562/08/ எம்டி2 | வார்டு எண்.4 எஸ்.ஐ.எச்.எஸ். காலணி பகுதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் | 24.90 | 18.07.08 முதல் அழைப்பு | திரு. கே. முருகேசன் | 0.17 குறைவு |
| 12 | 5993/08/ எம்டி2 | வார்டு எண்.8 கிருஸ்ணா கார்டன் மற்றும் ரிலையன்ஸ் கார்டன்ஸ் பகுதியில் பொது ஒதுக்கீட்டு இடத்தில் பூங்கா அமைத்தல் மற்றும் காம்பவுண்டு சுவர் கட்டுதல் | 24.00 | 18.07.08 முதல் அழைப்பு | திரு.கே.ராமசாமி | 0.06 குறைவு |
| 13 | 2919/08/ எம்டி2 | வார்டு எண்.15 அன்னை வேளாங்கண்ணி நகர் பகுதியில் பொது ஒதுக்கீட்டு இடத்தில் பூங்கா அமைத்தல் | 25.00 | 18.07.08 முதல் அழைப்பு | தி/ள். என்.பி.கே. அசோஸியேட்ஸ் | 0.19 குறைவு |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: வரிசை எண். 1 ல் குறிப்பிட்டுள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், வரிசை எண். 2 முதல் 13 வரையிலான பணிகளின் மதிப்பீடு மாமன்ற அனுமதி வரம்பிற்குள் வருவதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் செய்ய உள்ளதாலும் இப்பணிகளுக்கு பொறியியல்பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.4253/08/எம்டி2

**மா.ந.ம.தீர்மானம் எண் : 182 நாள் : 29.08.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 55

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண.33-ல் அழகப்பா காலனியில் அமைந்துள்ள அருள்மிகு மகா கணபதி, மகாமாரியம்மன் திருக்கோவிலுக்கு வரிவிலக்கு அளித்தும் குடிநீர் இணைப்பு வழங்கவும் கோவில் நிர்வாக குழுவினர் விண்ணப்பித்துள்ளனர்.

மேற்கண்ட இடத்தை நேரில் ஆய்வு செய்து சம்பந்தப்பட்ட வரிவசூலர் மேற்கண்ட கோவில் கடந்த 50 ஆண்டுகளாக இருந்து வருவதாகவும் கோவிலுக்கு வருமானம் வரத்தக்க கடைகளோ, குடியிருப்புகளோ இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே, கோவிலுக்கு வரும் பொதுமக்களின் நலன் கருதி குடிநீர் இணைப்பு வழங்குவதற்காக சொத்து வரிவிதிப்பிலிருந்து கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981 விதி 123(a)-ன்படி வரிவிலக்கு அளிக்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில், வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண்.69 நாள் 16.6.2008ன் படி ஒப்புதல் அளித்துள்ளது. இது சம்பந்தமாக மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.5447/2008/ அ1

**மா.ந.ம.தீர்மானம் எண் : 183 நாள் : 29.08.2008**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண். 69 நாள் 16.06.08 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 56

கோவை மாநகராட்சி- மேற்கு மண்டலம்-பிரிவு எண் 3, வார்டு எண்.56-ல் சொக்கம்புதூர் மயான மைதானத்தில் மின் மயானத்தின் தென்புறம் சுற்றுச்சுவர் கட்டும் பணிக்காக ரூ. 25,00,000/-க்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் இப்பணிக்காக நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது. இப்பணிக்கு 2008-2009 –ம் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அலுவலகக்குறிப்பு-அனுமதிக்கலாம் ந.க.எண் 3686 /08/ MD4

**மா.ந.ம.தீர்மானம் எண் : 184 நாள் : 29.08.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 57

மனுதாரர் திருமதி. பி. சாரதா க/பெ. பாலாஜி மணிகண்டன், க.எண். 106, பெரியசாமி சாலை மேற்கு, ஆர்.எஸ் புரம், கோயம்புத்தூர் - 2 என்பவர் தனது 15.04.2008 ஆம் நாளைய மனுவில் கிரயப்பத்திரம் மூலம் தனக்கு பாத்தியப்பட்ட சௌரிபாளையம் கிராமம் சர்வே எண். 427 / 2B பகுதியில் உள்ள 14344 ச.அ (1332.59 ச.மீ) பரப்பளவுள்ள குடியிருப்பு பகுதி இடத்தை பொது உபயோகப் பகுதி நிலப் பயன்பாடாக மாற்ற அனுமதி வழங்குமாறு கேட்டுள்ளார்.

சிங்காநல்லூர் விரிவு அபிவிருத்தித் திட்டம் எண். 8, மற்றும் முழுமைத் திட்டத்தின்படி இடம் குடியிருப்பு பகுதியில் உள்ளது. அவினாசி சாலை மனைக்கு அணுகு சாலையாக உள்ளது. நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி குழு தனது 17.7.2008 –ம் தேதிய தீர்மான எண். 54 –ல் நில உபயோக மாற்றம் செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆகையால் சௌரிபாளையம் கிராமம் சர்வே எண். 427/ 2பி பகுதியில் உள்ள 14344 ச.அடி (1332.59 ச.மீ) பரப்பளவுள்ள குடியிருப்பு பகுதியை பொது உபயோகப் பகுதி நிலப்பயன்பாடாக மாற்றம் செய்வது குறித்து முடிவு செய்ய மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- அனுமதிக்கலாம். ந.க. எண். 5227 / 2008 / எச்2(வ)

---

**மா.ந.ம.தீர்மானம் எண் : 185 நாள் : 29.08.2008**

நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி குழு தீர்மானம் எண். 54 நாள் 17.07.08 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 58

கோயம்புத்தூர் மாநகரம், தேர்தல் வார்டு எண். 42/ நகரளவு எண். 535, 536, 537, 538, 540 –ன் வழியே அங்கீகரிக்கப்பட்ட நகரமைப்பு திட்ட எண். 10-ல் உத்தேசித்துள்ள சி.சி. 40 அடி அகல திட்ட சாலை அமைக்க உத்தேசிக்கப்பட்டு, பெரும்பாலான பகுதிகள் சாலையமைக்கப்பட்ட நிலையில் உள்ளது.

இச்சாலை செட்டிவீதி, அபிராமி நகர் மற்றும் செல்வபுரம் பைபாஸ் சாலையை இணைக்கும் வகையில் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இச்சாலையை அமைத்தால் செட்டிவீதி, அசோக்நகர், அபிராமி நகர் போன்ற பகுதிகளில் உள்ள மக்கள் செல்வபுரம் பைபாஸ் சாலையை எளிதில் சென்றடையலாம்.

இரண்டு சிறு நிலப்பகுதிகள் தனியார் வசம் உள்ளதால் இச்சாலையமைக்கும் பணி தடைபட்டுள்ளது.

மேற்படி நிலப்பரப்புகளை நில உரிமையாளர்களிடமிருந்து தானமாக பெறலாம். அவ்வாறு தர மறுக்கும் பட்சத்தில் நில ஆர்ஜிதம் மூலம் மாநகராட்சிப் பொறுப்பில் கையகப்படுத்தி சாலையமைக்கலாம் என்று நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் நகரமைப்பு குழு தனது தீர்மான எண். 57 நாள். 17.7.2008–ல் "இச்சாலையை உள்ளூர் திட்டக்குழுமம் நிதி மூலம் தேவைப்படின் நில ஆர்ஜிதம் செய்து சாலையமைக்க உரிய நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டது" என தீர்மானம் நிறைவேற்றி உள்ளதினை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- மாமன்றம் முடிவுசெய்யலாம். ந.க. எண். 5800 / 08 / எச்1 (தெ)

**மா.ந.ம.தீர்மானம் எண் : 186 நாள் : 29.08.2008**

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள சி.சி. 40 அடி அகல திட்ட சாலை அமைக்க தேவைப்படும் நிலத்தினை கட்டாய நில ஆர்ஜிதம் செய்யவும், நில ஆர்ஜிதம் செய்வதற்குண்டான தொகையினை மாநகராட்சி நிதியிலிருந்து செலவு செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 59

பொருள். கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - குமாரபாளையம் கிராமம் க.ச. எண். 514 / 2பா, 515, 518 / 1, 523 – 1ஏ, 1பி, 2 பாகம், மற்றும் 524 ல் உள்ள 5.51 1/2 ஏக்கர் விவசாய நிலத்தை குடியிருப்பு பகுதியாக மாற்ற அறிவிப்பு செய்து தருமாறு கோரி அரசு செயலர் அவர்களுக்கு மனுதாரர்களான திரு. வி. ராமசாமி, திருமதி. ஆர்.எம். அலமு மற்றும் திருமதி. ஆர்.என். மீனாட்சி ஆகியோர் விண்ணப்பித்துள்ளார்கள்.

- - * - -

உத்தேச நில உபயோக மாற்றம் கோரும் இடம் குமாரபாளையம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண். 7 –ல் முழுமைத்திட்டத்தின்படி விவசாய பயன்பாட்டில் உள்ளது. பேரூர் சாலை பிரியா நகரிலிருந்து தொடர்ச்சியாக செல்லும் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட, 25' அகல சாலை அணுகுசாலையாக உள்ளது. இச்சாலையை பின்னர் அபிவிருத்தி செய்து மாநகராட்சியிடம் ஒப்படைக்க வேண்டும்.

விவசாய பயன்பாட்டிலிருந்து குடியிருப்பு நில உபயோகமாக மாற்றம் செய்யக்கோரும் மனுதாரரின் மனுவை நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழு தீர்மான எண். 56, நாள். 17.7.2008 ம் "நில உபயோக மாற்றம் செய்ய" மாமன்றத்திற்கு பரிந்துரைத்துள்ளது. நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி குழுவில் பரிந்துரைக்கப்பட்ட நில உபயோக மாற்றம் தொடர்பான பொருள் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- மாமன்றத்தின் முடிவிற்கு. ந.க.எண். 6084 / 2008 / எச்1 (மே)

**மா.ந.ம.தீர்மானம் எண் : 187 நாள் : 29.08.2008**

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள 5.51 ½ ஏக்கர் விவசாய நிலத்தில் உள்ள வாரி புறம்போக்கினை விண்ணப்பதாரர்கள் எவ்விதத்திலும் சேதப்படுத்தக்கூடாது மற்றும் பொருளில் தெரிவிக்கப்பட்டுள்ள, மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட 25' அகல சாலையினை அபிவிருத்தி செய்து மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டும் என்கின்ற நிபந்தனைகளுடன் நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவின் தீர்மானம் எண். 56 நாள் 17.7.2008-ஐ ஏற்று பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள நிலத்தை விவசாய பயன்பாட்டிலிருந்து, குடியிருப்பு நில உபயோகமாக நில உபயோக மாற்றம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 60

திரு. ஆர். விஜயகோபால், திரு. ஆர். வெங்கிடபதி, திருமதி. தனலட்சுமி என்பவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி, உப்பிலிபாளையம் கிராமம், க.ச. எண்கள். 271 / 1 காமராஜர் சாலையில் உள்ள 55.25 செண்ட் நிலத்தினை தொழிற்சாலை நில பயன்பாட்டிலிருந்து குடியிருப்பு நில பயன்பாட்டிற்கு மாற்றம் செய்து வழங்குமாறு 23.4.2008 ம் தேதிய விண்ணப்பத்தில் கோரியுள்ளார்கள்.

மேற்படி மனையிடம் கோயம்புத்தூர் மாநகராட்சி தேர்தல் வார்டு எண். 9 –ல் காமராஜர் சாலையில் அமைந்துள்ளது. மனையிடம் சிங்காநல்லூர் விரிவு அபிவிருத்தித் திட்டம் எண். 1 –லும் முழுமைத்திட்டத்தின்படி தொழிற்சாலை பகுதியிலும் அமைந்துள்ளது. மனையிடத்தின் முன்புறமுள்ள காமராஜர் சாலை மாநகராட்சியின் பராமரிப்பில் உள்ளது. மேற்படி மனையிடத்தினை சுற்றிலும் குடியிருப்புகள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகள் அபிவிருத்தியடைந்து வருகின்றது. மனையிடத்தின் தென்புறத்தில் உள்ள கார்த்திகேயா ஸ்பின்னிங் மில்ஸ் மூடப்பட்டு, குடியிருப்பு வளாகம் கட்டிடம் கட்ட உத்தேசித்துள்ளது. மேலும் இப்பகுதி கலப்பு குடியிருப்பு பகுதியாக அபிவிருத்தி அடைந்து வருகிறது.

எனவே, கோயம்புத்தூர் மாநகராட்சி, உப்பிலிபாளையம் கிராம் க. ச. எண். 271/ 1 பாகத்தில் உள்ள

| | | |
|---|---|---|
| 271 / 1 B பாகம் | = | 13.25 சென்ட் |
| 271 / 1 C பாகம் | = | 31.00 சென்ட் |
| 271 / 1 D பாகம் | = | 7.00 சென்ட் |
| 271 / 1 E பாகம் | = | 1.00 சென்ட் |
| 271 / 1 F பாகம் | = | 3.00 சென்ட் |
| | | 55.25 சென்ட் |

பரப்புள்ள இடத்தினை தொழிற்சாலை நில உபயோகத்தில் இருந்து குடியிருப்பு நில உபயோகமாக மாற்றம் செய்ய கோரும் மனுதாரரின் கோரிக்கையினை மாமன்ற ஒப்புதல் பெற்று நகர் ஊரமைப்பு துறைக்கு அனுப்ப நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவின் முடிவுக்கு பொருள் வைக்கப்பட்டதில் நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழு தனது தீர்மான எண். 52 நாள்.17.7.2008-ல் "மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது" என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகர மன்றத்திற்கு பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- அனுமதிக்கலாம். ந.க. எண். 7308 / 2008 / எச்1 கி

**மா.ந.ம.தீர்மானம் எண் : 188 நாள் : 29.08.2008**

நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழு தீர்மானம் எண். 52 நாள் 17.7.2008-ஐ ஏற்று பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள 55.25 சென்ட் நிலத்தினை தொழிற்சாலை நில பயன்பாட்டிலிருந்து குடியிருப்பு நில பயன்பாட்டிற்கு மாற்றம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 61

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பாதாள சாக்கடை திட்டத்தில், கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட 54 வது வார்டு உக்கடம் பகுதியில் கழிவுநீர் பண்ணை அமைந்துள்ள இடத்தில் 70 எம்.எல்.டி. கொள்ளளவு கொண்ட நவீன கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் கட்டுமானப் பணிகள் ரூ.56.33 கோடி செலவில் துவக்கப்பட்டுள்ளது.

உக்கடம் கழிவுநீர் பண்ணையின் நகரளவு சர்வே எண் 148/1 பகுதி, 158,153/1, 154, 159/பகுதி 169/1 மற்றும் 168 கோவை ரூரல் எண் 47—ல் உள்ளதும், சுமார் 10.68 ஏக்கர் பரப்பில் அமைய உள்ள நவீன கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் கடந்த இரு வருடங்களாக சுமார் 4000 எண்ணிக்கை கொண்ட தைல மரங்கள் வளர்ந்துள்ளது. நவீன கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு ஒதுக்கப்பட்ட நிலத்தில் கட்டுமான பணிகளுக்கு இடையூறாக மட்டும் சுமார் 400 எண்ணிக்கை கொண்ட தைல மரங்களை வெட்டி அப்புறப்படுத்த வேண்டியுள்ளது.

தைல மரங்களை அப்புறப்படுத்தினால் மட்டுமே சுத்திகரிப்பு நிலைய கட்டுமான பணிகள் மேற்க்கொள்ள இயலுமென்பதால், கட்டுமானப்பணி வரும் இடத்தில் வரும் சுமார் 400 எண்ணிக்கை கொண்ட தைலமரங்களை வெட்டி அப்புறப்படுத்த, அதனை பொது ஏலம் மற்றும் மூடிமுத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மூலம் விடப்பட்டு வரப்படும் நிதியினை மாநகராட்சி கணக்கில் வரவு வைக்க நடவடிக்கை மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: உக்கடம் பகுதி, கழிவுநீர் பண்ணையில் அமைக்கப்படவுள்ள பாதாள சாக்கடை திட்ட நவீன சுத்திகரிப்பு நிலைய கட்டுமான பணிகள் வருமிடத்தில் சுமார் 400 எண்ணிக்கை கொண்ட தைல மரங்களை மாவட்ட வன அலுவலர் அவர்களின் மதிப்பீடு மற்றும் அறிக்கையினை பெற்று வெட்டி அப்புறப்படுத்த பொது ஏலத்தில் விட மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 10214/08/JN2

**மா.ந.ம.தீர்மானம் எண் : 189 நாள் : 29.08.2008**

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 62

ஜவகர்லால்நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்தவும், தற்போது இயக்கத்திலுள்ள பாதாள சாக்கடை திட்டத்தினை புனரமைக்கவும் ரூ. 377.13 கோடி மதிப்பில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி3) துறையின் அரசாணை ( 3 டி ) எண் 25 நாள் 24.10.2007–ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

மேற்படி பணிக்கான மதிப்பீடு கீழ்கண்டவாறு 6 பணித்தொகுப்புகளாக பிரிக்கப்பட்டன.

| வ. எண் | பணித் தொகுப்பு | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1. | பணி – I | மண்டலங்கள் – I, II, V மற்றும் VI –ல் கழிவு நீர் குழாய்கள் அமைக்கும் பணி. | 6918.00 |
| 2. | பணி – I I | மண்டலங்கள் – III மற்றும் VII-ல் கழிவு நீர் குழாய்கள் அமைக்கும் பணி. | 5221.00 |
| 3. | பணி – III | மண்டலங்கள் – IV மற்றும் VIII-ல் கழிவு நீர் குழாய்கள் அமைக்கும் பணி. | 10301.00 |
| 4. | பணி – IV | உக்கடம் கழிவு நீர் பண்ணையில் 70 எம்.எல்.டி. கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி | 5637.00 |
| 5. | பணி – V | நஞ்சுண்டாபுரம் பகுதியில் 40 எம்.எல்.டி. கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி. | 3463.00 |
| 6. | பணி – VI | ஒண்டிபுதூர் பகுதியில் 60 எம்.எல்.டி. கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி. | 5121.00 |

மேற்கண்ட பணித் தொகுப்புகளில் பணி தொகுப்பு I மண்டலங்கள் – I, II, V மற்றும் VI –ல் கழிவு நீர் குழாய்கள் அமைக்கும் பணிக்கு 09.04.2008–ல் முதன் முறையாக தொழில் நுட்ப தகுதி ( Technical Bid ) மற்றும் ஒப்பந்த விலைப்புள்ளி (Financial Bid) பெறப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு நிறுவனங்கள் கலந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியது.

1. **M/S SUBAYA CONSTRUCTIONS PVT LIMITED, CHENNAI.**
   (மெசர்ஸ். சுப்பையா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.)

2. **M/s. TCL & SEW, (JV)CONSTRUCTIONS LIMITED, HYDRABAD.**

   (மெசர்ஸ். டிசிஎல் அன்டு எஸ் இ டபிள்யூ, கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் லிமிடெட், ஹைதராபாத்.)

மேற்படி இரண்டு நிறுவனங்களின் தொழில் நுட்ப தகுதியினை மாநகராட்சி ஒப்பந்த கூராய்வு குழு முழு ஆய்வு செய்யப்பட்டு சென்னையிலுள்ள Technical Standing Committee (தொழில்நுட்ப வழிகாட்டும் கூட்டம்) பரிசீலனையின் மூலம் தொழில்நுட்ப ரீதியில் M/S SUBAYA CONSTRUCTIONS PVT LIMITED, CHENNAI என்ற நிறுவனம் தகுதி பெற்றதனை தொடர்ந்து மேற்படி நிறுவனத்தின் விலை குறித்தான ஒப்பந்தவிலைப்புள்ளி உறை (Price Bid) 20.05.2008–ல் திறக்கப்பட்டு, ஒப்புநோக்குப் பட்டியல் தயாரிக்கப்பட்டது. அதன்படி மேற்படி நிறுவனத்தார் வழங்கிய விலைப்புள்ளி 2007–08 ம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட விலை விகிதப்படி 102.43 % இருந்ததனை தொடர்ந்து மேற்படி நிறுவனத்திடம் பொறியியல் நடை முறை விதிகளின் படி விலை குறைப்பு கோரப்பட்டதில் மேற்படி நிறுவனத்தார் 30.05.2008–ல் விலை குறைப்பு செய்து சம்மதக் கடிதம் அளித்தார்கள். அதன்படி விலை குறைப்பிற்கு பின்னர் அவர்களது விலைப்புள்ளி 66.63% மதிப்பீட்டினைக் காட்டிலும் கூடுதலாக இருந்தது. மேலும் இந்த விலைப்புள்ளி நடப்பு ஆண்டு தரப்படுத்தப்பட்ட விலைவிபரபட்டியல்படி 50.51% கூடுதலாகவும் இருந்தது.

மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மாமன்றத்தின் தீர்மானப்படி (மா.ம.தீ.எண்.128 நாள்.17.06.08) ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவிற்கு அனுப்பப்பட்டு மேற்படி குழு கூட்டம் 22.07.08ல் நடைபெற்றது. இக்குழுவினர் இந்த ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பாக இருந்ததாலும் மதிப்பீட்டினைக் காட்டிலும் 66.63% கூடுதலாக இருந்ததால் இந்த ஒப்பந்தப்புள்ளியினை ரத்து செய்தும், மதிப்பீட்டினை 2008–09–ம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட விலைவிகிதத்திற்கு மாற்றம் செய்து மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு பரிந்துரை செய்துள்ளனர்.

எனவே மேற்கண்ட மதிப்பீடு நடப்பு ஆண்டு விலை விகிதத்திற்கு (2008–09) திருத்தி மதிப்பீடு ரூ.7805 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு ஆகும் கூடுதல் செலவினம் ரூ.887 இலட்சம் மாமன்றத்தின் பொது நிதியில் ஈடு செய்யலாம்.

அலுவலகக் குறிப்பு –

(அ) ஒப்பந்தம் உறுதி செய்யும் குழுவின் பரிந்துரையினை ஏற்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.

(ஆ) திருத்திய மதிப்பீடு தொகைக்கு அங்கீகாரம் அளித்து கூடுதல் ஆகும் தொகையை மாநகராட்சியின் பொதுநிதியிலிருந்து ஈடு செய்யலாம்.

ந.க.எண் 12069 /06 /எம்.டி.3 (தொகுப்பு I)

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 190 நாள் : 29.08.2008</u>

ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவின் பரிந்துரையினை ஏற்று மறு ஒப்பந்தப்புள்ளி கோர தீர்மானிக்கப்பட்டது.

2008-09 ம் ஆண்டு விலை விகிதத்தின்படி தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீடு ரூ. 7805/- இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கவும், மதிப்பீட்டுத்தொகையைவிட கூடுதல் தொகை ரூ. 887/- இலட்சத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

பொருள் எண் 63

கோவை மாநகராட்சிக்கென தனி குடிநீர் திட்டமான பில்லூர் II திட்டம், ஜவகர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள அரசு ஆணை எண். 160 ந.நி.ம.கு.வ.துறை (எம்.ஏ II) 17.04.07 மற்றும் அரசு ஆணை (டி) எண் 551 ந.நி.ம.கு.வ.துறை (எம்.எ II) 13.11.07 ன் படி ரூ. 113.74 கோடி செலவில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இத்திட்டப்பணி ஆறு (6) பகுதிகளாக பிரிக்கப்பட்டு அதில் பகுதி ஐந்து (5) பணியான ''கட்டன் மலை குகை வெளியேற்றத்திலிருந்து ராமகிருஷ்ணாபுரம் மேல்நிலைத் தொட்டி வரை 1000 முதல் 1500 எம்.எம் வரை எம்.எஸ். (MS), மற்றும் பி.எஸ்.சி (PSC) குழாய் அமைத்தல் பணி''யின் மதிப்பீடு ரூ. 4587.50 இலட்சத்திற்கு கடந்த 15.11.07 அன்று முதல் அழைப்பு மூலம் உலகளாவிய ஒப்பந்த விலைப்புள்ளி கோரப்பட்டது.

முதல் அழைப்பில் வரப்பட்ட ஏழு நிறுவனங்களின் ஒப்பந்த விலைப்புள்ளிகளில், ஆறு நிறுவனங்கள் தகுதி பெற்றன. தகுதிபெற்ற நிறுவனங்களில் குறைந்த ஒப்பந்த விலைப்புள்ளி வழங்கிய மெஸ்ஸர்ஸ் சுபாஷ் பிராஜெட் & மார்க்கெட்டிங் லிமிடெட், பெங்களூர் என்ற நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளி தொகையான ரூ 55,77,34,821/– (ரூபாய் ஐம்பத்தைந்தாயிரத்து கோடி எழுபத்து ஏழு லட்சத்து முப்பத்துநான்காயிரத்து எண்ணூற்று இருபத்து ஒன்று மட்டும்) மதிப்பீட்டுத் தொகைக்கு 14.41% சதவீதம் கூடுதலாக இருந்தாலும், மாமன்றம் தமது தீர்மான எண் 269 நாள் 27.03.08ன்படி மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த விலைபுள்ளியினை ''ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு''வின் பரிசீலனைக்கு அனுப்ப தீர்மானித்தது. ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு கடந்த 11.04.08ல் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தவிலைப்புள்ளியினை பரிசீலனை செய்து நடப்பாண்டு (2008–09) விலைவிபர பட்டியலுக்கு ஒப்பந்தவிலைப்புள்ளி குறைவாக உள்ளதால் ஒப்பந்தவிலைப்புள்ளியினை ஏற்க பரிந்துரை செய்ததை ஏற்று பணி ஒப்புதல் கடிதம் மெஸ்ஸர்ஸ் சுபாஷ் பிராஜெட் & மார்க்கெட்டிங் லிமிடெட், பெங்களூர் நிறுவனத்திற்கு கடந்த 12.04.08ல் அனுப்பப்பட்டது. மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளியினை மாமன்றம் தனது தீர்மானம் எண். 27 நாள். 28.05.08 ல் ஏற்க தீர்மானித்து ஒப்புதல் அளித்தது.

மேற்படி நிறுவனம் பணியினை மேற்கொள்ள மாநகராட்சியுடன் ஒப்பந்தபத்திரம் ஏற்படுத்த பணியினை துவக்க (Agreement) முன்வராமல் காலதாமதம் ஏற்படுத்தியதோடு இல்லாமல், கட்டுமானப் பொருட்களின் விலை ஏற்றத்தால் பணி மேற்க்கொள்ளும் காலத்தில் கட்டுமானப்பொருட்களின் விலை ஏற்றத்திற்கு தகுந்தாற்போல் விலை உயர்வு தொகை (Price escalation) நிறுவனத்திற்கு வழங்க வேண்டி, அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கல் துறை , சென்னை அவர்களுக்கு மேல்முறையீடு (Appeal) செய்தது. மாநகராட்சி இப்பணியின் ஒப்பந்தப்புள்ளியில் தெரிவிக்கப்பட்டுள்ள வரைமுறைகளில் (Bid Conditions) குறிப்பிட்டுள்ள விதிகளின்படி நடவடிக்கை எடுத்து, நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளியுடன் இணைத்து வரப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு 1% சதவீதத்திற்குண்டான முன்வைப்பு தொகைக்கான வங்கி உத்தரவாத வைப்பு நிதியான ரூ. 45.81 இலட்சத்தினை (Bank Guarantee) பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுத்தது. இது குறித்து நிறுவனம், நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து வங்கி உத்திரவாத வைப்பினை பறிமுதல் செய்யவதற்கு இடைக்கால தடை உத்தரவு பெற்றது. நீதிமன்றம் அரசிற்கு அனுப்பப்பட்ட முறையீட்டு மனுவின் முடிவினை ஏற்று நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவு பிறப்பித்தது.

இதன்பேரில் மாநகராட்சி விரிவான பதிலினை அரசிற்கு சமர்ப்பித்து அதன் பேரில் அரசு தனது அரசாணை எண்.140 (ந.நி.ம.கு.வ) துறை (எம். சி. 2 ) நாள்.29.07.2008–ல் மேற்படி நிறுவனத்தின் முறையீட்டு மனுவினை பரிசீலித்து மனுவினை தள்ளுபடி செய்தும், நிறுவனத்தால் முன்வைப்பு தொகைக்காக செலுத்தப்பட்ட ஐ.டி.பி.ஐ பெங்களூர் வங்கி உத்திரவாத வைப்புத் தொகையான ரூ.45.81 இலட்சத்தினை மாநகராட்சிக்கு பிடித்தம் செய்ய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை சரியானது என குறிப்பிட்டு பிறப்பித்த ஆணை, மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

இப்பணிக்கு மறு ஒப்பந்தவிலைப்புள்ளி கோருவதற்கு, மதிப்பீடு 2008–09ம் ஆண்டின் தரப்படுத்தப்பட்ட விபரப்பட்டியலுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டதில், திருத்திய மதிப்பீடு ரூ. 56.00 கோடி (ரூபாய் ஐம்பத்தாறு கோடி) ஆகுமென தெரியவருவதால், மேற்படி திருத்தியமதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: (அ) ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவின் பரிந்துரையினை ஏற்று மெஸ்ஸர்ஸ் சுபாஷ் பிராஜெட் & மார்க்கெட்டிங் லிட், பெங்களூர் அவர்களின் ஒப்பந்தவிலைப்புள்ளியினை மாமன்றம் தனது தீர்மான எண் 27 நாள் 28.05.08 ஏற்றுக்கொள்ள ஒப்புதல் அளித்ததை மாமன்றம் ரத்து செய்யலாம்.

(ஆ) அரசானை எண் 140 ந.நி.(ம) நிர்வாக துறை (எம்.சி.2) நாள் 29.07.08 ஐ மாமன்றம் பதிவு செய்யலாம்.

(இ) 2008/09 ம் ஆண்டின் தரப்படுத்தப்பட்ட விலைப் பட்டியலின் படி தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீடு ரூ.56.00 கோடியில், திருத்திய தொழில்நுட்ப அனுமதி பெற்று, தேசிய அளவிலான மறு ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ஈ) அரசின் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகைக்கும் கூடுதலாகும் செலவினத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 4614 / 08 / JN2

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 191 நாள் : 29.08.2008</u>

1. மாமன்ற தீர்மானம் எண். 27 நாள் 28.05.08-ன்படி தி/எ். சுபாஷ் ப்ராஜெக்ட் & மார்கெட்டிங் லிட், பெங்களூர் அவர்களுக்கு ஒப்புதல் அளித்ததை ரத்து செய்ய தீர்மானிக்கப்பட்டது.

2. அரசாணை எண். 140 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, (எம்.சி. 2) பதிவு செய்யப்பட்டது.

3. 2008-09 ம் ஆண்டிற்கான தரப்படுத்தப்பட்ட விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீடு ரூ. 56.00 கோடிக்கு, திருத்திய தொழில்நுட்ப அனுமதி பெறவும், தேசிய அளவிலான மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் தீர்மானிக்கப்பட்டது.

4. அரசின் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகைக்கும் கூடுதலாக உண்டாகும் செலவினத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 64

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் -சீனிவாசபுரம் மாநகராட்சி திருமண மண்டபம் பராமரிக்க ஒதுக்கீடு செய்யப்பட்ட உரிமக்காலம் மேலும் ஓராண்டு காலம் நீட்டிப்பது-தொடர்பாக.

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் சீனிவாசபுரம் மாநகராட்சி திருமண மண்டபம் தனியாருக்கு பராமரிக்க ஒதுக்கீடு செய்யப்பட்ட உரிமக்காலம் 09.07.2008-உடன் முடிவடைந்துள்ள நிலையில், மீண்டும் ஏலம் நடத்த வேண்டியது அவசியமாக உள்ள நிலையில், மேற்கண்ட திருமண மண்டபம் உள்ள இடத்தில் பலமாடி வாகனம் நிறுத்துமிடம் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட திருமண மண்டபம் உள்ள இடத்தில் உள்ள காலியிடத்தையும் கட்டிட பகுதிகளையும் இணைத்து பலமாடி வாகனம் நிறுத்துமிடம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், இப்பணிகள் துவங்க ஓராண்டு காலம் ஆகுமென நிர்வாக பொறியாளர் தனது 23.07.2008-ம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார்.

எனவே, தற்போது மீண்டும் ஏலம் நடத்தி தனியார் பராமரிப்பதற்கு ஒதுக்கீடு செய்ய குறைவான காலம் உள்ளதால் பழைய உரிமதாரருக்கே மேலும் ஓராண்டிற்கு 10.07.2008 முதல் நீடித்து வழங்கலாம்.

கடைசியாக செலுத்தப்பட்ட உரிமக்கட்டணம் ரூ. 1,51,250/- ல் 15% உயர்வு செய்து ரூ. 1,73,938/-- என நிர்ணயம் செய்து 10.07.2008 முதல் 09.07.2009 முடிய மேலும் ஓராண்டு காலத்திற்கு நீட்டித்து வழங்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவர் அனுமதி பெற்று மாமன்றத்தின் ஒப்புதலுக்காக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண் 13081/2003/அ4 (வ)

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 192 நாள் : 29.08.2008</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 65

உள்ளாட்சிகளின் புதுப்பிக்க கூடிய எரிசக்தி முன்மாதிரி வரைவு திட்டத்திற்கு (Local Renewable Model Communities Network Project), ஜெர்மன் அரசின் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சி அமைச்சகம் (BMZ) மற்றும் சர்வதேச அளவிலான உள்ளாட்சி நிறுவனங்களின் சுற்றுப்புறச் சூழல் நிறுவனம் (ICLEI) இணைந்து அகில இந்திய அளவில் கோயம்புத்தூர், நாக்பூர் மற்றும் புவனேஷ்வர் நகரங்களை தெரிவு செய்துள்ளதை சர்வதேச அளவிலான உள்ளாட்சி நிறுவனங்களின் சுற்றுப்புறச் சூழல் நிறுவனத்தின் (ICLEI) நிர்வாக இயக்குனரின் கடிதம் நாள்:08.05.2008–ல் தெரிவிக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சுற்றுப்புறச் சூழல், புதுப்பிக்க கூடிய எரிசக்தி பயன்பாடு, வாகன புகை மற்றும் கழிவு வாயு (GHG) ஆகியவைகள் குறித்து இன்றைய சூழ்நிலைகளின் தேவைகளுக்கு ஏற்ப விரிவான ஆய்வுகள் மற்றும் திட்டங்கள் தயாரித்தல் சம்மந்தமாக கீழ்க்காணும் நோக்கங்கள் மற்றும் வரையறைகளுக்கு உட்பட்டு ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளும் கருத்துரு மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.

<u>திட்டத்தின் முக்கிய வரையறைகள்:</u>

- கோவை மாநகரின் அத்தியாவசியமான வசதிகள் முறையே தெருவிளக்கு பராமரிப்பு, குடிநீர் வழங்கல், திடக்கழிவு மேலாண்மை மற்றும் போக்குவரத்து மேம்பாடு போன்ற அம்சங்களில் உள்ள முக்கியத்துவம் குறித்து புள்ளி விவரங்கள் சேகரித்தல் ( Survey / Data Collection )
- அனைத்து வாகனங்கள் மற்றும் திடக்கழிவுகள் ஆகியவற்றிலிருந்து வெளியேற்றப்படும் வாயுக்களின் அளவை கண்டறிதல், அவற்றை கணிசமாகவும் மற்றும் படிப்படியாகவும் குறைக்க வேண்டிய வழி முறைகளை கண்டறிதல்.
- இன்றைய மின்சக்தி உபயோகத்திற்கு ஒரு மாற்றாக சூரிய ஒளி மற்றும் காற்று மூலம் புதுப்பிக்க கூடிய எரிசக்தியை கடைபிடிக்கும் பொருட்டு தொழில் நுட்பங்களை பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் செயல் படுத்துதல்.
- இத்திட்டத்தில் இணைவதன் மூலம் தென் மாநில அளவில் மற்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கு புதுப்பிக்க கூடிய எரிசக்தி பயன்பாட்டில் வழிகாட்டியாகவும், முன் மாதிரியாகவும் திகழுதல்.
- சர்வதேச அளவில் இந்த திட்டத்தின் கீழ் செயல்பட உள்ள மற்ற உள்ளாட்சிகளுடன் ஒன்றாக இணைந்து செயல்படுதல்.
- சர்வதேச அளவிலான உள்ளாட்சி நிறுவனங்களின் சுற்றுப்புறச் சூழல் நிறுவனம் (ICLEI), கோவை மாநகரில் உருவாகும் சுற்றுப்புற சூழலை பாதிக்கும் வெளியேற்றப்படும் வாயுக்களின் அளவை கண்டறிந்து, அதை கணிசமாகவும் மற்றும் படிப்படியாகவும் குறைக்கும் வகையில் முன் வடிவு திட்டம் தயாரித்தல்.
- மேலும் இத்துறை கோவை மாநகரை புதுப்பிக்கக்கூடிய எரி சக்தி பயன்பாட்டில் உறுதுணையாக செயல்பட்டு மேம்படுத்துதல்.

- இத்திட்டத்திற்கான கால அளவு இரண்டு ஆண்டுகள்.
- இதன் தொடர்பாக சர்வதேச அளவிலான உள்ளாட்சி நிறுவனங்களின் சுற்று சூழல் நிறுவனம் (ICLEI) எரிசக்தி பயன்பாட்டு மையத்தை இம்மாநகராட்சியின் பிரதான அலுவலகத்தில் அமைத்து, அதில் புதுப்பிக்ககூடிய எரிசக்தி உபயோகத்திற்கு பயன்படும் கருவிகளை முன்மாதிரியாக நிறுவுதல் மற்றும் பொது மக்களுக்கு விளக்கி விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
- மின் சக்தியை படிப்படியாக குறைந்த அளவில் பயன்படுத்துவதற்கு உறுதுணையான கருவிகளை முன்மாதிரி திட்டமாக ICLEI செயல்படுத்துதல்.
- இத்திட்டத்தின் கீழ் பயன்பாட்டு மையம் அமைத்தல், முன் வடிவு திட்டம் தயாரித்தல் மற்றும் செயலாக்கம் ஆகியவற்றுக்கான செலவினை சர்வதேச அளவிலான உள்ளாட்சி நிறுவனங்களின் சுற்றுப்புறச் சூழல் நிறுவனம் (ICLEI) ஏற்றுக் கொள்ளுதல்.
- இத்திட்டத்தின் கீழ் மேற்கண்ட பயன்களை பெறுவதற்கு சர்வதேச அளவிலான உள்ளாட்சி நிறுவனங்களின் சுற்று சூழல் நிறுவனம் (ICLEI) அமைப்பில் கோயம்புத்தூர் மாநகராட்சியினை அங்கத்தினராக இணைந்து கொள்ள ரூ. 17,710/– செலுத்திட வேண்டும்.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண் 2151/2004/ப.வ.(எம்)

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 193 நாள் : 29.08.2008</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 66

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - சாஸ்திரி மைதானம் - 23.09.08 முதல் 13.10.08 வரை துர்கா பூஜை நடத்த வாடகை அடிப்படையில் அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டுதல் - சம்பந்தமாக.

---------------

கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலத்திற்குட்பட்ட சாஸ்திரி மைதானத்தில் உள்ள காலியிடத்தினை உத்திரபிரதேச ஜன்ஹித் சேவா சன்ஸ்தன் என்பவர்களுக்கு துர்கா பூஜை நடத்தும் பொருட்டு 23.09.08 முதல் 13.10.08 வரை அனுமதி கேட்டு 8.5.08 ம் தேதியில் விண்ணப்பித்துள்ளார். மேற்படி திருவிழா நடத்துவதற்கு மாநகர காவல்துறை மற்றும் தீயணைப்புத்துறையின் தடையின்மை சான்று பெற்று வழங்குமாறு 27.05.08 ம் தேதி கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி விண்ணப்பதாரர் 22.7.08-ம் தேதி தீயணைப்புத் துறையினரிடமிருந்து தடையின்மை சான்று பெற்று விண்ணப்பித்துள்ளார். இருப்பினும் காவல்துறை சான்றிதழ் வழங்குவதற்கு மாநகராட்சி அனுமதி உத்திரவு இருந்தால்தான் காவல்துறை அனுமதி வழங்க இயலும் என்று காவல்துறை வாய்மொழி மூலமாக தெரிவித்துள்ளதாக விண்ணப்பதாரர் தெரிவித்துள்ளார்.

ஆகவே மேற்படி மைதானத்திற்கு நான் ஒன்றுக்கு வாடகை ரூ. 1000/- வீதம் 21 நாட்களுக்கு ரூ. 21,000/- மற்றும் முன்பணம் ரூ. 10,000/- ம் பெறலாம்.

மாமன்ற அனுமதி வேண்டி மன்றத்தாள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் 4763/08/D2 மே

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 194 நாள் : 29.08.2008</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 67

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - கவுண்டம்பாளையம் கிராமம் க.ச.எண். 55/1 மற்றும் 56/1-ல் 1 ஏக்கர் 71 சென்ட் 309 சதுரடி நிலத்தினை தமிழ்நாடு மின்சார வாரியம் துணை மின் நிலையம் அமைக்க கோவை மாநகராட்சியானது தமிழ்நாடு மின்சார வாரியம், கவுண்டம்பாளையம் அவர்களுக்கு கிரய விற்பனை செய்வது குறித்து.

பார்வை - மேற்பார்வை பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம் அவர்களின் கடிதம் Lr.No.SE/CEDC/M/AEE/DEV/AE.F. Kavundampalayam/ D.1587/08 நாள் 5.7.08

--------------

பார்வையில் காண் கடிதப்படி கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், கவுண்டம்பாளையம் கிராமம் க.ச. எண். 55/1 மற்றும் 56/1 –ல் 1 ஏக்கர் 71 சென்ட் 309 சதுரடி நிலத்தினை தமிழ்நாடு மின்சார வாரியம், துணை மின் நிலையம் அமைக்க ரூ. 70,30,880/- தொகை (நிலத்தினை வாங்குவதற்கு உரிய தொகை) தமது தலைமை அலுவலகத்தில் பெறப்பட்டுள்ளதால் தமது TNEB அலுவலகம் மூலம் மேற்காண் தொகை ரூ. 70,30,880/- செலுத்த தயாராக உள்ளதாக தெரிவித்துள்ளதுடன், 110/22-11 KV உப மின் நிலையம் ஆரம்ப கட்ட பணிகள் செய்வதற்கு “நுழைவு அனுமதி ”வழங்கும்படி கேட்டுள்ளார்.

மேற்காண் தொகை 24.5.2006-ம் நாளைய அரசு வழிகாட்டி மதிப்பின்படி, (ரூ. 94/- சதுரடி ஒன்றுக்கு) அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டது. நாளது நிலவரத்தின்படி நிலமதிப்பு பன்மடங்கு உயர்ந்துள்ளதால் நிலத்திற்குரிய திருத்திய தற்போதைய சந்தை விலை அல்லது வழிகாட்டி பதிவேட்டு மதிப்பு அதில் எது அதிகமோ அந்த மதிப்பினை தயார் செய்து தரும்படி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களிடம் 12.4.08-ல் மாநகராட்சியின் மூலம் கோரப்பட்டுள்ளது. நாளதுவரை விபரங்கள் பெறப்படவில்லை.

இந்நிலையில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான நிலம் கவுண்டம்பாளையம் கிராமம் க.ச.எண். 55/1 மற்றும் 56/1-ல் 1 ஏக்கர் 71 சென்ட் 309 சதுரடி நிலத்தினை நில உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக மாமன்றத்தின் முடிவுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - மாமன்றத்தின் முடிவுக்கு ந.க.எண். 10462/04/எச்-1 மே

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 195 நாள் : 29.08.2008</u>

கோவை மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் கடிதம் ந.க.எண். 17597/2008/ ஊ 3 நாள். 12.08.08 -ன்படி க.ச. எண் 55/1 மற்றும் 56/1 –க்கு சதுரடி ரூ. 200/- என நிலமதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நில மதிப்பு சதுரடி ஒன்றிற்கு ரூ. 200/- என்ற அடிப்படையில் 1 ஏக்கர் 71 சென்ட் 309 சதுரடி நிலத்திற்கு ரூ. 1,49,73,000/- செலுத்தக்கோரி மின்சார வாரிய மேற்பார்வை பொறியாளரை கேட்டுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

தமிழ்நாடு மின்சார வாரிய மேற்பொர்வை பொறியாளரின் 15/7/08 ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ள ரூ. 70,30,880/-ஐ பெற்றுக்கொண்டு பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான கவுண்டம்பாளையம் கிராமம் க.ச.எண். 55/1 மற்றும் 56/1-ல் 1 ஏக்கர் 71 சென்ட் 309 சதுரடி நிலத்தில் 110/22-11KV உப மின்நிலையம் அமைக்க, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு நுழைவு அனுமதி வழங்க தீர்மானிக்கப்பட்டது.

ரூ. 70,30,880/- போக மீதமுள்ள தொகையான ரூ. 79,42,120/- ஐ மின்சார வாரியத்திடமிருந்து பெற்றுக்கொண்டு, மேற்படி 1 ஏக்கர் 71 சென்ட் 309 சதுரடி நிலத்தினை கிரய விற்பனை செய்து கொடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 68**

பொருள் - கோவை மாநகராட்சி, மேற்கு மண்டலம், வார்டு எண்.34 இராமலிங்கம் காலனி மீனாட்சி மகப்பேறு மருத்துவமனைக்கு கூடுதல் கட்டிடம் கட்டுதல் - நிர்வாக அனுமதி தொடர்பாக.

-------------

கோவை மாநகராட்சி, மேற்கு மண்டலம், வார்டு எண்.34-க்குட்பட்ட மாநகராட்சி மீனாட்சி மகப்பேறு மருத்துவமனைக்கு கூடுதலாக மருந்துகம், பண்டகசாலை, பிரசவ அறைகள் மற்றும் களப்பணியாளர்களுக்கான அறைகள் மற்றும் சுற்றுச்சுவர் உயர்த்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள மகப்பேறு மருத்துவமனை மருத்துவ அலுவலர் வேண்டுகோளின் பேரில் ரூ.25,00,000/-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நிர்வாக பொறியாளரால் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- அனுமதிக்கலாம் ந.க.எண்.7920/ 08 / எம்.டி.4

**மா.ந.ம.தீர்மானம் எண் : 196 நாள் : 29.08.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 69**

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி-பணியமைப்பு - திரு. ம. சுந்தரராஜன், மாமன்ற செயலாளர் - வீடு வாங்க முன்பணம் அனுமதித்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக.

----------

கோயம்புத்தூர் மாநகராட்சியில் மாமன்ற செயலாளராகப் பணிபுரிந்து வரும் திரு. ம. சுந்தரராஜன் அவர்கள், ஒத்தக்கால் மண்டபம் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட க. ச. நெ. 658/9, 658/2,5,7 காலைகளில் அமைந்துள்ள சி.ஆர்.எம். விஷன் சிட்டி மனையிட எண். 4-ல் கட்டப்பட்டுள்ளதும், நெ. 4, பன்னீர்செல்வம் வீதி (தெற்கு), ஒத்தக்கால் மண்டபம், கோவை என்ற விலாசத்தில் உள்ளதுமான ஆர்.சி.சி. வீட்டை அதன் உரிமையாளர்களான 1). திருமதி. முத்துலட்சுமி, 2. திரு பா. ஜான்பிலிப் 3. திரு பா. ஜான் டேவிட் ஆகியோரிடமிருந்து விலைக்கு வாங்க நிர்வாக அனுமதியும், மாநகராட்சி பணியாளர்களுக்கு வழங்கப்படும் மாநகராட்சி வீடு கட்ட முன்பணம் நிதியிலிருந்து ரூ. 6,00,000/- முன்பணமும் வழங்கக் கோரி விண்ணப்பித்துள்ளார்.

மேற்படி வீட்டை விலைக்கு வாங்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அரசு வீடு கட்ட முன்பணம் வழங்குதல் விதிகளின்படியும், மாநகராட்சி விதிகளின்படியும் முன்பணம் பெற தகுதி பெற்றுள்ளார்.

எனவே இவருக்கு தற்போதுள்ள அரசு விதிமுறைகளின்படியும், மாநகராட்சி விதிமுறைகளின்படியும் ரூ. 6,00,000/- வீடு கட்ட முன்பணம் ஒரே தவணையில் வழங்கலாம்.

அரசு விதிகளின்படி, இவருக்கு வழங்கும் முன்பணத் தொகையினை 175 மாத சம தவணைகளிலும், அசல் தொகைக்கான வட்டித்தொகையினை 60 மாத சம தவணைகளிலும் மொத்தம் 235 மாத தவணையில் பிடித்தம் செய்து கொள்ளலாம்.

எனவே இவருக்கு மேற்கண்ட வீட்டை விலைக்கு வாங்க முன்பணம் ரூ. 6,00,000/- ஐ "வீடு கட்ட முன்பணம்" என்ற கணக்கு தலைப்பின்கீழ் பொது நிதியிலிருந்து வழங்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு -அனுமதிக்கலாம். ந.க.எண். 9885 /08 /எம்.சி. 2

**மா.ந.ம.தீர்மானம் எண் : 197 நாள் : 29.08.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 70

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் வார்டு எண். 55
வேளாங்கண்ணி ஆரோக்கிய மாதா ஆலயத்திற்கு வரிவிலக்கு
அளிக்கக் கோரியது-தொடர்பாக.

----------

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண். 55 திரு ஃபாதர் பாரீஸ் பிரிஸ்ட் அன்னை வேளாங்கண்ணி சர்ச் தெலுங்குபாளையம் ஆஸ்பத்திரி எதிரில் பேரூர் மெயின் ரோடு செல்வபுரம் என்ற கோவில் டிரஸ்ட் சொத்து வரி விலக்கு கோரி விண்ணப்பித்துள்ளார்.

விற்கிரயப் பத்திர எண். 2272 நாள் 25.8.1988-ல் குமாரபாளையம் கிராமம் க.ச.எண். 225/2, 224/1 நெ. காலையிலுள்ள விவசாய பூமி 0.47 சென்ட் பூமியை எ. முடியப்பன் அவர்களுக்கும், அவர்களுக்குப்பின் மற்றும் ஸ்தாபனப் பொறுப்பை வகிப்பவர்களுக்கும் என திரு டி.ஆர். நஞ்சப்பன் என்பவர் கிரயம் செய்து கொடுத்துள்ளார். இதன் அரசு வழிகாட்டி மதிப்பு ரூ. 1,83,300/-.

மற்றும் பத்திர எண். 3498 நாள் 16.12.1988-ல் குமாரபாளையம் கிராமம் க.ச.எண். 225/2, 224/1 நெ. காலையிலுள்ள 53 சென்ட் 18-3/4 சதுரடி பூமியை ஜி. ஜோசப் பெலிக்சுக்கும், அவருக்குப்பின் மேற்படி பங்கு நிர்வாகப் பொறுப்பை வகிப்பவர்களுக்கும் என திருமதி. டி.என். வள்ளியம்மாள் என்பவர் கிரயம் செய்து கொடுத்துள்ளார். இதன் மதிப்பு ரூ. 2,65,215/-.

மேற்படி மனையிடத்திற்கு இம்மாநகராட்சியிடமிருந்து கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ளது. கட்டிட அனுமதி எண். 191/2003/H1 (W) ந.க.எண். 11560/2001/H1(W) நாள் 17.10.03 (17.10.03 to 16.10.05) வரைபட நகல் இணைக்கப்பட்டுள்ளது. கட்டிட அனுமதி பெறப்பட்ட அளவு 752 சதுடி. அனுமதி பெறப்பட்டதற்கு அதிகமாக கட்டிய கட்டிடத்திற்கு அபராத கட்டணம் வசூலிக்கலாம்.

மேற்படி ஆலயம் பொது வழிபாட்டுக்காக மட்டும் உபயோகிக்கப்படுகிறது. வருமானம் வருகின்ற கட்டிடங்கள் ஏதும் இல்லை. எனவே சொத்துவரி விலக்களிக்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டது. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண். 62 நாள் 16.6.2008-ன்படி அனுமதி வழங்கியுள்ளது. இம்மாநகராட்சி சட்டம் 123(a)–ன்படி மேற்படி ஆலயத்திற்கு சொத்துவரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்க மாமன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 5610/08/அ4 (மே)

**மா.ந.ம.தீர்மானம் எண் : 198 நாள் : 29.08.2008**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண். 62 நாள் 16.06.08 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 71

பொருள்- சிங்காநல்லூர் பேருந்து நிலையம்-கோயமுத்தூர் மாநகராட்சி-கிழக்கு மண்டலம்-தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிட் , திண்டுக்கல் மண்டலம்-நேரங்காப்பாளர் அறை ஒதுக்கீடு செய்தல்-தொடர்பாக.

-----

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிட், திண்டுக்கல் மண்டலம் பொது மேலாளர் தமது 27.12.2007-ம் தேதிய கடிதத்தில்,தங்களது போக்குவரத்துக் கழகம் சார்ந்த திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வேலி, நாகர்கோவில் ஆகிய மண்டலங்களின் மூலம் பேருந்துகள் மற்றும் சிறப்பு பேருந்துகள் கோவை மாநகருக்கு இயக்கப்படுகிறது எனவும், அதற்குரிய பணியாளர்கள் பதிவேடுகளை வைத்து பராமரிக்க சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் 10'x 10' அளவுள்ள அறையினை வாடகையின்றி ஒதுக்கீடு செய்து தருமாறு கோரியுள்ளார்.

அரசு நிறுவனங்களுக்கு நிர்ணயம் செய்யப்படும் வாடகை கணக்கீட்டின்படி சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் 16' x 10'.6" அளவுள்ள அறைக்கு மாத வாடகை ரூ.1,430/- என நிர்ணயம் செய்யப்பட்டு தற்போது ரூ.1,650/- ஆக உயர்வு செய்யப்பட்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,கோவை கோட்டம் I லிட் மற்றும் கும்பகோணம் கோட்டம் II லிட் அலுவலகங்களுக்கு ஏற்கனவே இரண்டு நேரங்காப்பாளர் அறைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் திண்டுக்கல் மண்டலம் பொது மேலாளர் தமது 8.02.08-ம் தேதிய கடிதத்தில் ஒதுக்கீடு செய்யப்பட உள்ள நேரங்காப்பாளர் அறைக்கு மாத வாடகை ரூ.1,650/- செலுத்த சம்மதம் தெரிவித்துள்ளார்.

எனவே சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் இரண்டாவது உள்நடை பாதையில் காலியாக உள்ள 16' x 10'.6" அளவுள்ள நேரங்காப்பாளர் அறையினை மாத வாடகை ரூ.1,650/- வீதம் நிர்ணயம் செய்து ஒப்படை செய்யும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிட், திண்டுக்கல் மண்டலம் அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண்ட.57 நாள் 16.6.2008-ன் மூலம் அனுமதி வழங்கியுள்ளது. எனவே வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண்.16236/2007/கிஅ.7

**மா.ந.ம.தீர்மானம் எண் : 199 நாள் : 29.08.2008**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண். 57 நாள் 16.06.08 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 72

பொருள்- வணிகவளாக கடைகள் - கோயமுத்தூர் மாநகராட்சி - கிழக்கு மண்டலம்- இராமநாதபுரம் மாநகராட்சி வணிக வளாகம்-கடை எண்.11-ன் உரிமக்காலம்- 30.11.2007 உடன் முடிவடைந்தது-உரிமக் கட்டணம் உயர்வு செய்து உரிமக் காலம் நீடித்து வழங்குவது-தொடர்பாக.

--------------

கோயமுத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட இராமநாதபுரம் மாநகராட்சி வணிக வளாகக் கடை எண்.11-ன் உரிமதாரர் திரு.பி.எம்.அப்துல்காதர் என்பவருக்கு மாதாந்திர உரிமக் கட்டணம் ரூ.6,820/- என்ற அடிப்படையில் 3.12.2004 மதல் 30.11.2007 வரையிலான மூன்றாண்டு காலத்திற்கு மாமன்ற தீர்மான எண்.197 நாள் 29.11.2004-ன் மூலம் நீட்டிப்பு செய்யப்பட்ட உரிமக் காலம் 30.11.2007 உடன் முடிவடைந்துள்ளது.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சொந்தமான கடைகள், நிலங்கள் ஆகியவற்றை குத்தகைக்கு விடுதல், குத்தகை புதுப்பித்தல் குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசாணை (நிலை) எண்.92 நாள் 3.7.2007-ல் திருத்திய நடைமுறை ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி அப்பகுதியில் அமைந்துள்ள தனியார் கடைகளுக்கு சதுரடிக்கு அதிகபட்சமாக ரூ.12.50/- வீதம் வசூலிக்கப்பட்டு வருவதாக வெளியிடப்பணியாளர்களின் அறிக்கை பெறப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாநகராட்சி வணிக வளாகம் கடை எண்.11 உரிமைதாரர் திரு.பி.எம். அப்துல்காதர் உரிம நீட்டிப்புத் தொகை ரூ.1,000/- அரசாணையின்படி செலுத்தியுள்ளார். (இரசீது எண். 200806121139 நாள் 12.06.2008)

அரசாணையின்படி மேற்படி உரிமக் காலம் முடிவடைந்து உரிமக்காலம் நீட்டிப்பு செய்யப்பட வேண்டிய மேற்படி கடைக்கு தற்போதைய சந்தை மதிப்பு அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டால், மாதாந்திர உரிமக் கட்டணம் ரூ.2,625/- எனவும், தற்போது வசூல் செய்யப்பட்டு வரும் மாதாந்திர உரிமக் கட்டணத் தொகையில் குறைந்தபட்சமாக 15 சதவீதம் உயர்வு செய்யப்பட்டால், மாதாந்திர உரிமக் கட்டணம் ரூ.7,850/- எனவும் வருகிறது.

எனவே அரசாணையின்படி, இராமநாதபுரம் மாநகராட்சி வணிக வளாக கடை எண்.11-ன் மாதாந்திர உரிமக் கட்டணம் சந்தை மதிப்பு அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படுவதைவிட தற்போதைய மாதாந்திர உரிமக் கட்டணத்தில் 15 சதவீதம் உயர்வு செய்யப்படும் தொகை கூடுதலாக வருவதனால், மேற்படி கடைக்கு மாதாந்திர உரிமக் கட்டணம் ரூ.7,850/- என நிர்ணயம் செய்து 1.12.2007 முதல் 30.11.2010 முடிய மூன்றாண்டுகளுக்கு உரிமக்காலம் நீட்டிப்பு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண்.64 நாள் 16.6.2008-ன் மூலம் அனுமதி வழங்கியுள்ளது. எனவே வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண்.11945/2007/கிஅ.7

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 200 நாள் : 29.08.2008</u>

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண். 64 நாள் 16.06.08 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 73

பொருள்- மாநகராட்சி வணிகவளாக கடைகள்-கோயமுத்தூர் மாநகராட்சி-கிழக்கு மண்டலம்-31.03.2008 உடன் உரிமகாலம் முடிவடைந்த கடைகள்-உரிமக் கட்டணம் உயர்வு செய்து உரிமக்காலம் நீடித்து வழங்குவது-தொடர்பாக.

-----

கோயமுத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட கீழ்காண் வணிக வளாக கடைகளின் நீட்டிப்பு செய்யப்பட்ட உரிமக் காலம் 31.3.2008 உடன் முடிவடைந்துள்ளது.

1. இராமநாதபுரம் மாநகராட்சி வணிக வளாகக் கடைகள் - 16 முதல் 21 வரை

2. இராமகிருஷ்ணாபுரம் மாநகராட்சி வணிக வளாக கடைகள் - 4 முதல் 10 வரை

மேற்காண் வணிக வளாக கடைகளின் உரிமதாரர்கள் மற்றும் அனுபோகதாரர்கள் மேற்காண் கடைகளின் உரிமகாலம் நீட்டிப்பு செய்யக் கோரியும், மாநகராட்சியால் உயர்வு செய்யும் உரிமக் கட்டணத் தொகைக்கு சம்மதம் தெரிவித்தும் விண்ணப்பம் செய்துள்ளனர்.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சொந்தமான கடைகள், நிலங்கள் ஆகியவற்றை குத்தகைக்கு விடுதல் மற்றும் குத்தகைக்கு புதுப்பித்தல் குறித்து அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள் 3.7.2007-ல் திருத்திய நடைமுறை ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி இராமநாதபுரம் மாநகராட்சி வணிக வளாகம் அமைந்துள்ள பகுதியில் அதிகபட்சமாக சதுரடிக்கு ரூ.14 வீதமும், இராமகிருஷ்ணாபுரம் பகுதியில் அதிகபட்சமாக சதுரடிக்கு ரூ.20 வீதமும் வசூலிக்கப்பட்டு வருவதாக வெளியிடப் பணியாளர்களின் அறிக்கை பெறப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாநகராட்சி வணிக வளாகம் கடை எண்.21-ன் அனுபோகதாரரான திரு. ஹபீப்ரஹ்மான் தனது 31.01.2008-ம் தேதிய விண்ணப்பத்தில் முகமது இஸ்மாயில் என்பவருக்கு மாநகராட்சியால் ஒதுக்கீடு செய்யப்பட்ட கடை எண். 21-ஐ தற்போது தான் நடத்தி வருவதால், தனது பெயருக்கு மாற்றம் செய்துதர கோரியுள்ளார்.

அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள் 3.7.2007-ல் பாரா எண்.4-ல்,V-ல் அனுமதியற்ற அனுபோகதாரர்களின் நேர்வில் ஒருமுறை மட்டுமே அளிக்கப்படும் சலுகை அடிப்படையில் குத்தகை உரிமையை அவர்களுடைய பெயரில் மாற்றித்தரலாம். இதற்காக விண்ணப்பதாரர் 12 மாதங்களுக்குரிய மாதாந்திர குத்தகை தொகைக்கு சமமான தொகையை முன்பணமாக செலுத்த வேண்டும். இது தவிர 12 மாத வாடகைக்கு சமமான தொகையை பெயர் மாற்ற கட்டணமாகவும் அவர் செலுத்த வேண்டுமென உத்திரவிட்டுள்ளது.

எனவே அரசாணையில் உத்திரவிடப்பட்டுள்ளபடி, 12 மாதங்களுக்குரிய மாதாந்திர குத்தகைத் தொகைக்கு சமமான தொகையை முன்பணமாகவும், 12 மாத வாடகைக்கு சமமான தொகையை பெயர் மாற்ற கட்டணமாகவும் வசூலித்துக் கொண்டு திரு. முகமது இஸ்மாயில் பெயரிலிருந்து திரு.ஹபீப்ரஹ்மான் பெயருக்கு கடை எண். 21-ஐ பெயர் மாற்றம் செய்து தற்போதைய மாதாந்திர உரிமக் கட்டணம் ரூ.3,020/- ஐ 15% உயர்வு செய்து ரூ.3,480/- என நிர்ணயம் செய்து 01.04.08 முதல் 31.03.11 முடிய உரிம நீட்டிப்பு வழங்கவும்,

இராமநாதபுரம் மாநகராட்சி வணிக வளாகம் கடை எண்.16 முதல் 20 மற்றும் இராமகிருஷ்ணாபுரம் மாநகராட்சி வணிக வளாகம் கடை எண்.4 முதல் 10 ஆகிய கடைகளின் உரிமதாரர்கள் உரிம நீட்டிப்புத் தொகை ரூ.1,000/- வீதம் செலுத்தி உரிம நீட்டிப்பு கோரியுள்ளனர்.

எனவே அரசாணையின்படி தற்போதைய உரிமக் கட்டணத் தொகையில் குறைந்தபட்சம் 15% மற்றும் சந்தை மதிப்பு அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டால்,கீழ் குறிப்பிட்டுள்ளவாறு உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

| கடை எண் | உரிமதாரர் பெயர் | உரிமம் புதுப்பிக்க செலுத்திய கட்டணம் | தற்போதைய மாதாந்திர உரிமக் கட்டணம் | 15% உயர்வு செய்யப்பட்டால் பெறப்படும் உரிமகட்டணம் | சந்தை மதிப்பு அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டால் பெறப்படும் உரிமகட்டணம். |
|---|---|---|---|---|---|
| இராமநாதபுரம் மாநகராட்சி வணிக வாளகம் (210 சதுரடி பரப்பளவு) சந்தை மதிப்பு சதுரடி ஒன்றிற்கு ரூ.14/- | | | | | |
| 16 | திரு. செந்தில்குமார் | 1000 | 3020 | 3480 | 2940 |
| 17 | திரு.சி.வி. சேஷாத்ரி | 1000 | 3020 | 3480 | 2940 |
| 18 | திரு ரவிந்தர்ராஜ் | 1000 | 3020 | 3480 | 2940 |
| 19 | திரு. சாமியப்பன் | 1000 | 3020 | 3480 | 2940 |
| 20 | திரு. முகமது இஸ்மாயில் | 1000 | 3020 | 3480 | 2940 |
| இராமகிருஷ்ணாபுரம் மாநகராட்சி வணிக வளாகம் (100 சதுரடி பரப்பளவு) சந்தை மதிப்பு சதுரடி ஒன்றிற்கு ரூ.20/- | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | திரு. வேலாயுதம் | 1000 | 2620 | 3020 | 2000 |
| 5 | திருமதி. க. சரஸ்வதி | 1000 | 2650 | 3020 | 2000 |
| 6 | திருமதி. வசந்தகுமாரி | 1000 | 2520 | 2900 | 2000 |
| 7 | திரு. முகமதுசா்புதின் | 1000 | 2520 | 2900 | 2000 |
| 8 | திரு.பாதாள முத்து நாடாா் | 1000 | 2570 | 2960 | 2000 |
| 9 | திரு.பாதாள முத்து நாடாா் | 1000 | 2590 | 2980 | 2000 |
| 10 | திரு. குமாரவேல் | 1000 | 2640 | 3040 | 2000 |

**எனவே அரசாணையின்படி மேற்காண் கடைகளுக்குமாதாந்திர உரிமக் கட்டணம் சந்தை மதிப்பு அடிப்படையில் நிா்ணயம் செய்யப்படுவதைவிட தற்போதைய மாதாந்திர உரிமக் கட்டணத்தில் 15 சதவீதம் உயா்வு செய்யப்படும் தொகை கூடுதலாக வருவதனால், மேற்படி கடைகளுக்கு மாதாந்திர உரிமக் கட்டணம் தொகை 15 சதவீதம் உயா்வு செய்து 01.04.2008 முதல் 31.03.2011 முடிய மூன்றாண்டுகளுக்கு உரிமக்காலம் நீட்டிப்புசெய்யவும், வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீா்மான எண்.63 நாள் 16.6.2008-ன் மூலம் அனுமதி வழங்கியுள்ளது.**

**எனவே வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு திா்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.**

**அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண்.16109/2007/கிஅ.7**

**<u>மா.ந.ம.தீா்மானம் எண் : 201 நாள் : 29.08.2008</u>**

**வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மானம் எண். 63 நாள் 16.06.08 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்**
**மேயா்**
**கோயம்புத்தூா் மாநகராட்சி**

---

## பொருள் எண் 74

**பொருள்- குத்தகை-கோயமுத்தூா் மாநகராட்சி-கிழக்கு மண்டலம்-சிங்காநல்லூா் பேருந்து நிலையம்-குத்தகை இனங்களின் உரிமக்காலம் 31.05.08 உடன் முடிவடைய உள்ளது-உரிமகாலம் நீட்டிப்பு செய்தல்-தொடா்பாக.**

-----

**கோயமுத்தூா் மாநராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட கீழ்காண் குத்தகை இனங்களின் உரிமக்காலம் 31.05.08 உடன் முடிவடைய உள்ளது.**

**<u>குத்தகை இனங்கள்</u>**

1. **சிங்காநல்லூா் பேருந்து நிலையம் ஆவின் பாலகம்.**
2. **சிங்காநல்லூா் பேருந்து நிலையம் டேன் டீ விற்பனை மையம்.**
3. **தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கோவை கோட்டம் I லிட் நேரங்காப்பாளா் அறை.**
4. **தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் கோட்டம் II லிட் நேரங்காப்பாளா் அறை.**

இதில் சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் செயல்படும் தமிழ்நாடு தேயிலைத் தோட்ட கழகம் தேயிலை விற்பனை மையத்தில் தேயிலை மட்டும் விற்பனை செய்யப்பட வேண்டும். ஆனால் இதர பொருட்களும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. எனவே ஒப்பந்த விதிகளுக்கு முரணாக செயல்பட்டு வருவதனால், உரிமகாலம் 31.05.08-ல் முடிவடைந்ததும் உரிமகாலம் நீட்டிப்பு செய்யப்படாமல் ஒப்படை செய்யப்பட்ட இடத்தினை மாநகராட்சியில் பொறுப்பேற்கலாம்.

நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சொந்தமான கடைகள் நிலங்கள் ஆகியவற்றை குத்தகைக்கு விடுதல், குத்தகை புதுப்பித்தல் குறித்து துறை அரசாணை நிலை எண்.92 நாள் 03.07.07-ல் திருத்திய நடைமுறை ஆணைகள் வெளியிட்டுள்ளது.

அதன்படி உரிமக்காலம் நீட்டிப்பு செய்யப்பட்டு உரிமக்கட்டணம் உயர்வு செய்யப்பட வேண்டிய குத்தகை இனங்கள் அரசு சார்ந்த அலுவலகங்களாக இருப்பதனால் அரசாணையின்படி தற்போதைய உரிமக் கட்டணத் தொகையில் குறைந்தபட்சம் 15% உயர்வு செய்யப்பட்டால் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

| வ. எண். | குத்தகை இனம் | விவரம் | தற்போதைய மாதாந்திர உரிமக் கட்டணம் | 15% உயர்வு செய்யப்பட்டால் பெறப்படும் மாதாந்திர உரிமக்கட்டணம் |
|---|---|---|---|---|
| 1. | ஆவின் பாலகம் | 12'x12' காலியிடம் | 940/- | 1090/- |
| 2. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,கோவை கோட்டம் I லிட் நேரங்காப்பாளர் அறை | 16'x10'.6" அறை | 1650/- | 1900/- |
| 3. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் கோட்டம் II லிட் நேரங்காப்பாளர் அறை | 16'x10'.6" அறை | 1650/- | 1900/- |

எனவே மேற்காண் குத்தகை இனங்களுக்கு அரசாணையின்படி பட்டியலில் குறிப்பிட்டவாறு உரிமக் கட்டணம் உயர்வு செய்து 01.06.08 முதல் 31.05.2011 வரையிலான மூன்றாண்டு காலத்திற்கு உரிமகாலம் நீட்டிப்பு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண்.58 நாள் 16.6.2008-ல் அனுமதிக்கலாம் எனவும் ஆவின் மற்றும் டேன் டீ அரசு சார்ந்த நிறுவனங்களாக இருப்பதால் உரிய நிபந்தனைகளை தெரிவித்து கால நீட்டிப்பு செய்யலாம் எனவும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின்படி தமிழ்நாடு தேயிலை தோட்ட கழகம் தேயிலை விற்பனை மையத்தின் உரிமக்காலம் நீட்டிப்பு செய்யப்பட்டால் உரிமக் கட்டணம் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | சிங்காநல்லூர் பேருந்து நிலையம் டேன் டீ விற்பனை மையம் | 6'x 6' | 310/- | 360/- |

எனவே வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க. எண்.7268/2007/கிஅ.7

## மா.ந.ம.தீர்மானம் எண் : 202 நாள் : 29.08.2008

பொருளில் வ.எண். 1 ஆவின் பாலகத்தில் ஆவின் பொருட்கள் தவிர பிற பொருட்கள் விற்பனை செய்யக்கூடாது என்ற நிபந்தனையுடனும், வ.எண். 4 சிங்காநல்லூர் பேருந்து நிலையம் டேன் டீ விற்பனை மையத்தில் டேன் டீ நிறுவன பொருட்கள் தவிர பிற பொருட்கள் விற்பனை செய்யக்கூடாது என்ற நிபந்தனையுடனும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண். 58 நாள் 16.6.2008-ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 75

கோயம்புத்தூர் மாநகரில் தனியார் நன்கொடையாளர்கள் மூலம் பஸ் செல்ட்டர்கள் மாநகராட்சியின் முன்அனுமதியுடன் அமைக்கப்படுகிறது. இதற்காக உரிமையாணைக் கட்டணமாக வருடத்திற்கு ரூ. 25000/- என மாமன்றத் தீர்மான எண். 23 நாள். 30.4.2002 –ல் நிர்ணயிக்கப்பட்டு வசூல் செய்யப்பட்டது. இக்கட்டணத்தை செலுத்தி பஸ்செல்ட்டர் அனுமதி பெற யாரும் முன்வராத சூழ்நிலையில் மேற்படி கட்டணத்தை மாமன்ற தீர்மான எண். 242 நாள். 29.12.06 –ல் ரத்து செய்யப்பட்டது.

கட்டணம் ரத்து செய்யப்பட்டதைத் தொடர்ந்து உரிமம் கோரி பல மனுக்கள் வந்தன. இது வரை நூற்றுக்கும் மேற்பட்ட பஸ்செல்டர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்சமயம் அதிக அளவில் விண்ணப்பங்கள் வருவதாலும், ஒரே இடத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்கள் போட்டியிடுவதாலும், பஸ்செல்ட்டரில் வைக்கப்படும் விளம்பரம் மூலம் விளம்பர நிறுவனங்கள் லாபம் சம்பாதிப்பதாலும், மறுபடியும் ஒரு பஸ்செல்ட்டருக்கு வருடத்திற்கு ரூ. 20,000/- என உரிமையாணைக் கட்டணம் வசூலிக்கலாம். சேவை மனப்பான்மையுடன் கூடிய தொண்டு நிறுவனங்கள் போன்ற அமைப்புகளால் விளம்பரங்களின்றி அமைக்கப்படும் பஸ்செல்ட்டர்களுக்கு கட்டணமின்றி உரிமம் வழங்கலாம். போட்டியுள்ள விண்ணப்பங்களில் முதலில் வந்த விண்ணப்பத்திற்கு முன்னுரிமை வழங்கலாம். அதிலும் முரன்பாடு ஏற்படின் - அது போன்ற இனங்களை டெண்டர் மூலம் அனுமதிக்கலாம்.

இக்கட்டணம் பஸ்செல்ட்டர், சாலையோரப் பூங்கா, சாலைத் தீவு பூங்கா, நடைபாதை மூலம் மேம்படுத்தும் பணி போன்ற அனைத்து அழகுபடுத்தும் பணிகளில் விளம்பரம் வைக்கப்படின் அவைகள் அனைத்திற்கும் இக்கட்டணம் பொருந்தும் வகையிலும், ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட மேற்கூறிய அனைத்து இனங்களுக்கும் வரும் ஆண்டு முதல் கட்டணம் வசூலிக்கும் வகையிலும் தீர்மானம் நிறைவேற்றலாம் என நகரமைப்பு மற்றும் அபிவிருத்திநிலைகுழுவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில், நகரமைப்பு குழு தனது தீர்மான எண். 55 நாள். 17.7.2008- ல் “ரூ. 25000/- வருடாந்திர உரிமையாணைக் கட்டணம் மற்றும், புதுப்பித்தல் கட்டணமாக நிர்ணயம் செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது.” என தீர்மானம் நிறைவேற்றியுள்ளதை பொருள் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு -அங்கீகரிக்கலாம். ந.க.எண். 177741 / 2006 / எம்.எச்5.

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 203 நாள் : 29.08.2008</u>

நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவின் தீர்மானம் எண். 55 நாள் 17.07.2008-ஐ ரத்து செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 76

பொருள்- கடைகள்- கோயமுத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலத்திற்குட்பட்ட உக்கடம் பேருந்து நிலையம் - பாலகம் கடை ஒதுக்கீடு –தொடர்பாக.

-------------

கோயமுத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட உக்கடம் பேருந்து நிலையத்தில் பாலகம் கடை 8’x 8’ என்ற சதுர அடியில் அமைத்திட திரு. முகம்மது சலீம் (உடல் ஊனமுற்றோர்) என்பவர் மாவட்ட ஆட்சியர், மக்கள் குறை தீர்க்கும் நாள் மனு எண். 10652 நாள். 14-07-2008 மூலம் விண்ணப்பித்துள்ளார்.

மேற்குறிப்பிட்ட கடையை பொது ஏலம் தவிர்த்து திரு. முகம்மது சலீம் என்பவருக்கு ஒதுக்கீடு செய்ய, கோவை மாவட்ட ஆட்சியரின் உத்திரவின் பேரில், 40-வது வார்டு உதவி பொறியாளர் நேராய்வு செய்து (64 சதுர அடிக்கு) மாத வாடகை ரூ. 1680/- என்ற அடிப்படையில் நிர்ணயம் செய்துள்ளார்.

மேற்படி கடையை ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 7184/2008/அ10

**மா.ந.ம.தீர்மானம் எண் : 204 நாள் : 29.08.2008**

விண்ணப்பதாரரின் கோரிக்கையினை நிராகரிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 77

2008-09 ம் ஆண்டுக்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கை எண். 34 –ன் மீதான அறிவிப்பின்போது, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் கீழ்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது.

‘‘கடந்த இரண்டு ஆண்டுகளில் நகராட்சிகளில் பல்வேறு கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இப்பணிகளில் இந்த ஆண்டு முடிவடையும் மற்றும் தொடங்கப்படவுள்ள பேருந்து நிலையக் கட்டிடங்களுக்கும், நகராட்சி அலுவலகக் கட்டிடங்களுக்கும் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா பேருந்து நிலையம் / பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா அலுவலகக் கட்டிடம் என்று பெயரிடப்படும்.’’

எனவே கோயம்புத்தூர் மாநகராட்சியில் கடந்த இரண்டு ஆண்டுகளில் பணி தொடங்கப்பட்டு நடைபெற்று வரும் மேட்டுப்பாளையம் சாலையில் கட்டப்பட்டு வரும் பேருந்து நிலையத்திற்கு பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா பேருந்து நிலையம் என்றும், தெற்கு மண்டல அலுவலக கட்டிடம் மற்றும் அவிநாசி சாலையில் கட்டப்பட்டு வரும் பாஸ்போர்ட் அலுவலக கட்டிடம் போன்ற கட்டிடங்களுக்கு பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா அலுவலகக் கட்டிடம் என்றும் பெயர் சூட்டலாம்.

மேலும் 1) உக்கடம் பகுதியில் கட்டப்பட்டு வரும் மீன் மார்க்கெட் கட்டிடம் 2) மேட்டுப்பாளையம் சாலையில் கட்டப்பட்டு வரும் பூ மார்க்கெட் கட்டிடம் போன்ற கட்டிடங்களுக்கு பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா கட்டிடம் என்றும் பெயர் சூட்டலாம்.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 2820/08/MC. 2

**மா.ந.ம.தீர்மானம் எண் : 205 நாள் : 29.08.2008**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 78

பொருள் - சுற்றுச்சூழல் - கோயம்புத்தூர் மாநகராட்சி – சுற்றுச்சூழல் குறித்த திரைப்பட விழா நடத்த அக்டோபர் 17 முதல் அக்டோபர் 19 வரை மாநகராட்சி கலையரங்கம் இலவசமாக வழங்க அனுமதி கோருவது குறித்து.

-------------

மத்திய அரசின் வனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் கீழ் இயங்கி வரும் சலீம்அலி பறவைகள் ஆராய்ச்சி மையம் கோவையில் ஆணைகட்டியில் இயங்கி வருகிறது. இம்மையம் மத்திய அமைச்சகத்துடன் இணைந்து இந்தியா முழுவதும் 18 நகரங்களில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஏற்படுத்த சுற்றுச்சூழல் பற்றிய திரைப்பட விழா ஒவ்வொரு நகரங்களிலும் 3 நாட்கள் நடத்தி வருகின்றனர்.

சுற்றுச்சூழல் குறித்த திரைப்பட விழா இந்தியாவில் நடத்தப்படுவது இதுவே முதல்முறையாகும். நாடு முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட 18 நகரங்களில் தென் இந்தியாவில் கோவை நகரம் தேர்ந்தெடுக்கப்பட்டு அக்டோபர் 17 முதல் அக்டோபர் 19 வரை 3 நாட்கள் சுற்றுச்சூழல் திரைப்பட விழா நடத்த மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் முடிவு செய்துள்ளது.

இத்திரைப்பட விழாவில் சுமார் 30 முதல் 40 சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பற்றிய திரைப்படங்கள் திரையிடப்பட உள்ளனர். கோவை மாநகர பொது மக்களுக்கும், பள்ளி குழந்தைகளுக்கும் இலவசமாக திரைப்படத்தை காண அனுமதி அளித்து சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த உள்ளனர்.

எனவே, சலீம்அலி பறவைகள் ஆராய்ச்சி மையக் கடிதத்தில் திரைப்பட விழா நடத்த கோவை மாநகராட்சி கலையரங்கை அக்டோபர் 17 முதல் அக்டோபர் 19 வரை 3 நாட்களுக்கு இலவசமாக வழங்க அனுமதி அளிக்கும்படி கேட்டுள்ளனர்.

எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- அனுமதிக்கலாம். ந.க.எண். 10371/2008/எம்.இ. 4

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 206 நாள் : 29.08.2008</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 79

பொருள் - கலையரங்கம் – கோயம்புத்தூர் மாநகராட்சி – மக்கள் தொடர்பு பிரிவு பிரதான அலுவலகம் – மாநகராட்சியின் கலையரங்கத்தை பொது மக்களுக்கு புத்தக வெளியீட்டு விழாக்கள் மற்றும் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கக்கூடிய அரசு நிகழ்ச்சிகளுக்கு நாள் வாடகை கட்டணம் குறைவாக நிர்ணயிக்கக் கோருவது - தொடர்பாக.

----------------

கோவை மாவட்ட புத்தக விற்பனை மற்றும் பதிப்பாளர்கள் சங்கத்தின் சார்பாக பெறப்பட்டுள்ள கடிதத்தில், தமிழக அரசு படிக்கும் பழக்கத்தை அதிகரிப்பதற்காக பெருமளவு முயற்சிகளும், செலவுகளையும் செய்து வருகிறது என்றும், கோவை மாவட்டத்தில் பல்வேறு இலக்கிய அமைப்புகள் செயல்பட்டு வருவதாகவும், அவர்கள் புத்தக வெளியீட்டு விழா, அறிமுக விழா, விமர்சன விழா மற்றும் இலக்கிய கருத்தரங்குகள் நடத்தி வருவதாகவும், இதுபோன்ற விழாக்களுக்கு சென்னையில் உள்ளதுபோல் குறைந்த கட்டணமுள்ள அரங்குகள் கிடைக்கவில்லையென்றும், நல்ல நோக்கத்திற்காக, கோவை மாநகராட்சி கலையரங்கில் ஒரு முன்மாதிரியாக புத்தக வெளியீட்டு விழாக்களுக்கு அரைநாள் கட்டணத்தில் குளிர்சாதன வசதியின்றி ரூ. 500/- அல்லது ரூ. 750/- கட்டணம் நிர்ணயம் செய்து தரும்படி கேட்டுக்கொண்டுள்ளனர்.

கோவை மாநகராட்சி கலையரங்கம் பெரும் பொருட்செலவில் சிறப்பாக சீரமைக்கப்பட்டுள்ளது. பொதுமக்களின் பல்வேறு உபயோகத்திற்காகவும், தரமான நிகழ்ச்சிகளுக்காகவும், குளிர்சாதன வசதியுடைய இவ்வரங்கை மா.ந.ம.தீர்மான எண்-311. நாள். 30-3-2007 ன்படி மாநகராட்சி கலையரங்கில் நிகழ்ச்சிகள் நடத்த வாடகை கட்டணமாக நாளொன்றிற்கு தனியாருக்கு ரூ. 10,000/-எனவும், அரசு/அரசு சார்ந்த நிறுவன நிகழ்ச்சிக்கு ரூ. 5,000/- எனவும் வசூலிக்கப்பட்டு வருகிறது.

மின்கட்டண வைப்புத்தொகை (பயன்பாடு போக மீதம் திரும்ப வழங்கப்படும்) ரூ. 5,000/- ஜெனரேட்டர் இயக்க வைப்புத்தொகை (பயன்பாடு போக மீதம் திரும்ப வழங்கப்படும்) ரூ. 4,000/- மற்றும் நிகழ்ச்சிகளின் போது ஏற்படும் பழுதுகளை ஈடுசெய்ய வைப்புத்தொகை ரூ. 10,000/- எனவும் நிர்ணயம் செய்து வசூலிக்கப்பட்டு வருகிறது.

சமுதாயத்திற்கு நல்ல பயனை தரக்கூடிய புத்தகங்கள் அதிகமான அளவு வெளியிடவேண்டும் என்ற நோக்கத்திற்காகவும், மாணவர்களையும், இளைஞர்களையும் மற்றும் பொது மக்களையும் செம்மையான வாழ்க்கைக்கு பயன்படுத்தும் வண்ணம் நல்ல புத்தகங்களை பதிப்பாளர்கள் வெளியிடச் செய்யவும், மாநகராட்சி கலையரங்கை இலாப நோக்கமின்றி புத்தக வெளியீட்டு விழாக்களுக்கும், பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கக்கூடிய அரசு நிகழ்ச்சிகள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்து கொள்ளக் கூடிய அரசு சார்ந்த கருத்தரங்குகள் மற்றும் விழாக்களுக்கும் நாள் ஒன்றிற்கு ரூ 750/- வீதம் கட்டணம் நிர்ணயம் செய்யலாம்.

மற்ற நிபந்தனைகளான மின்கட்டணம், சேவைக்கட்டணம் மற்றும் வைப்புத்தொகை ஆகிய தொகைகளையும் மேற்கூறிய வாடகை கட்டணத்தை நிர்ணயம் செய்வதற்காகவும் மாமன்றத்திற்கு இப்பொருள் வைக்கப்படுகிறது.

மாமன்றத்திற்கு பொருள் வைப்பதற்கு முன்பாக வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் ஒப்புதல் பெற வேண்டி இருப்பினும் அவசர அவசியம் கருதி இப்பொருள் குறித்து மாமன்ற நிதிக்குழுவின் தலைவரிடம் முன் அனுமதி பெற்று மாமன்ற குழுக்கூட்டத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- மாமன்றம் முடிவு செய்யலாம். ந.க.எண். 10657/2008/ம.தொ.அ/எம்.சி. 4

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 207 நாள் : 29.08.2008</u>

புத்தக வெளியீட்டு விழாக்கள், அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கக்கூடிய அரசு நிகழ்ச்சிகள், மாண்புமிகு அமைச்சா் பெருமக்கள் கலந்து கொள்ளக்கூடிய அரசு சார்ந்த விழாக்கள் மற்றும் கருத்தரங்குகள், போன்ற நிகழ்ச்சிகளுக்கு நாள் ஒன்றிற்று ரூ. 750/- கட்டணமாக நிர்ணயம் செய்து தீர்மானிக்கப்பட்டது.

நலிவடைந்து வரும் நாடகத்துறைக்கும், நாட்டுப்புற கலைகளுக்கும் உயிரூட்டும் வண்ணம், வியாபார நோக்கமின்றி, இக்கலைகளை வளர்க்கும் நோக்கத்துடன் நாடகங்கள் மற்றும் நாட்டுப்புறக் கலைகள் நடத்தும் அமைப்புகள் மூலமாக நடத்தப்படும் நாடகங்கள் மற்றும் நாட்டுப்புறக் கலைநிகழ்ச்சிகள் போன்ற நிகழ்ச்சிகளுக்கும் நாள் ஒன்றிற்கு ரூ. 750/- கட்டணமாக நிர்ணயம் செய்து தீர்மானிக்கப்பட்டது.

பிற கட்டணங்களில் மாற்றம் எதுவும் இல்லை எனவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 80

கோவை மாநகராட்சி பகுதிகளில் கீழ்க்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 3619/08/ எம்டி4 | வார்டு எண்.55முத்தையார் உடையார் வீதி கிழக்குப்புறத்தில் வாய்கால் கட்டுதல் | 25.00 | 06.08.08 முதல் அழைப்பு | தி/ள். என்.பி.கே. அசோஸியட்ஸ் | 0.22 குறைவு |
| 2 | 4358/08/ எம்டி4 | வார்டு எண்.51 காந்திபூங்காவில் அபிவிருந்தி பணிகள் செய்தல் . | 25.00 | 06.08.08 முதல் அழைப்பு | திரு.ஆர். மயில்வாணன் | 0.30 குறைவு |
| 3 | 1730/08/ எம்டி2 | வார்டு எண்.6 விவேகானந்தா நகரில் மழை நீர் வடிகால் கட்டுதல் | 24.90 | 29.07.08 முதல் அழைப்பு | திரு.பி.சுந்தர்ராஜ் | 0.05 குறைவு |
| 4 | 1728/08/ எம்டி2 | வார்டு எண்.6 டெக்ஸ்டூல் லே–அவுட் ராஜ கணபதி நகர் சூர்யா நகரில் மழை நீர் வடிகால் கட்டுதல் | 24.90 | 29.07.08 முதல் அழைப்பு | தி/ள்.பி.செந்தில் &கோ | 0.05 குறைவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5 | 7143/08/ எம்டி2 | வார்டு எண்.31 சொர்ணாம்பிகா லே–அவுட் உள்ள மாநகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் பூங்கா மற்றும் விளையாட்டு மைதானம் அமைத்தல் | 25.00 | 06.08.08 முதல் அழைப்பு | திரு. ஆர்.செல்வராஜ் | 0.20 குறைவு |
| 6 | 6841/08/ எம்டி2 | வார்டு எண்.33 ஹட்கோ காலனி குறுக்குச்சாலைகளில் மழை நீர் வடிகால் திரும்ப கட்டுதல் | 25.00 | 06.08.08 முதல் அழைப்பு | தி/ள்.கே.சி.பி. இன்ஜினியர்ஸ் &பேப்ரிகேட்டஸ் | 0.25 குறைவு |
| 7 | 4246/08/ எம்டி2 | வார்டு எண்.11 சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் மறுதார்தளம் அமைத்தல் | 25.00 | 29.07.08 முதல் அழைப்பு | தி/ள்.குரு கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 0.08 குறைவு |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: வ.எண்.1 முதல் 7 வரை உள்ள பணிகளின் மதிப்பீடுகள் மாமன்ற அனுமதி வரம்பிற்குள் வருவதாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் இப்பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும், அனுமதிக்கலாம்.

ந.க.எண் 3619/08/எம்.டி.4

மா.ந.ம.தீர்மானம் எண் : 208 நாள் : 29.08.2008

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 81

கோவை மாநகராட்சி பகுதிகளில் உள்ள தெருவிளக்குகள் பராமரிப்பு செய்யும் ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தங்களின் காலம் 30-06-2008 மற்றும் 01-07-2008 உடன் முடிவுற்றதால் புதிதாக நடைமுறைப்படுத்தப்பட உள்ள (ESCO) திட்டத்துடன் பராமரிப்பு பணிகளை சேர்த்து ஒப்பந்தப்புள்ளிகள் கோர மாமன்றம் தனது தீர்மான எண். 300 நாள் 27-03-2008-ன்படி தீர்மானம் நிறைவேற்றியது.

இந்த புதிய திட்டத்தின்படி மின்சார சேமிப்பு (Package-A) மற்றும் தெருவிளக்குகள் பராமரிப்பு பணி ,(Package-B) மேற்கொள்ளவும் மற்றும் மின்சார சேமிப்பு ஏற்படுத்தி அதில் பங்கு பெற உள்ள நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக இத்திட்டத்தை தொடங்குதல், செயலாற்றுதல் மற்றும் கண்காணித்தல் ஆகிய அனைத்து பணிகளுக்கும் மாநகராட்சி அதிகாரிகள் உள்ளடக்கிய தொழில் நுட்பக்குழு (Technical Committee) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்குழு இத்திட்டத்திற்கு தேவையான (Technical bid, Price bid) தொழில்நுட்ப படிவங்கள், விலைப்புள்ளி படிவங்கள் ஆகியவற்றை கோவை மாநகராட்சியின் நான்கு மண்டலங்களுக்கும் தனித்தனியே தயாரித்து ஒப்பந்தப்புள்ளிகளை 20-06-2008 அன்று கோரப்பட்டன.

இதில் வடக்கு மண்டலத்திற்குட்பட்ட தெருவிளக்கு பராமரிக்கும் பணி மற்றும் மின்சேமிப்பு பணிக்கு கடந்த 20-06-2008-ம் தேதி ஒப்பந்தப்புள்ளி முன்னிலையில் திறக்கப்பட்டன. இதில் தெருவிளக்குகள் மின்சேமிப்பு (Package–A) மற்றும் தெருவிளக்குகள் பராமரிப்புப்பணி ஆகிய இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. இதில் கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

1. தி / ள் சென்னை லைட்டிங் பிரைவேட் லிமிடெட்
2. தி / ள் சபரி எலெக்ட்ரிக்கல்ஸ்
3. தி / ள் சன்மேக் எண்டர்பிரைசஸ்
4. தி / ள் டைனாஸ்பீடு இன்டர்கிரேடட் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட்
5. தி / ள் சால்ஜர் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட்

தெருவிளக்குகள் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி இப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி அளிக்கும் நிறுவனம் Package – A மற்றும் Package – B ஆகிய இரண்டு பணிகளுக்கும் ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்பட வேண்டும். ஆனால், ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்கு மாறாக தி / ள். சென்னை லைட்டிங் பிரைவேட் லிமிடெட், தி / ள் சபரி எலெக்ட்ரிக்கல்ஸ், தி/ள் சன்மேக் எண்டர்பிரைசஸ் ஆகிய நிறுவனங்கள் தெருவிளக்குகள் பராமரிக்கும் பணிக்கு (Package-B) மட்டுமே ஒப்பந்தப்புள்ளிகள் அளித்தன.

எனவே, ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்கு மாறாக தெருவிளக்குகள் பராமரிக்கும் பணிக்கு (Package- B) மட்டுமே ஒப்பந்தப்புள்ளிகள் அளித்த மேற்படி மூன்று நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் தொழில் நுட்ப திறனாய்வுக்குழு உறுப்பினர்களால் நிராகரிக்கப்பட்டன.

மேலும் தி/ள் டைனாஸ்பீடு இன்டர்கிரேடட் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் ஒப்பந்தப்படிவத்தில் ஒப்பமிட்டு சமர்ப்பிக்கவில்லை. மேலும், இந்நிறுவனத்துடன் தெருவிளக்கு மின்சேமிப்பு மற்றும் பராமரிப்பு பணிக்கு கூட்டாக இணைந்து (Joint Venture) ஒப்பந்தப்புள்ளி அளித்த தி/ ள் ஆர்.என். எலெக்ட்ரிக்கல்ஸ் நிறுவனத்திற்கு ஆண்டு நிகர லாபக் கணக்குகள் (Turn over) ரூ. 5 கோடிக்கு பதிலாக ரூ1.02 கோடிக்கு மட்டுமே சமர்ப்பித்துள்ளதால், இந்நிறுவனம் அளித்த ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது.

தி/ள் சால்ஜர் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனம் அளித்த ஒப்பந்தப்புள்ளி, ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பூர்த்தி செய்தது.

மேலும், தொழில்நுட்ப தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ள திருவாளர்கள் சால்ஜர் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனத்தார் சமர்ப்பித்துள்ள விலைப்புள்ளி உறை 14-07-2008 அன்று ஆணையாளர் அவர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. அதில், மேற்படி நிறுவனம் ஒரு வருடத்திற்கு 32 சதவீதம் மின்சேமிப்பு செய்வதாகவும், அதன் மதிப்பு ரூ60,58,828/- எனவும், இதில் 5 சதவீதம்(மதிப்பத்தொகை ரூ3,02,941/-) பங்கு மாநகராட்சிக்கும், மீதமுள்ள 95 சதவீதம் (மதிப்புத்தொகை ரூ 57,55,887/-) பங்கு தங்கள் நிறுவனத்திற்கு வழங்க வேண்டுமெனவும் ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் தெரிவித்துள்ளனர்.

மேலும், மேற்படி நிறுவனம் ஒரு வருடத்திற்கு தெருவிளக்குகள் மற்றும் சுவிட்சுகள் இயக்கி பராமரிக்க (including switching on/off cost) 32.01 சதவீதம் மதிப்பீட்டு விலைக்கு கூடுதலாகவும், தெருவிளக்குகளை பராமரிக்க, சுவிட்சுகள் இயக்கம் நிங்கலாக (excluding switching on/off cost) 30.77 சதவீதம் மதிப்பீட்டு விலைக்கு கூடுதலாகவும், தெருவிளக்கு உபகரணம் மற்றும் கேபிள்கள் வழங்க மதிப்பீட்டு விலைக்கு 1 சதவீதம் கூடுதலாகவும் அளித்துள்ளனர்.

மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியில் மாநகராட்சிக்கு வழங்க உள்ள 5 சதவீத பங்களிப்பு தொகையை உயர்த்தி கொடுக்க வேண்டும் எனவும், ஒப்பந்தப்புள்ளியில் தெருவிளக்கு பராமரிப்பு பணியில் அளித்துள்ள சதவீதத்தை குறைத்து கொடுக்க கோரியும் கடிதம் (Negotiation Letter) அனுப்பலாம் எனவும், மாநகர மன்ற தீர்மான எண்.29 நாள் 11-05-1999ன் படியும், ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளில் இடம் பெறாத நிபந்தனையான மின் உரிம சான்றிதழ் அவசியம் குறித்து தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் ஆலோசனை மற்றும் தெளிவுரை கோரலாம் எனவும், திருவாளர் சால்ஜர் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு மின் உரிம சான்றிதழ் சமர்ப்பிக்க கோரலாம் எனவும் 21-07-2008 அன்று ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு தீர்மானித்தது.

அதன்பேரில், மேற்படி ஒப்பந்ததாரர் தனது 30-07-2008- ம் தேதிய கடிதத்தில் சிப்பம் -அ (Package-A) மின்சேமிப்பு பணியில் பங்களிப்பினை 5 சதவீதம் மட்டுமே தர இயலும் எனவும், மேலும் தெருவிளக்குகள் பராமரிப்பு பணி சிப்பம்-ஆ (Package-B) ஏற்கனவே வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தினை ஒரு வருடத்திற்கு தெருவிளக்குகள் மற்றும் சுவிட்சுகள் இயக்கி பராமரிக்க(including switching on/off cost) 4.92 சதவீதம் மதிப்பீட்டு விலைக்கு கூடுதலாகவும், தெருவிளக்குகளை பராமரிக்க, சுவிட்சுகள் இயக்கம் நீங்கலாக (excluding switching on/off cost) 4.98 சதவீதம் மதிப்பீட்டு விலைக்கு கூடுதலாகவும், விலை குறைப்பு செய்து பணி செய்ய ஒப்புதல் அளித்துள்ளனர்.

மேலும் தெருவிளக்கு உபகரணம் மற்றும் கேபிள்கள் வழங்க மதிப்பீட்டு விலைக்கு 1 சதவீதம் கூடுதலாக ஏற்கனவே வழங்கியுள்ள விலைவிவரப்படி பணி செய்ய ஒப்புதல் அளித்துள்ளனர். மேலும் செயற்பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம்/ மாநகர் கோவை, அவர்கள் தெருவிளக்கு பராமரிப்பு பணி செய்ய மின் உரிம சான்று பெற்றிருத்தல் அவசியம் எனவும் தெரிவித்துள்ளார்.

மேற்படி திருவாளர்கள் சால்ஜர் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனத்தார் தமிழ்நாடு அரசு மின் உரிமம் வழங்கும் வாரியத்தால் 07-08-2008-ம் தேதியிட்ட மின் உரிம சான்று சமர்ப்பித்துள்ளார். இதனை தொடர்ந்து 13-08-2008ம் தேதி கூடிய ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கலாம் என தெரிவித்துள்ளது.

எனவே, திருவாளர்கள் சால்ஜர் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனத்தார் சிப்பம்-அ (Package-A) 5 ஆண்டுகளுக்கு மின்சேமிப்பு பணியில் தங்கள் நிறுவனத்திற்கு 95 சதவீதமும் மாநகராட்சிக்கு 5 சதவீதம் பங்களிப்பினை ஏற்கவும், சிப்பம்-ஆ (Package-B) 3 ஆண்டுகளுக்கு பராமரிப்பு பணியில் ஒரு வருடத்திற்கு தெருவிளக்குகள் மற்றும் சுவிட்சுகள் இயக்கி பராமரிக்க (including switching on/off cost) 4.92 சதவீதம் மதிப்பீட்டு விலைக்கு கூடுதலாகவும், தெருவிளக்குகளை பராமரிக்க, சுவிட்சுகள் இயக்கம் நீங்கலாக (excluding switching on/off cost) 4.98 சதவீதம் மதிப்பீட்டு விலைக்கு கூடுதலாகவும், தெருவிளக்கு உபகரணம் மற்றும் கேபிள்கள் வழங்க மதிப்பீட்டு விலைக்கு 1 சதவீதம் கூடுதலாகவும் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து முடிவு செய்ய மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் முடிவு செய்யலாம் .

ந.க.எண். 6477/08/எம்டி4 ந.க.எண். 6478/08/எம்டி4

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 209 நாள் : 29.08.2008</u>

மாமன்ற தீர்மானம் எண். 47 நாள் 11.5.1999-ன்படி, இம்மாநகராட்சியில் மின்சாரம் சம்பந்தப்பட்ட பணிகளை ஐந்து ஆண்டுகால அனுபவம் மற்றும் ESB உரிமம் பெற்ற ஒப்பந்ததாரர்களிடம் ஒப்படைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. ESCO மூலம் மின்சேமிப்பு மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு செய்யும் திட்டம், தமிழ்நாட்டில் முன்னோடி திட்டமாக இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படவுள்ளது. எனவே மேற்படி மாமன்ற தீர்மானம் எண். 47 நாள் 11.5.1999-ல் தீர்மானித்துள்ளவாறு ESB உரிமம் மற்றும் ஐந்து ஆண்டுகால அனுபவம் ஆகியவற்றிலிருந்து விலக்கு அளித்து, மின்சேமிப்பு மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு பணியினை ஒப்படைப்பு செய்வதென தீர்மானிக்கப்பட்டது.

கோவை மாநகராட்சியில் தி/ ள். சபரி எலக்ட்ரிக்கல்ஸ் மற்றும் தி/ள். சன்மேக் என்டர்பிரைசஸ் நிறுவனத்தினருக்கு வழங்கப்பட்ட தெருவிளக்கு பராமரிப்புப் பணிக்கான ஒப்பந்தகாலம் 30.6.08-உடன் முடிவுற்று தற்போது ஒப்பந்ததாரருக்கு கால நீட்டிப்பு வழங்கி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் இப்பணியின் அவசர அவசியம் கருதியும், மேலும் கால நீட்டிப்பு வழங்கக் கூடாது என இம்மாமன்றம் கருதுவதாலும் தெருவிளக்கு பராமரிப்புப் பணியினை உடனடியாக ஒப்பந்ததாரருக்கு ஒப்படை செய்வது அவசியம் என இம்மாமன்றம் கருதுகிறது.

மேலும் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் விநியோகத்திலிருந்து மாநகராட்சியின் உபயோகத்தில் 32% மின்சேமிப்பு செய்ய உள்ளதாக இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள தி/ள். சால்ஜர் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தினர் ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ளனர்.

எனவே வடக்கு மண்டலத்திற்கு தி/ள். சால்ஜா் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தாா் சிப்பம். அ (Package-A) ஐந்து ஆண்டுகளுக்கு மின் சேமிப்பில் 95% தி/ள். சால்ஜா் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தாருக்கும், 5% மாநகராட்சிக்கும் பங்களிப்பு வழங்க கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

சிப்பம்-ஆ (Package-B) மூன்று ஆண்டுகளுக்கான பராமரிப்புப் பணியில் 1) ஒரு வருடத்திற்கு தெருவிளக்குகள் மற்றும் சுவிட்சுகள் இயக்கி பராமரிக்கும் (including switch on/off cost) பணிக்கு மதிப்பீட்டு விலைக்கு 4.92 சதவீதம் கூடுதலாக வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொகையான ரூ. 73,94,096/- ஐ ESCO திட்டம் அமலாகும் வரையிலான காலத்திற்கு விகிதாச்சார அடிப்படையில் தொகை வழங்கவும்,

2) மூன்று ஆண்டுகளுக்கு சுவிட்சுகள் இயக்கம் நீங்கலாக தெரு விளக்குகளை பராமரிக்கும் (excluding switch on/off cost) பணிக்கு வருடம் ஒன்றிற்கு மதிப்பீட்டு விலைக்கு 4.98 சதவீதம் கூடுதலான தொகையான ரூ. 73,12,620/-க்கு வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும்,

3) தெருவிளக்கு உபகரணம் மற்றும் கேபிள்கள் வழங்க மதிப்பீட்டு விலைக்கு 1 சதவீதம் கூடுதலாக ரூ. 26,94,784/- க்கு வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும் தீா்மானிக்கப்பட்டது.

மேற்படி பணிகளை தி/ள். சால்ஜா் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு ஒப்படை செய்யவும் தீா்மானிக்கப்பட்டது.

மாமன்றத்தில் பெரும்பான்மை இருப்பதனால், ஒருதலைப்பட்சமாக இப்பணியினை ஒப்படை செய்ய தீா்மானம் நிறைவேற்றுவதாகத் தெரிவித்து, மாா்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சோ்ந்த மாமன்ற உறுப்பினா்கள் தங்களது ஆட்சேபனையைத் தெரிவித்து வெளிநடப்பு செய்தனா்.

நான்கு மண்டலங்களிலும் தெருவிளக்கு பராமரிப்பு முழுவதையும் ஒரு நிறுவனத்திற்கு கொடுப்பது சரியானதல்ல என தெரிவித்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சோ்ந்த மாமன்ற உறுப்பினா்கள் தங்களது ஆட்சேபனையைத் தெரிவித்து வெளிநடப்பு செய்தனா்.

மாா்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சாா்ந்த 8 மாமன்ற உறுப்பினா்கள் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சாா்ந்த 4 மாமன்ற உறுப்பினா்கள் நீங்கலாக அனைத்து மாமன்ற உறுப்பினா்களின் ஆதரவோடு தீா்மானம் நிறைவேற்றப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

**பொருள் எண் 82**

கோவை மாநகராட்சி பகுதிகளில் உள்ள தெருவிளக்குகள் பராமரிப்பு செய்யும் ஒப்பந்ததாரா்களின் ஒப்பந்தங்களின் காலம் 30-06-2008 மற்றும் 01-07-2008 உடன் முடிவுற்றதால் புதிதாக நடைமுறைப்படுத்தப்பட உள்ள (ESCO) திட்டத்துடன் பராமரிப்பு பணிகளை சோ்த்து ஒப்பந்தப்புள்ளிகள் கோர மாமன்றம் தனது தீா்மான எண்.300 நாள் 27-03-2008-ன்படி தீா்மானம் நிறைவேற்றியது.

இந்த புதிய திட்டத்தின்படி மின்சார சேமிப்பு (Package-A) மற்றும் தெருவிளக்குகள் பராமரிப்பு பணி ,(Package-B) மேற்கொள்ளவும் மற்றும் மின்சார சேமிப்பு ஏற்படுத்தி அதில் பங்கு பெற உள்ள நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் தீா்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன் தொடா்ச்சியாக இத்திட்டத்தை தொடங்குதல், செயலாற்றுதல் மற்றும் கண்காணித்தல் ஆகிய அனைத்து பணிகளுக்கும் மாநகராட்சி அதிகாரிகள் உள்ளடக்கிய தொழில் நுட்பக்குழு (Technical Committee) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்குழு இத்திட்டத்திற்கு தேவையான (Technical bid, Price bid) தொழில்நுட்ப படிவங்கள், விலைப்புள்ளி படிவங்கள் ஆகியவற்றை கோவை மாநகராட்சியின் நான்கு மண்டலங்களுக்கும் தனித்தனியே தயாரித்து ஒப்பந்தப்புள்ளிகளை 20-06-2008 அன்று கோரப்பட்டன.

இதில் கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட தெருவிளக்கு பராமரிக்கும் பணி மற்றும் மின்சேமிப்பு பணிக்கு கடந்த 20-06-2008-ம் தேதி ஒப்பந்தப்புள்ளி முன்னிலையில் திறக்கப்பட்டன. இதில் தெருவிளக்குகள் மின்சேமிப்பு (Package–A) மற்றும் தெருவிளக்குகள் பராமரிப்புப்பணி ஆகிய இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. இதில் கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

1. தி / ள் சென்னை லைட்டிங் பிரைவேட் லிமிடெட்
2. தி / ள் சபரி எலெக்ட்ரிக்கல்ஸ்
3. தி / ள் சன்மேக் எண்டர்பிரைசஸ்
4. தி / ள் டைனாஸ்பீடு இன்டர்கிரேடட் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட்
5. தி / ள் சால்ஜர் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட்

தெருவிளக்குகள் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி இப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி அளிக்கும் நிறுவனம் Package–A மற்றும் Package– B ஆகிய இரண்டு பணிகளுக்கும் ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்பட வேண்டும். ஆனால், ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்கு மாறாக தி/ள் சென்னை லைட்டிங் பிரைவேட் லிமிடெட், தி/ள் சபரி எலெக்ட்ரிக்கல்ஸ், தி / ள் சன்மேக் எண்டர்பிரைசஸ் ஆகிய நிறுவனங்கள் தெருவிளக்குகள் பராமரிக்கும் பணிக்கு (Package-B) மட்டுமே ஒப்பந்தப்புள்ளிகள் அளித்தன.

எனவே, ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்கு மாறாக தெருவிளக்குகள் பராமரிக்கும் பணிக்கு (Package- B) மட்டுமே ஒப்பந்தப்புள்ளிகள் அளித்த மேற்படி மூன்று நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் தொழில் நுட்ப திறனாய்வுக்குழு உறுப்பினர்களால் நிராகரிக்கப்பட்டன.

மேலும் தி/ள் டைனாஸ்பீடு இன்டர்கிரேடட் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் ஒப்பந்தப்படிவத்தில் ஒப்பமிட்டு சமர்ப்பிக்கவில்லை. மேலும், இந்நிறுவனத்துடன் தெருவிளக்கு மின்சேமிப்பு மற்றும் பராமரிப்பு பணிக்கு கூட்டாக இணைந்து (Joint Venture) ஒப்பந்தப்புள்ளி அளித்த தி/ ள் ஆர்.என். எலெக்ட்ரிக்கல்ஸ் நிறுவனத்திற்கு ஆண்டு நிகர லாபக் கணக்குகள் (Turn over) ரூ 5 கோடிக்கு பதிலாக ரூ1.02 கோடிக்கு மட்டுமே சமர்ப்பித்துள்ளதால், இந்நிறுவனம் அளித்த ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது.

தி/ள் சால்ஜர் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனம் அளித்த ஒப்பந்தப்புள்ளி, ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பூர்த்தி செய்தது.

மேலும், அனைத்து தொழில்நுட்ப தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ள திருவாளர்கள் சால்ஜர் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனத்தார் சமர்ப்பித்துள்ள விலைப்புள்ளி உறை 14-07-2008 அன்று ஆணையாளர் அவர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. அதில், மேற்படி நிறுவனம் ஒரு வருடத்திற்கு 32 சதவீதம் மின்சேமிப்பு செய்வதாகவும், அதன் மதிப்பு ரூ65,57,245/- எனவும், இதில் 5 சதவீதம்(மதிப்பத்தொகை ரூ3,27,862/-) பங்கு மாநகராட்சிக்கும், மீதமுள்ள 95 சதவீதம் (மதிப்புத்தொகை ரூ 72,29,383/-) பங்கு தங்கள் நிறுவனத்திற்கு வழங்க வேண்டுமெனவும் ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் தெரிவித்துள்ளனர்.

மேலும், மேற்படி நிறுவனம் ஒரு வருடத்திற்கு தெருவிளக்குகள் மற்றும் சுவிட்சுகள் இயக்கி பராமரிக்க(including switching on/off cost) 31.92 சதவீதம் மதிப்பீட்டு விலைக்கு கூடுதலாகவும், தெருவிளக்குகளை பராமரிக்க, சுவிட்சுகள் இயக்கம் நிங்கலாக (excluding switching on/off cost) 30.71 சதவீதம் மதிப்பீட்டு விலைக்கு கூடுதலாகவும், தெருவிளக்கு உபகரணம் மற்றும் கேபிள்கள் வழங்க மதிப்பீட்டு விலைக்கு 1 சதவீதம் கூடுதலாகவும் அளித்துள்ளனர்,

மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியில் மாநகராட்சிக்கு வழங்க உள்ள 5 சதவீத பங்களிப்பு தொகையை உயர்த்தி கொடுக்க வேண்டும் எனவும், ஒப்பந்தப்புள்ளியில் தெருவிளக்கு பராமரிப்பு பணியில் அளித்துள்ள சதவீதத்தை குறைத்து கொடுக்க கோரியும் கடிதம் (Negotiation Letter) அனுப்பலாம் எனவும் மாநகர மன்ற தீர்மான எண்.29 நாள் 11-05-1999ன் படியும், ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளில் இடம் பெறாத நிபந்தனையான மின் உரிம சான்றிதழ் அவசியம் குறித்து தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் ஆலோசனை மற்றும் தெளிவுரை கோரலாம் எனவும், திருவாளர் சால்ஜர் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு மின் உரிம சான்றிதழ் சமர்ப்பிக்க கோரலாம் எனவும் 21-07-2008 அன்று ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு தீர்மானித்தது.

அதன்பேரில், மேற்படி ஒப்பந்ததாரர் தனது 30-07-2008ம் தேதிய கடிதத்தில் சிப்பம் -அ (Package-A) மின்சேமிப்பு பணியில் பங்களிப்பினை 5 சதவீதம் மட்டுமே தர இயலும் எனவும், மேலும் தெருவிளக்குகள் பராமரிப்பு பணி சிப்பம்-ஆ (Package-B) ஏற்கனவே வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தினை ஒரு வருடத்திற்கு தெருவிளக்குகள் மற்றும் சுவிட்சுகள் இயக்கி பராமரிக்க(including switching on/off cost) 4.92 சதவீதம் மதிப்பீட்டு விலைக்கு கூடுதலாகவும், தெருவிளக்குகளை பராமரிக்க, சுவிட்சுகள் இயக்கம் நீங்கலாக (excluding switching on/off cost) 4.98 சதவீதம் மதிப்பீட்டு விலைக்கு கூடுதலாகவும், விலை குறைப்பு செய்து பணி செய்ய ஒப்புதல் அளித்துள்ளனர்.

மேலும் தெருவிளக்கு உபகரணம் மற்றும் கேபிள்கள் வழங்க மதிப்பீட்டு விலைக்கு 1 சதவீதம் கூடுதலாக ஏற்கனவே வழங்கியுள்ள விலைவிவரப்படி பணி செய்ய ஒப்புதல் அளித்துள்ளனர். மேலும் செயற்பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம்/ மாநகர் கோவை, அவர்கள் தெருவிளக்கு பராமரிப்பு பணி செய்ய மின் உரிம சான்று பெற்றிருத்தல் அவசியம் எனவும் தெரிவித்துள்ளார்.

மேற்படி திருவாளர்கள் சால்ஜர் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனத்தார் தமிழ்நாடு அரசு மின் உரிமம் வழங்கும் வாரியத்தால் 07-08-2008-ம் தேதியிட்ட மின் உரிம சான்று சமர்ப்பித்துள்ளார். இதனை தொடர்ந்து 13-08-2008ம் தேதி கூடிய ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கலாம் என தெரிவித்துள்ளது.

எனவே, திருவாளர்கள் சால்ஜர் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனத்தார் சிப்பம்-அ (Package-A) 5 ஆண்டுகளுக்கு மின்சேமிப்பு பணியில் தங்கள் நிறுவனத்திற்கு 95 சதவீதமும் மாநகராட்சிக்கு 5 சதவீதம் பங்களிப்பினை ஏற்கவும், சிப்பம்-ஆ (Package-B) 3 ஆண்டுகளுக்கு பராமரிப்பு பணியில் ஒரு வருடத்திற்கு தெருவிளக்குகள் மற்றும் சுவிட்சுகள் இயக்கி பராமரிக்க (including switching on/off cost) 4.92 சதவீதம் மதிப்பீட்டு விலைக்கு கூடுதலாகவும், தெருவிளக்குகளை பராமரிக்க, சுவிட்சுகள் இயக்கம் நீங்கலாக (excluding switching on/off cost) 4.98 சதவீதம் மதிப்பீட்டு விலைக்கு கூடுதலாகவும், தெருவிளக்கு உபகரணம் மற்றும் கேபிள்கள் வழங்க மதிப்பீட்டு விலைக்கு 1 சதவீதம் கூடுதலாகவும் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து முடிவு செய்ய மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் முடிவு செய்யலாம்

ந.க.எண். 6476/08/எம்டி4 ந.க.எண். 6480/08/எம்டி4

**<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 210 நாள் : 29.08.2008</u>**

மாமன்ற தீர்மானம் எண். 47 நாள் 11.5.1999-ன்படி, இம்மாநகராட்சியில் மின்சாரம் சம்பந்தப்பட்ட பணிகளை ஐந்து ஆண்டுகால அனுபவம் மற்றும் ESB உரிமம் பெற்ற ஒப்பந்ததாரர்களிடம் ஒப்படைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. ESCO மூலம் மின்சேமிப்பு மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு செய்யும் திட்டம், தமிழ்நாட்டில் முன்னோடி திட்டமாக இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படவுள்ளது. எனவே மேற்படி மாமன்ற தீர்மானம் எண். 47 நாள் 11.5.1999-ல் தீர்மானித்துள்ளவாறு ESB உரிமம் மற்றும் ஐந்து ஆண்டுகால அனுபவம் ஆகியவற்றிலிருந்து விலக்கு அளித்து, மின்சேமிப்பு மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு பணியினை ஒப்படைப்பு செய்வதென தீர்மானிக்கப்பட்டது.

கோவை மாநகராட்சியில் தி/ ள். சபரி எலக்ட்ரிக்கல்ஸ் மற்றும் தி/ள். சன்மேக் என்டர்பிரைசஸ் நிறுவனத்தினருக்கு வழங்கப்பட்ட தெருவிளக்கு பராமரிப்புப் பணிக்கான ஒப்பந்தகாலம் 30.6.08-உடன் முடிவுற்று தற்போது ஒப்பந்ததாரருக்கு கால நீட்டிப்பு வழங்கி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் இப்பணியின் அவசர அவசியம் கருதியும், மேலும் கால நீட்டிப்பு வழங்கக் கூடாது என இம்மாமன்றம் கருதுவதாலும் தெருவிளக்கு பராமரிப்புப் பணியினை உடனடியாக ஒப்பந்ததாரருக்கு ஒப்படை செய்வது அவசியம் என இம்மாமன்றம் கருதுகிறது.

மேலும் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் விநியோகத்திலிருந்து மாநகராட்சியின் உபயோகத்தில் 32% மின்சேமிப்பு செய்ய உள்ளதாக இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள தி/ள். சால்ஜர் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தினர் ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ளனர்.

எனவே கிழக்கு மண்டலத்திற்கு தி/ள். சால்ஜா் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தாா் சிப்பம். அ (Package-A) ஐந்து ஆண்டுகளுக்கு மின் சேமிப்பில் 95% தி/ள். சால்ஜா் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தாருக்கும், 5% மாநகராட்சிக்கும் பங்களிப்பு வழங்க கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

சிப்பம்-ஆ (Package-B) மூன்று ஆண்டுகளுக்கான பராமரிப்புப் பணியில் 1) ஒரு வருடத்திற்கு தெருவிளக்குகள் மற்றும் சுவிட்சுகள் இயக்கி பராமரிக்கும் (including switch on/off cost) பணிக்கு மதிப்பீட்டு விலைக்கு 4.92 சதவீதம் கூடுதலாக வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொகையான ரூ. 80,70,017/- ஐ ESCO திட்டம் அமலாகும் வரையிலான காலத்திற்கு விகிதாச்சார அடிப்படையில் தொகை வழங்கவும்,

2) மூன்று ஆண்டுகளுக்கு சுவிட்சுகள் இயக்கம் நீங்கலாக தெரு விளக்குகளை பராமரிக்கும் (excluding switch on/off cost) பணிக்கு வருடம் ஒன்றிற்கு மதிப்பீட்டு விலைக்கு 4.98 சதவீதம் கூடுதலான தொகையான ரூ. 79,84,822/-க்கு வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும்,

3) தெருவிளக்கு உபகரணம் மற்றும் கேபிள்கள் வழங்க மதிப்பீட்டு விலைக்கு 1 சதவீதம் கூடுதலாக ரூ. 26,94,784/- க்கு வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும் தீா்மானிக்கப்பட்டது.

மேற்படி பணிகளை தி/ள். சால்ஜா் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு ஒப்படை செய்யவும் தீா்மானிக்கப்பட்டது.

மாமன்றத்தில் பெரும்பான்மை இருப்பதனால், ஒருதலைப் பட்சமாக இப்பணியினை ஒப்படை செய்ய தீா்மானம் நிறைவேற்றுவதாகத் தெரிவித்து, மாா்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சோ்ந்த மாமன்ற உறுப்பினா்கள் தங்களது ஆட்சேபனையைத் தெரிவித்து வெளிநடப்பு செய்தனா்.

நான்கு மண்டலங்களிலும் தெருவிளக்கு பராமரிப்பு முழுவதையும் ஒரு நிறுவனத்திற்கு கொடுப்பது சரியானதல்ல என தெரிவித்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சோ்ந்த மாமன்ற உறுப்பினா்கள் தங்களது ஆட்சேபனையைத் தெரிவித்து வெளிநடப்பு செய்தனா்.

மாா்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சாா்ந்த 8 மாமன்ற உறுப்பினா்கள் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சாா்ந்த 4 மாமன்ற உறுப்பினா்கள் நீங்கலாக அனைத்து மாமன்ற உறுப்பினா்களின் ஆதரவோடு தீா்மானம் நிறைவேற்றப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

பொருள் எண் 83

கோவை மாநகராட்சி பகுதிகளில் உள்ள தெருவிளக்குகள் பராமரிப்பு செய்யும் ஒப்பந்ததாரா்களின் ஒப்பந்தங்களின் காலம் 30-06-2008 மற்றும் 01-07-2008 உடன் முடிவுற்றதால் புதிதாக நடைமுறைப்படுத்தப்பட உள்ள (ESCO) திட்டத்துடன் பராமரிப்பு பணிகளை சோ்த்து ஒப்பந்தப்புள்ளிகள் கோர மாமன்றம் தனது தீா்மான எண்.300 நாள் 27-03-2008-ன்படி தீா்மானம் நிறைவேற்றியது.

இந்த புதிய திட்டத்தின்படி மின்சார சேமிப்பு (Package-A) மற்றும் தெருவிளக்குகள் பராமரிப்பு பணி ,(Package-B) மேற்கொள்ளவும் மற்றும் மின்சார சேமிப்பு ஏற்படுத்தி அதில் பங்கு பெற உள்ள நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் தீா்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன் தொடா்ச்சியாக இத்திட்டத்தை தொடங்குதல், செயலாற்றுதல் மற்றும் கண்காணித்தல் ஆகிய அனைத்து பணிகளுக்கும் மாநகராட்சி அதிகாரிகள் உள்ளடக்கிய தொழில் நுட்பக்குழு (Technical Committee) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்குழு இத்திட்டத்திற்கு தேவையான (Technical bid, Price bid) தொழில்நுட்ப படிவங்கள், விலைப்புள்ளி படிவங்கள் ஆகியவற்றை கோவை மாநகராட்சியின் நான்கு மண்டலங்களுக்கும் தனித்தனியே தயாரித்து ஒப்பந்தப்புள்ளிகளை 20-06-2008 அன்று கோரப்பட்டன.

இதில் தெற்கு மண்டலத்திற்குட்பட்ட தெருவிளக்கு பராமரிக்கும் பணி மற்றும் மின்சேமிப்பு பணிக்கு கடந்த 20-06-2008-ம் தேதி ஒப்பந்தப்புள்ளி முன்னிலையில் திறக்கப்பட்டன. இதில் தெருவிளக்குகள் மின்சேமிப்பு(Package–A) மற்றும் தெருவிளக்குகள் பராமரிப்புப்பணி ஆகிய இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. இதில் கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

1. தி / ள் சென்னை லைட்டிங் பிரைவேட் லிமிடெட்
2. தி / ள் சபரி எலெக்ட்ரிக்கல்ஸ்
3. தி / ள் சன்மேக் எண்டர்பிரைசஸ்
4. தி / ள் எஸ்.பி.இன்ஜினியர்ஸ்
5. தி / ள் சால்ஜர் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட்

தெருவிளக்குகள் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி இப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி அளிக்கும் நிறுவனம் Package–A மற்றும் Package– B ஆகிய இரண்டு பணிகளுக்கும் ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்பட வேண்டும். ஆனால், ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்கு மாறாக தி/ள் சென்னை லைட்டிங் பிரைவேட் லிமிடெட், தி/ள் சபரி எலெக்ட்ரிக்கல்ஸ், தி/ள் சன்மேக் எண்டர்பிரைசஸ் ஆகிய நிறுவனங்கள் தெருவிளக்குகள் பராமரிக்கும் பணிக்கு (Package-B) மட்டுமே ஒப்பந்தப்புள்ளிகள் அளித்தன. மேலும், எஸ்.பி.என்ஜினியர்ஸ் நிறுவனம் அளித்த ஒப்பந்தப்புள்ளி உறையினுள் இருந்த தொழில்நுட்ப (Technical Bid Cover) மற்றும் விலைப்புள்ளி உறைகள் (Price Bid cover) முத்திரையிடாமல் சமர்ப்பித்துள்ளனர்.

நிபந்தனைகளுக்கு மாறாக தெருவிளக்குகள் பராமரிக்கும் பணிக்கு (Package- B) மட்டுமே ஒப்பந்தப்புள்ளிகள் அளித்த தி/ ள் சென்னை லைட்டிங் பிரைவேட் லிமிடெட், தி/ள் சபரி எலெக்ட்ரிக்கல்ஸ், தி/ள் சன்மேக் எண்டர்பிரைசஸ் ஆகிய மூன்று நிறுவனங்கள் மற்றும் முத்திரையிடாத ஒப்பந்தப்புள்ளி உறையினை அளித்த தி/ள் எஸ்.பி. இன்ஜினியர்ஸ் நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப திறனாய்வுக் குழுவினால் நிராகரிக்கப்பட்டன.

தி/ள் சால்ஜர் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனம் அளித்த ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பூர்த்தி செய்துள்ளது.

மேலும், அனைத்து தொழில்நுட்ப தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ள திருவாளர்கள் சால்ஜர் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனத்தார் சமர்ப்பித்துள்ள விலைப்புள்ளி உறை 14-07-2008 அன்று ஆணையாளர் அவர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. அதில், மேற்படி நிறுவனம் ஒரு வருடத்திற்கு 32 சதவீதம் மின்சேமிப்பு செய்வதாகவும், அதன் மதிப்பு ரூ. 48,66,800/- எனவும், இதில் 5 சதவீதம் (மதிப்பத் தொகை ரூ. 2,43,340/-) பங்கு மாநகராட்சிக்கும், மீதமுள்ள 95 சதவீதம் (மதிப்புத்தொகை ரூ 46,23,460/-) பங்கு தங்கள் நிறுவனத்திற்கு வழங்க வேண்டுமெனவும் ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் தெரிவித்துள்ளனர்.

மேலும், மேற்படி நிறுவனம் ஒரு வருடத்திற்கு தெருவிளக்குகள் மற்றும் சுவிட்சுகள் இயக்கி பராமரிக்க(including switching on/off cost) 31.88 சதவீதம் மதிப்பீட்டு விலைக்கு கூடுதலாகவும், தெரு விளக்குகளை பராமரிக்க, சுவிட்சுகள் இயக்கம் நிங்கலாக (excluding switching on/off cost) 30.57 சதவீதம் மதிப்பீட்டு விலைக்கு கூடுதலாகவும், தெருவிளக்கு உபகரணம் மற்றும் கேபிள்கள் வழங்க மதிப்பீட்டு விலைக்கு 1 சதவீதம் கூடுதலாகவும் அளித்துள்ளனர்,

மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியில் மாநகராட்சிக்கு வழங்க உள்ள 5 சதவீத பங்களிப்பு தொகையை உயர்த்தி கொடுக்க வேண்டும் எனவும், ஒப்பந்தப்புள்ளியில் தெருவிளக்கு பராமரிப்பு பணியில் அளித்துள்ள சதவீதத்தை குறைத்து கொடுக்க கோரியும் கடிதம் (Negotiation Letter) அனுப்பலாம் எனவும் மாநகர மன்ற தீர்மான எண்.29 நாள் 11-05-1999-ன்படியும், ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளில் இடம் பெறாத நிபந்தனையான மின் உரிம சான்றிதழ் அவசியம் குறித்து தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் ஆலோசனை மற்றும் தெளிவுரை கோரலாம் எனவும், திருவாளர் சால்ஜர் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு மின் உரிம சான்றிதழ் சமர்ப்பிக்க கோரலாம் எனவும் 21-07-2008 அன்று ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு தீர்மானித்தது.

அதன்பேரில், மேற்படி ஒப்பந்ததாரா் தனது 30-07-2008- ம் தேதிய கடிதத்தில் சிப்பம் -அ (Package-A) மின்சேமிப்பு பணியில் பங்களிப்பினை 5 சதவீதம் மட்டுமே தர இயலும் எனவும், மேலும் தெருவிளக்குகள் பராமரிப்பு பணி சிப்பம்-ஆ (Package-B) ஏற்கனவே வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தினை ஒரு வருடத்திற்கு தெருவிளக்குகள் மற்றும் சுவிட்சுகள் இயக்கி பராமரிக்க(including switching on/off cost) 4.92 சதவீதம் மதிப்பீட்டு விலைக்கு கூடுதலாகவும், தெருவிளக்குகளை பராமரிக்க, சுவிட்சுகள் இயக்கம் நீங்கலாக (excluding switching on/off cost) 4.98 சதவீதம் மதிப்பீட்டு விலைக்கு கூடுதலாகவும், தெருவிளக்குகளை பராமரிக்க, சுவிட்சுகள் இயக்கம் நீங்கலாக (excluding switching on/off cost) 4.98 சதவீதம் மதிப்பீட்டு விலைக்கு கூடுதலாகவும், விலை குறைப்பு செய்து பணி செய்ய ஒப்புதல் அளித்துள்ளனா்.

மேலும் தெருவிளக்கு உபகரணம் மற்றும் கேபிள்கள் வழங்க மதிப்பீட்டு விலைக்கு 1 சதவீதம் கூடுதலாக ஏற்கனவே வழங்கியுள்ள விலைவிவரப்படி பணி செய்ய ஒப்புதல் அளித்துள்ளனா். மேலும் செயற்பொறியாளா், தமிழ்நாடு மின்சார வாரியம்/ மாநகா் கோவை, அவா்கள் தெருவிளக்கு பராமரிப்பு பணி செய்ய மின் உரிம சான்று பெற்றிருத்தல் அவசியம் எனவும் தெரிவித்துள்ளாா்.

மேற்படி திருவாளா்கள் சால்ஜா் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனத்தாா் தமிழ்நாடு அரசு மின் உரிமம் வழங்கும் வாரியத்தால் 07-08-2008-ம் தேதியிட்ட மின் உரிம சான்று சமா்பித்துள்ளாா். இதனை தொடா்ந்து 13-08-2008ம் தேதி கூடிய ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கலாம் என தெரிவித்துள்ளது.

எனவே, திருவாளா்கள் சால்ஜா் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனத்தாா் சிப்பம்-அ (Package-A) 5 ஆண்டுகளுக்கு மின்சேமிப்பு பணியில் தங்கள் நிறுவனத்திற்கு 95 சதவீதமும் மாநகராட்சிக்கு 5 சதவீதம் பங்களிப்பினை ஏற்கவும், சிப்பம்-ஆ (Package-B) 3 ஆண்டுகளுக்கு பராமரிப்பு பணியில் ஒரு வருடத்திற்கு தெருவிளக்குகள் மற்றும் சுவிட்சுகள் இயக்கி பராமரிக்க (including switching on/off cost) 4.92 சதவீதம் மதிப்பீட்டு விலைக்கு கூடுதலாகவும், தெருவிளக்குகளை பராமரிக்க, சுவிட்சுகள் இயக்கம் நீங்கலாக (excluding switching on/off cost) 4.98 சதவீதம் மதிப்பீட்டு விலைக்கு கூடுதலாகவும், தெருவிளக்கு உபகரணம் மற்றும் கேபிள்கள் வழங்க மதிப்பீட்டு விலைக்கு 1 சதவீதம் கூடுதலாகவும் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து முடிவு செய்ய மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் முடிவு செய்யலாம்
ந.க.எண். 6474/08/எம்டி4 ந.க.எண். 6479/08/எம்டி4

## மா.ந.ம.தீா்மானம் எண் : 211 நாள் : 29.08.2008

மாமன்ற தீா்மானம் எண். 47 நாள் 11.5.1999-ன்படி, இம்மாநகராட்சியில் மின்சாரம் சம்பந்தப்பட்ட பணிகளை ஐந்து ஆண்டுகால அனுபவம் மற்றும் ESB உரிமம் பெற்ற ஒப்பந்ததாரா்களிடம் ஒப்படைக்க தீா்மானிக்கப்பட்டுள்ளது. ESCO மூலம் மின்சேமிப்பு மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு செய்யும் திட்டம், தமிழ்நாட்டில் முன்னோடி திட்டமாக இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படவுள்ளது. எனவே மேற்படி மாமன்ற தீா்மானம் எண். 47 நாள் 11.5.1999-ல் தீா்மானித்துள்ளவாறு ESB உரிமம் மற்றும் ஐந்து ஆண்டுகால அனுபவம் ஆகியவற்றிலிருந்து விலக்கு அளித்து, மின்சேமிப்பு மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு பணியினை ஒப்படைப்பு செய்வதென தீா்மானிக்கப்பட்டது.

கோவை மாநகராட்சியில் தி/ ள். சபரி எலக்ட்ரிக்கல்ஸ் மற்றும் தி/ள். சன்மேக் என்டா்பிரைசஸ் நிறுவனத்தினருக்கு வழங்கப்பட்ட தெருவிளக்கு பராமரிப்புப் பணிக்கான ஒப்பந்தகாலம் 30.6.08-உடன் முடிவுற்று தற்போது ஒப்பந்ததாரருக்கு கால நீட்டிப்பு வழங்கி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் இப்பணியின் அவசர அவசியம் கருதியும், மேலும் கால நீட்டிப்பு வழங்கக் கூடாது என இம்மாமன்றம் கருதுவதாலும் தெருவிளக்கு பராமரிப்புப் பணியினை உடனடியாக ஒப்பந்ததாரருக்கு ஒப்படை செய்வது அவசியம் என இம்மாமன்றம் கருதுகிறது.

மேலும் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் விநியோகத்திலிருந்து மாநகராட்சியின் உபயோகத்தில் 32% மின்சேமிப்பு செய்ய உள்ளதாக இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள தி/ள். சால்ஜா் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தினா் ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ளனா்.

எனவே தெற்கு மண்டலத்திற்கு தி/ள். சால்ஜா் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தாா் சிப்பம். அ (Package-A) ஐந்து ஆண்டுகளுக்கு மின் சேமிப்பில் 95% தி/ள். சால்ஜா் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தாருக்கும், 5% மாநகராட்சிக்கும் பங்களிப்பு வழங்க கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

சிப்பம்-ஆ (Package-B) மூன்று ஆண்டுகளுக்கான பராமரிப்புப் பணியில்

1) ஒரு வருடத்திற்கு தெருவிளக்குகள் மற்றும் சுவிட்சுகள் இயக்கி பராமரிக்கும் (including switch on/off cost) பணிக்கு மதிப்பீட்டு விலைக்கு 4.92 சதவீதம் கூடுதலாக வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொகையான ரூ. 50,19,232/- ஐ ESCO திட்டம் அமலாகும் வரையிலான காலத்திற்கு விகிதாச்சார அடிப்படையில் தொகை வழங்கவும்,

2) மூன்று ஆண்டுகளுக்கு சுவிட்சுகள் இயக்கம் நீங்கலாக தெரு விளக்குகளை பராமரிக்கும் (excluding switch on/off cost) பணிக்கு வருடம் ஒன்றிற்கு மதிப்பீட்டு விலைக்கு 4.98 சதவீதம் கூடுதலான தொகையான ரூ. 49,70,779/-க்கு வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும்,

3) தெருவிளக்கு உபகரணம் மற்றும் கேபிள்கள் வழங்க மதிப்பீட்டு விலைக்கு 1 சதவீதம் கூடுதலாக ரூ. 26,94,784/- க்கு வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும் தீா்மானிக்கப்பட்டது.

மேற்படி பணிகளை தி/ள். சால்ஜா் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு ஒப்படை செய்யவும் தீா்மானிக்கப்பட்டது.

மாமன்றத்தில் பெரும்பான்மை இருப்பதனால், ஒருதலைப் பட்சமாக இப்பணியினை ஒப்படை செய்ய தீா்மானம் நிறைவேற்றுவதாகத் தெரிவித்து, மாா்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சோ்ந்த மாமன்ற உறுப்பினா்கள் தங்களது ஆட்சேபனையைத் தெரிவித்து வெளிநடப்பு செய்தனா்.

நான்கு மண்டலங்களிலும் தெருவிளக்கு பராமரிப்பு முழுவதையும் ஒரு நிறுவனத்திற்கு கொடுப்பது சரியானதல்ல என தெரிவித்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சோ்ந்த மாமன்ற உறுப்பினா்கள் தங்களது ஆட்சேபனையைத் தெரிவித்து வெளிநடப்பு செய்தனா்.

மாா்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சாா்ந்த 8 மாமன்ற உறுப்பினா்கள் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சாா்ந்த 4 மாமன்ற உறுப்பினா்கள் நீங்கலாக அனைத்து மாமன்ற உறுப்பினா்களின் ஆதரவோடு தீா்மானம் நிறைவேற்றப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

**பொருள் எண் 84**

கோவை மாநகராட்சி பகுதிகளில் உள்ள தெருவிளக்குகள் பராமரிப்பு செய்யும் ஒப்பந்ததாரா்களின் ஒப்பந்தங்களின் காலம் 30-06-2008 மற்றும் 01-07-2008 உடன் முடிவுற்றதால் புதிதாக நடைமுறைப்படுத்தப்பட உள்ள (ESCO) திட்டத்துடன் பராமரிப்பு பணிகளை சோ்த்து ஒப்பந்தப்புள்ளிகள் கோர மாமன்றம் தனது தீா்மான எண்.300 நாள் 27-03-2008-ன்படி தீா்மானம் நிறைவேற்றியது.

இந்த புதிய திட்டத்தின்படி மின்சார சேமிப்பு (Package-A) மற்றும் தெருவிளக்குகள் பராமரிப்பு பணி ,(Package-B) மேற்கொள்ளவும் மற்றும் மின்சார சேமிப்பு ஏற்படுத்தி அதில் பங்கு பெற உள்ள நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் தீா்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன் தொடா்ச்சியாக இத்திட்டத்தை தொடங்குதல், செயலாற்றுதல் மற்றும் கண்காணித்தல் ஆகிய அனைத்து பணிகளுக்கும் மாநகராட்சி அதிகாரிகள் உள்ளடக்கிய தொழில் நுட்பக்குழு (Technical Committee) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்குழு இத்திட்டத்திற்கு தேவையான (Technical bid, Price bid) தொழில்நுட்ப படிவங்கள், விலைப்புள்ளி படிவங்கள் ஆகியவற்றை கோவை மாநகராட்சியின் நான்கு மண்டலங்களுக்கும் தனித்தனியே தயாரித்து ஒப்பந்தப்புள்ளிகளை 20-06-2008 அன்று கோரப்பட்டன.

இதில் மேற்கு மண்டலத்திற்குட்பட்ட தெருவிளக்கு பராமரிக்கும் பணி மற்றும் மின்சேமிப்பு பணிக்கு கடந்த 20-06-2008-ம் தேதி ஒப்பந்தப்புள்ளி முன்னிலையில் திறக்கப்பட்டன. இதில் தெருவிளக்குகள் மின்சேமிப்பு(Package– A) மற்றும் தெருவிளக்குகள் பராமரிப்புப்பணி ஆகிய இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. இதில் கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

1. தி / ள் சென்னை லைட்டிங் பிரைவேட் லிமிடெட்
2. தி / ள் சபரி எலெக்ட்ரிக்கல்ஸ்
3. தி / ள் சன்மேக் எண்டர்பிரைசஸ்
4. தி / ள் ஆனந்தா எலெக்ட்ரிக்கல்ஸ் அண்ட் ஒயரிங் கான்ட்ரக்ட்ரஸ்
5. தி / ள் சால்ஜர் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட்

தெருவிளக்குகள் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி இப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி அளிக்கும் நிறுவனம் Package–A மற்றும் Package– B ஆகிய இரண்டு பணிகளுக்கும் ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்பட வேண்டும். ஆனால், ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்கு மாறாக தி/ள் சென்னை லைட்டிங் பிரைவேட் லிமிடெட், தி/ள் சபரி எலெக்ட்ரிக்கல்ஸ், தி/ள் சன்மேக் எண்டர்பிரைசஸ் ஆகிய நிறுவனங்கள் தெருவிளக்குகள் பராமரிக்கும் பணிக்கு (Package-B) மட்டுமே ஒப்பந்தப்புள்ளிகள் அளித்தன. மேலும், தி/ள் ஆனந்தா எலெக்ட்ரிக்கல்ஸ் அண்ட் ஒயரிங் கான்ட்ரக்ட்ரஸ் அளித்த ஒப்பந்தப்புள்ளி உறையினுள் இருந்த தொழில்நுட்ப (Technical Bid Cover)மற்றும் விலைப்புள்ளி உறைகள் (Price Bid cover) முத்திரையிடாமல் சமர்ப்பித்துள்ளனர்.

நிபந்தனைகளுக்கு மாறாக தெருவிளக்குகள் பராமரிக்கும் பணிக்கு (Package- B) மட்டுமே ஒப்பந்தப்புள்ளிகள் அளித்த தி / ள் சென்னை லைட்டிங் பிரைவேட் லிமிடெட், தி/ள் சபரி எலெக்ட்ரிக்கல்ஸ், தி/ள் சன்மேக் எண்டர்பிரைசஸ் ஆகிய மூன்று நிறுவனங்கள் மற்றும் முத்திரையிடாத ஒப்பந்தப்புள்ளி உறையினை அளித்த தி/ள் ஆனந்தா எலெக்ட்ரிக்கல்ஸ் அண்ட் ஒயரிங் கான்ட்ரக்ட்ரஸ் நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப திறனாய்வுக்குழுவினால் நிராகரிக்கப்பட்டன.

தி/ள் சால்ஜர் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனம் அளித்த ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பூர்த்தி செய்துள்ளது.

மேலும், அனைத்து தொழில்நுட்ப தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ள திருவாளர்கள் சால்ஜர் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனத்தார் சமர்ப்பித்துள்ள விலைப்புள்ளி உறை 14-07-2008 அன்று ஆணையாளர் அவர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. அதில், மேற்படி நிறுவனம் ஒரு வருடத்திற்கு 32 சதவீதம் மின்சேமிப்பு செய்வதாகவும், அதன் மதிப்பு ரூ47,57,205.44 எனவும், இதில் 5 சதவீதம்(மதிப்பத்தொகை ரூ2,37,860.27) பங்கு மாநகராட்சிக்கும், மீதமுள்ள 95 சதவீதம் (மதிப்புத்தொகை ரூ 45,19,345.17) பங்கு தங்கள் நிறுவனத்திற்கு வழங்க வேண்டுமெனவும் ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் தெரிவித்துள்ளனர்.

மேலும், மேற்படி நிறுவனம் ஒரு வருடத்திற்கு தெருவிளக்குகள் மற்றும் சுவிட்சுகள் இயக்கி பராமரிக்க(including switching on/off cost) 31.86 சதவீதம் மதிப்பீட்டு விலைக்கு கூடுதலாகவும், தெருவிளக்குகளை பராமரிக்க, சுவிட்சுகள் இயக்கம் நிங்கலாக (excluding switching on/off cost) 30.61 சதவீதம் மதிப்பீட்டு விலைக்கு கூடுதலாகவும், தெருவிளக்கு உபகரணம் மற்றும் கேபிள்கள் வழங்க மதிப்பீட்டு விலைக்கு 1 சதவீதம் கூடுதலாகவும் அளித்துள்ளனர்.

மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியில் மாநகராட்சிக்கு வழங்க உள்ள 5 சதவீத பங்களிப்பு தொகையை உயர்த்தி கொடுக்க வேண்டும் எனவும், ஒப்பந்தப்புள்ளியில் தெருவிளக்கு பராமரிப்பு பணியில் அளித்துள்ள சதவீதத்தை குறைத்து கொடுக்க கோரியும் கடிதம் (Negotiation Letter) அனுப்பலாம் எனவும், 21-07-2008 அன்று ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு தீர்மானித்தது.

இதன் அடிப்படையில் ஒப்பந்ததாரர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. மேற்படி ஒப்பந்ததாரர் தனது 30-07-2008ம் தேதிய கடிதத்தில் சிப்பம் -அ (Package-A) மின்சேமிப்பு பணியில் பங்களிப்பினை 5 சதவீதம் மட்டுமே தர இயலும் எனவும் மேலும் தெருவிளக்குகள் பராமரிப்பு பணி சிப்பம்-ஆ (Package-B) ஏற்கனவே வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தினை ஒரு வருடத்திற்கு தெருவிளக்குகள் மற்றும் சுவிட்சுகள் இயக்கி பராமரிக்க(including switching on/off cost) 4.92 சதவீதம் மதிப்பீட்டு விலைக்கு கூடுதலாகவும், தெருவிளக்குகளை பராமரிக்க, சுவிட்சுகள் இயக்கம் நீங்கலாக (excluding switching on/off cost) 4.98 சதவீதம் மதிப்பீட்டு விலைக்கு கூடுதலாகவும், விலை குறைப்பு செய்து பணி செய்ய ஒப்புதல் அளித்துள்ளனர்.

மேலும் தெருவிளக்கு உபகரணம் மற்றும் கேபிள்கள் வழங்க மதிப்பீட்டு விலைக்கு 1 சதவீதம் கூடுதலாக ஏற்கனவே வழங்கியுள்ள விலைவிவரப்படி பணி செய்ய ஒப்புதல் அளித்துள்ளனர். மேலும் செயற்பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம்/ மாநகர் கோவை, அவர்கள் தெருவிளக்கு பராமரிப்பு பணி செய்ய மின் உரிம சான்று பெற்றிருத்தல் அவசியம் எனவும் தெரிவித்துள்ளார்.

மேற்படி திருவாளர்கள் சால்ஜர் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனத்தார் தமிழ்நாடு அரசு மின் உரிமம் வழங்கும் வாரியத்தால் 07-08-2008-ம் தேதியிட்ட மின் உரிம சான்று சமர்ப்பித்துள்ளார். இதனை தொடர்ந்து 13-08-2008-ம் தேதி கூடிய ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கலாம் என தெரிவித்துள்ளது.

எனவே, திருவாளர்கள் சால்ஜர் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனத்தார் சிப்பம்-அ (Package-A) 5 ஆண்டுகளுக்கு மின்சேமிப்பு பணியில் தங்கள் நிறுவனத்திற்கு 95 சதவீதமும் மாநகராட்சிக்கு 5 சதவீதம் பங்களிப்பினை ஏற்கவும், சிப்பம்-ஆ (Package-B) 3 ஆண்டுகளுக்கு பராமரிப்பு பணியில் ஒரு வருடத்திற்கு தெருவிளக்குகள் மற்றும் சுவிட்சுகள் இயக்கி பராமரிக்க(including switching on/off cost) 4.92 சதவீதம் மதிப்பீட்டு விலைக்கு கூடுதலாகவும், தெருவிளக்குகளை பராமரிக்க, சுவிட்சுகள் இயக்கம் நீங்கலாக (excluding switching on/off cost) 4.98 சதவீதம் மதிப்பீட்டு விலைக்கு கூடுதலாகவும், தெருவிளக்கு உபகரணம் மற்றும் கேபிள்கள் வழங்க மதிப்பீட்டு விலைக்கு 1 சதவீதம் கூடுதலாகவும் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து முடிவு செய்ய மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் முடிவு செய்யலாம்

ந.க.எண். 6475 /08/எம்டி4 ந.க.எண். 6481/08/எம்டி4

**<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 212 நாள் : 29.08.2008</u>**

மாமன்ற தீர்மானம் எண். 47 நாள் 11.5.1999-ன்படி, இம்மாநகராட்சியில் மின்சாரம் சம்பந்தப்பட்ட பணிகளை ஐந்து ஆண்டுகால அனுபவம் மற்றும் ESB உரிமம் பெற்ற ஒப்பந்ததாரர்களிடம் ஒப்படைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. ESCO மூலம் மின்சேமிப்பு மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு செய்யும் திட்டம், தமிழ்நாட்டில் முன்னோடி திட்டமாக இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படவுள்ளது. எனவே மேற்படி மாமன்ற தீர்மானம் எண். 47 நாள் 11.5.1999-ல் தீர்மானித்துள்ளவாறு ESB உரிமம் மற்றும் ஐந்து ஆண்டுகால அனுபவம் ஆகியவற்றிலிருந்து விலக்கு அளித்து, மின்சேமிப்பு மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு பணியினை ஒப்படைப்பு செய்வதென தீர்மானிக்கப்பட்டது.

கோவை மாநகராட்சியில் தி/ ள். சபரி எலக்ட்ரிக்கல்ஸ் மற்றும் தி/ள். சன்மேக் என்டர்பிரைசஸ் நிறுவனத்தினருக்கு வழங்கப்பட்ட தெருவிளக்கு பராமரிப்புப் பணிக்கான ஒப்பந்தகாலம் 30.6.08-உடன் முடிவுற்று தற்போது ஒப்பந்ததாரருக்கு கால நீட்டிப்பு வழங்கி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் இப்பணியின் அவசர அவசியம் கருதியும், மேலும் கால நீட்டிப்பு வழங்கக் கூடாது என இம்மாமன்றம் கருதுவதாலும் தெருவிளக்கு பராமரிப்புப் பணியினை உடனடியாக ஒப்பந்ததாரருக்கு ஒப்படை செய்வது அவசியம் என இம்மாமன்றம் கருதுகிறது.

மேலும் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் விநியோகத்திலிருந்து மாநகராட்சியின் உபயோகத்தில் 32% மின்சேமிப்பு செய்ய உள்ளதாக இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள தி/ள். சால்ஜர் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தினர் ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ளனர்.

எனவே மேற்கு மண்டலத்திற்கு தி/ள். சால்ஜர் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தார் சிப்பம். அ (Package-A) ஐந்து ஆண்டுகளுக்கு மின் சேமிப்பில் 95% தி/ள். சால்ஜர் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தாருக்கும், 5% மாநகராட்சிக்கும் பங்களிப்பு வழங்க கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

சிப்பம்-ஆ (Package-B) மூன்று ஆண்டுகளுக்கான பராமரிப்புப் பணியில் 1) ஒரு வருடத்திற்கு தெருவிளக்குகள் மற்றும் சுவிட்சுகள் இயக்கி பராமரிக்கும் (including switch on/off cost) பணிக்கு மதிப்பீட்டு விலைக்கு 4.92 சதவீதம் கூடுதலாக வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொகையான ரூ. 52,65,930/- ஐ ESCO திட்டம் அமலாகும் வரையிலான காலத்திற்கு விகிதாச்சார அடிப்படையில் தொகை வழங்கவும்,

**2)** மூன்று ஆண்டுகளுக்கு சுவிட்சுகள் இயக்கம் நீங்கலாக தெரு விளக்குகளை பராமரிக்கும் **(excluding switch on/off cost)** பணிக்கு வருடம் ஒன்றிற்கு மதிப்பீட்டு விலைக்கு 4.98 சதவீதம் கூடுதலான தொகையான ரூ. **52,13,731/-**க்கு வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும்,

**3)** தெருவிளக்கு உபகரணம் மற்றும் கேபிள்கள் வழங்க மதிப்பீட்டு விலைக்கு 1 சதவீதம் கூடுதலாக ரூ. **26,94,784/-** க்கு வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும் தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி பணிகளை தி/ள். சால்ஜர் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு ஒப்படை செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

மாமன்றத்தில் பெரும்பான்மை இருப்பதனால், ஒருதலைப் பட்சமாக இப்பணியினை ஒப்படை செய்ய தீர்மானம் நிறைவேற்றுவதாகத் தெரிவித்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாமன்ற உறுப்பினர்கள் தங்களது ஆட்சேபனையைத் தெரிவித்து வெளிநடப்பு செய்தனர்.

நான்கு மண்டலங்களிலும் தெருவிளக்கு பராமரிப்பு முழுவதையும் ஒரு நிறுவனத்திற்கு கொடுப்பது சரியானதல்ல என தெரிவித்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாமன்ற உறுப்பினர்கள் தங்களது ஆட்சேபனையைத் தெரிவித்து வெளிநடப்பு செய்தனர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த 8 மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த 4 மாமன்ற உறுப்பினர்கள் நீங்கலாக அனைத்து மாமன்ற உறுப்பினர்களின் ஆதரவோடு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 85

பொருள் . கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - மேட்டுப்பாளையம் சாலை கவுண்டம்பாளையம் கிராமம் - க.ச. எண். 61 / 1 Pt, 57 / 1 Pt, 5 ஏக்கர் நிலப்பரப்பு, கல்வி உபயோகத்திற்கு ஒதுக்கீடு செய்தல் - தொடர்பாக.

பார்வை . வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 17.06.2008. நாளிட்ட கடிதம்.

-----------

இடம் ஆய்வு செய்யப்பட்டது. வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் ஆணையர் அவர்களுக்கு சமர்ப்பித்துள்ள கடிதத்தில், வார்டு எண். 63, கே.கே புதூர் மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி மற்றும் ஆரம்பப் பள்ளிகள் முறையே 10 சென்ட் மற்றும் ஐந்து சென்ட் அளவில் இயங்கி வருவதாகவும், போதுமான வசதிகள் இல்லை என தெரிவித்துள்ளதுடன், மேல்நிலை பள்ளிக்கு, கவுண்டம்பாளையம் உரக் கிடங்கு பகுதியில் ஐந்து ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்ய உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் கடிதத்தில் தெரிவித்துள்ள பள்ளிக்கூடம் மாநகராட்சி உயர் நிலைப்பள்ளி குப்பக்கோனாம்புதூர் மணியம் வேலப்பர் வீதியில் அமைந்துள்ளது. இப்பள்ளிக்கூடம் தொடர்பான விபரங்கள்.

| | |
|---|---|
| பரப்பளவு | - 13.6 சென்ட் |
| மொத்த மாணவர், மாணவிகள் | - 240 ஆண்கள், 200 பெண்கள் |
| ஆசிரியர்கள் | - 15 |

கட்டிட தளங்கள் விபரம்

| | |
|---|---|
| தரைதளம் | - 5 அறைகள்<br>(1 தலைமை ஆசிரியர்)<br>(1 ஆசிரியர்கள், அலுவலர்கள் அறை)<br>(3 வகுப்பறைகள்) |
| முதல் தளம் | - 5 அறைகள்<br>(5 வகுப்பறைகள்) |
| இரண்டாம் தளம் | - 2 அறைகள்<br>(2 வகுப்பறைகள்) |

1. இப்பள்ளிக் கூடத்தின் மாணவர்கள் எண்ணிக்கை 450 அளவில் இருப்பதால் பள்ளி துவக்க நேரத்தில் பிரார்த்தனை கூட்டம் நடத்த வழிவகை இல்லாத சூழ்நிலையில் இட வசதியின்றி உள்ளது.
2. மாணவ, மாணவிகளின் மிதிவண்டிகள் நிறுத்த எவ்வித இட வசதியும் இல்லை.
3. அறிவியல் பரிசோதனை கூடங்கள் அமைக்க இட வசதியும் இல்லை.
4. கணிணி வசதிகள் அமைப்பதற்கு எவ்வித இட வசதியும் இல்லை.
5. கல்வி பயிலும் மாணவர்களுக்கு நூலகம் அமைப்பதற்கு எவ்வித இட வசதியும் இல்லை.
6. கலை நிகழ்ச்சிகள், கூட்டங்கள் நடத்த கூட்ட அரங்கு, கலையரங்கம் எதுவும் அமைக்க இட வசதி இல்லை.
7. மாணவ, மாணவிகள் விளையாட்டு திறன் ஊக்குவிக்க, உடற்பயிற்சி கூடம், மைதானங்கள் அமைக்க இட வசதி இல்லை.
8. மாணவ, மாணவியா் சுற்றுச் சூழல் மாசுபடாமல் மதிய உணவு அருந்த தூய்மையான உணவு கூடம் அமைக்க இட வசதி இல்லை.
9. மாணவ, மாணவியா் மற்றும் ஆசிரியர்களின் அடிப்படை சுகாதார வசதிகளை நிவா்த்தி செய்யும் அளவுக்கு கழிப்பிட வசதிகள் அமைக்க இட வசதி இல்லை.
10. தற்சமயம் இட வசதி பற்றாக்குறையால் நான்கு வகுப்பறை மாணவா்கள் அருகில் உள்ள மாநகராட்சி ஆரம்பப்பள்ளியின் நான்கு வகுப்பறைகளில் மாற்று ஏற்பாட்டில் வைக்கப்பட்டுள்ளனா். இதனால் ஆரம்பப்பள்ளி மாணவா்களின் கல்வி வசதிக்கும் இடையூறு ஏற்பட்டுள்ளது.
11. போதுமான காற்றோட்ட வசதி, தேவையான திறவிடங்களுடன், அடிப்படை வசதிகளான கழிப்பிடம், விளையாட்டு மைதானங்கள், கணிணி அறைகள், நூலகம், கலையரங்கம், மிதிவண்டி அறைகள், போதுமான இடவசதி அடங்கிய வகுப்பறைகள் ஆகியவற்றை அமைத்துக் கொடுக்க குறைந்த பட்சம் ஐந்து ஏக்கா் நிலப்பரப்பு தேவைப்படும.
12. தற்சமயம் இம்மாநகராட்சி உயா்நிலைப்பள்ளி தோ்வு முடிவுகள் சராசரி 85% நிலை நிறுத்தி வருகிறது.

மேற்காண் வசதிகளுடன் ஐந்து ஏக்கா் நிலப்பரப்பில் கல்விக்கூடம் அமைத்துக் கொடுத்தால் மேலும் சிறப்பாக நூறு சதவீத தோ்ச்சி பெற வாய்ப்பு உள்ளது. வணக்கத்திற்குரிய மேயா் அவா்கள் கடிதத்தில் கேட்டுள்ளபடி ஐந்து ஏக்கா் நிலப்பரப்பு ஒதுக்கீடு செய்வதால்

34 - வது வாா்டு நெசவாளா் காலனி பொதுமக்கள்,

61, 62 –வது வாா்டு பகுதி பொது மக்கள்,

63 - வது வாா்டு பகுதி பொது மக்கள்,

64 - வது வாா்டு பகுதி பொது மக்கள்,

65 - வது வாா்டு பகுதி பொது மக்கள்,

கவுண்டம்பாளையம் நகராட்சி பகுதி பொதுமக்கள் சுமாா் மூன்று லட்சம் போ் முழுமையாக பயனடைய வாய்ப்பு உள்ளதுடன், கல்விக்கூடம் மையப்பகுதியாகவும் அமைய வாய்ப்புள்ளது.

வணக்கத்திற்குரிய மேயா் அவா்கள், ஆணையா் அவா்களை, துணை மேயா், மண்டல தலைவா்கள், கல்விக்குழு தலைவா் மற்றும் உறுப்பினா்கள், சுகாதாரக்குழு தலைவா், பணிக்குழு தலைவா், ஆளும் கட்சி தலைவா் மற்றும் எதிா்கட்சித் தலைவா் மற்றும் நிா்வாக பொறியாளா், உதவி ஆணையாளா் (மேற்கு) உதவி நிா்வாக பொறியாளா் ஆகியோா் கலந்த ஸ்தல நேராய்வு கவுண்டம்பாளையம் உத்தேச ஒதுக்கீடு பகுதியில் 05.08.2008 முற்பகல் நடைபெற்றது.

உத்தேச ஒதுக்கீடு ஐந்து ஏக்கா் நிலப்பரப்பின் விவரம், இப்பகுதி மாநகராட்சிக்கு சொந்தமான 36.6 ஏக்கா் நிலப்பரப்பின் (கவுண்டம்பாளையம் கிராமம்) தென்மேற்கு மூலையில் அமையப் பெற்றுள்ளது. இந்நிலப்பரப்பின் புல எண்கள் முறையே கவுண்டம்பாளையம் கிராமம் க.ச.எண். 61 / 1, கவுண்டம்பாளையம் க.ச. எண். 57 / 1 ஆகும். காளியப்பன் வீதி, நா்மதா வீதி, பழனிகோனாா் வீதி, ஜீவா நகா் சாலை, மேட்டுப்பாளையம் சாலை அணுகு சாலையாக உள்ளது.

இப்பகுதி நகரமைப்பு முழுமைத்திட்டம், கவுணடம்பாளையம் கிராமம் விரிவு அபிவிருத்தி திட்டத்தின்படி க.ச. எண். 61 / 1, குடியிருப்பு நில உபயோகத்திலும், க. ச. எண் 67 / 1, ‘‘விவசாய’’ நில உபயோகத்திலும் அமைந்துள்ளது.

இப்பகுதி பள்ளி கட்டிடம், பூங்கா திடல் அமைக்க வழி வகை உள்ளது.

மேற்கண்ட சூழ்நிலையில் தற்சமயம் இயங்கி வரும் மாநகராட்சி உயர்நிலைப்பள்ளியினை சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள உத்தேச 5 ஏக்கர் நிலப்பரப்பிற்கு மாற்றம் செய்யவும், கல்வி உபயோகத்திற்கு நில ஒதுக்கீடு செய்ய கல்விக் குழு மற்றும் நகரமைப்பு அபிவிருத்தி குழுவின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டது.

கல்வி குழு தனது தீர்மான எண். 14 நாள். 13.8.2008 –ல் மாநகராட்சி கே.கே புதூர் உயர்நிலைப்பள்ளி தற்போது இடம் குறைவான இடத்தில் செயல்படுவதால் பள்ளியை மேற்குறிப்பிடப்பட்ட இடத்திற்கு மாற்றலாம் எனவும் மேற்படி நிலப்பரப்பில் குறிப்பிடப்பட்ட 5 ஏக்கர் இடத்தில் அனைத்து வசதிகளுடன் கூடிய பள்ளிக்கட்டிடம் அமைக்கப்பட வேண்டுமெனவும், பள்ளிக் கட்டிடம் அமையவுள்ள இடத்தினை சுற்றி பிற்காலங்களில் ஏற்படும் மாற்றங்களால் பள்ளி மாணவ, மாணவியர் மனரீதியாகவோ, உடல் ரீதியாகவோ பாதிக்கப்படாத வகையில் மீதமுள்ள சுமார் 18 ஏக்கர் நிலப்பரப்பில் பூங்காவும், மாநகராட்சி பள்ளி மாணவர்களுக்கு அனைத்து விளையாட்டு பயிற்சி அளிக்கக்கூடிய வகையில் அனைத்து வசதிகளுடன் கூடிய விளையாட்டுத் திடல் அமைக்கப்பட வேண்டும் எனவும், இடம் முழுமையும் மாநகராட்சி கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்பட வேண்டும் எனவும், மாநகராட்சி உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் எனவும், மாமன்ற முடிவுக்கு கல்வி, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் நிலைக்குழு பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது. நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி குழு ஒப்புதல் எதிர்நோக்கப்படுகிறது. மேற்காண் விபரங்கள் மாமன்றத்தின் முடிவிற்கு சமர்ப்பிக்கலாம்.

அலுவலகக் குறிப்பு. மாமன்றம் முடிவு செய்யலாம் ந.க. எண். 6085 / 2008 / எச்1 (மே)

**மா.ந.ம.தீர்மானம் எண் : 213 நாள் : 29.08.2008**

கல்வி, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழு தீர்மானம் எண். 14 நாள் 13.8.2008-ஐ ஏற்று வார்டு எண். 63, கே.கே.புதூரில் இயங்கி வரும் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியினை, மாநகராட்சிக்குச் சொந்தமான கவுண்டம்பாளையம் கிராமம் க.ச.எண். 61/1 பாகம், 57/1 பாகம் ஆகிய காலைகளில் அமைந்துள்ள 5 ஏக்கர் நிலத்திற்கு இடமாற்றம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திடமிருந்து பள்ளி அமைப்பதற்கு ஆட்சேபனையின்மை சான்று பெறப்பட வேண்டும் எனவும், கட்டிடம் கட்டப்படுவதற்கு முன்பு மண்பரிசோதனை செய்யப்படவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 86**

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது சுகாதாரப் பிரிவு -2008.09 ம் ஆண்டு தீபாவளிக்கு, துப்புரவு பணியாளர்கள், துப்புரவு மேற்பார்வையாளர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்களுக்கு சீருடைகள், காலணிகள் மற்றும் தையல் கூலி வழங்குவது- தொடர்பாக.

----------

கோயம்புத்தூர் மாநகராட்சி துப்புரவு பணியாளர்களுக்கு அரசு ஆணை (2டி) எண். 37 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 14.05.1999 மற்றும் அரசு ஆணை எண். 393, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 16.09.1997-ல் கண்டுள்ளவாறு ஆண்டிற்கு ஒருமுறை இரண்டு ஜோடி பாலியஸ்டர் சீருடைகள் மற்றும் காலணிகள் வாங்கி வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2008-ம் ஆண்டு தீபாவளிக்கு துப்புரவு பணியாளர்கள் நலப்பிரிவு அலுவலக உதவியாளர்கள் மற்றும் துப்புரவுப் பணி மேற்பார்வையாளர்கள் ஆகியோருக்கு சீருடைகள், காலணிகள் மற்றும் தையல் கூலி ஆகியவை வழங்க தோராயமாக ரூ. 28 இலட்சம் ஆகும் என பின்வருமாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 2006 ம் ஆண்டிற்கான செலவினம் | - | ரூ. 22,74,807/- |
| கூடுதலாக 10% | - | ரூ. 2,27,480/- |
| | - | ரூ. 25,02,287/- |

எனவே, மேற்கண்ட செலவினத்தில் சுகாதாரப் பிரிவு, துப்புரவு பணியாளர்களுக்கு சீருடைகள் (தையல் கூலி உட்பட) மற்றும் காலணிகள் வழங்க உத்தேசமாக ரூ. 28 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். 2008-09 வரவு செலவு திட்டத்தில் கணக்கு தலைப்பு எண் 2014-ல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ந.க.எண். 10714/08/ME 4

**மா.ந.ம.தீர்மானம் எண் : 214 நாள் : 29.08.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. பாதாள சாக்கடைப் பணியாளர்களுக்கும் சீருடைகள் வாங்கி வழங்க தீர்மானிக்கப்பட்டது. பணியாளர்களுக்கு சட்டை, டவுசர், பிளவுஸ் தைப்பதற்குத் தேவையான அளவிற்கு துணி வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 87

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் பொறியியல் பிரிவு எண்.2, வார்டு எண்.27-ல் அவினாசி சாலையிலுள்ள மாநகராட்சி வணிக வளாகத்தில் வாடகை அடிப்படையில் தரை தளத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அலுவலகத்தின் கண்காணிப்பு பொறியாளர் அவர்கள் நகரின் மற்ற பகுதிகளில் வாடகை கட்டிடத்தில் செயல்பட்டு வரும் தங்களது (Urban Division) பிரிவு அலுவலகத்திற்கு கூடுதலாக மாநகராட்சி வணிக வளாகத்தில் அலுவலக கட்டிடம் வாடகை அடிப்படையில் கட்டிக் கொடுக்க கேட்டுக் கொண்டுள்ளார்.

அதன்படி, அலுவலக கட்டிடம் அமைத்துக் கொடுப்பதால் மாநகராட்சிக்கு வருமானம் கூடுதலாகும். எனவே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (Urban Division) அலுவலக கட்டிடம் கட்டுவதற்காக மதிப்பீடு ரூ25.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.10161 / 2008 / எம்.டி.4

**மா.ந.ம.தீர்மானம் எண் : 215 நாள் : 29.08.2008**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 88

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் பொறியியல் பிரிவு எண்.2, வார்டு எண்.27-ல் அவினாசி சாலையிலுள்ள மாநகராட்சி வணிக வளாகத்தில் வாடகை அடிப்படையில் தரை தளத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலகத்தின் கண்காணிப்பு பொறியாளர் அவர்கள், நகரின் மற்ற பகுதிகளில் வாடகை கட்டிடத்தில் செயல்பட்டு வரும் தங்களது மற்ற (Maintenance Division) பிரிவு அலுவலகத்திற்கு மாநகராட்சி வணிக வளாகத்தில் கூடுதலாக அலுவலக கட்டிடம் வாடகை அடிப்படையில் கட்டிக் கொடுக்க கேட்டுக் கொண்டுள்ளார்.

அதன்படி, அலுவலக கட்டிடம் கட்டிக் கொடுப்பதால் மாநகராட்சிக்கு வருமானம் கூடுதலாகும். எனவே அதற்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய Maintenance Division அலுவலக கட்டிடம் கட்டுவதற்காக மதிப்பீடு ரூ25.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.10159 / 2008 / எம்.டி.4

**மா.ந.ம.தீர்மானம் எண் : 216 நாள் : 29.08.2008**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 89

கோவை மாநகராட்சி - வடக்கு மண்டலம் - பொறியியல் பிரிவு எண்.1, வார்டு எண்.1,2-க்குட்பட்ட அவினாசி சாலையில் சாந்தி தியேட்டர் பாலத்தில் இருந்து PSG ஹெல்த் சென்டர் வரையில் சாலையின் மையத்தில் மின் கம்பங்களுடன் கூடிய தெரு விளக்குகள் அமைக்கும் பணிக்கு ரூ.25.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி, பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- அனுமதிக்கலாம் ந.க.எண்.9612 / 2008 / எம்.டி.2

**மா.ந.ம.தீர்மானம் எண் : 217 நாள் : 29.08.2008**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. மின்கம்பம் மற்றும் தெருவிளக்கின் தன்மை குறித்து பணிகள் குழுவில் முடிவு செய்து கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 90

கோவை மாநகராட்சி - வடக்கு மண்டலம் - பொறியியல் பிரிவு எண்.1, வார்டு எண்.1-க்குட்பட்ட அவினாசி சாலையில் நவஇந்தியா பாலம் முதல் சாந்தி தியேட்டர் பாலம் வரை சாலையின் மையத்தில் மின் கம்பங்களுடன் கூடிய தெரு விளக்குகள் அமைக்கும் பணிக்கு ரூ.25.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி, பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் . ந.க.எண்.9609 / 2008 / எம்.டி.2

**மா.ந.ம.தீர்மானம் எண் : 218 நாள் : 29.08.2008**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. மின்கம்பம் மற்றும் தெருவிளக்கின் தன்மை குறித்து பணிகள் குழுவில் முடிவு செய்து கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 91

கோவை மாநகராட்சி - வடக்கு மண்டலம் - பொறியியல் பிரிவு எண்.1, வார்டு எண்.3-க்குட்பட்ட அவினாசி சாலையில் ஜி.பி.டி.மேற்கு பக்கத்தில் இருந்து ஜி.ஆர்.ஜி. சிக்னல் வரை சாலையின் மையத்தில் மின் கம்பங்களுடன் கூடிய தெரு விளக்குகள் அமைக்கும் பணிக்கு ரூ.25.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி, பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.9610 / 2008 / எம்.டி.2

**மா.ந.ம.தீர்மானம் எண் : 219 நாள் : 29.08.2008**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. மின்கம்பம் மற்றும் தெருவிளக்கின் தன்மை குறித்து பணிகள் குழுவில் முடிவு செய்து கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 92

கோவை மாநகராட்சிப் பகுதியை சேர்ந்த 72 வார்டுகளில் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களை 2003-ம் வருடத்தில் கணக்கெடுப்பு செய்ததில் 54621 குடும்பங்கள் என கண்டறியப்பட்டது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் கடித எண்:35621/2006/யு.பி.ஏ-4 நாள்:12.01.2007-ன் படி கோவை மாநகராட்சியில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள விடுபட்ட குடும்பங்களை சேர்த்தும் மற்றும் வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ள குடும்பங்களை நீக்கம் செய்து பட்டியல் தயார் செய்து அனுப்பும் படி கோரப்பட்டுள்ளது. அதன்படி 72 வார்டுப் பகுதியில் உள்ள விடுபட்ட வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களை சேர்த்தும் வறுமை கோட்டிற்கு மேலே உள்ள குடும்பங்களை நீக்கம் செய்து வார்டு வாரியாக வறுமைக்கோட்டிற்கு கீழ்உள்ள குடும்பங்களின் இறுதிப் பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன்படி 70203 குடும்பங்களின் பட்டியல் வார்டு வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

## COIMBATORE CORPORATION S.J.S.R.Y

| SL.NO. | WARD.NO | TOTAL NO.OF BPL FAMILIES |
|---|---|---|
| 1 | 1 | 600 |
| 2 | 2 | 1045 |
| 3 | 3 | 957 |
| 4 | 4 | 1570 |
| 5 | 5 | 532 |
| 6 | 6 | 2573 |
| 7 | 7 | 851 |
| 8 | 8 | 549 |
| 9 | 9 | 1394 |
| 10 | 10 | 952 |
| 11 | 11 | 1173 |
| 12 | 12 | 1679 |
| 13 | 13 | 1125 |
| 14 | 14 | 1157 |
| 15 | 15 | 1304 |
| 16 | 16 | 890 |
| 17 | 17 | 499 |
| 18 | 18 | 884 |
| 19 | 19 | 979 |
| 20 | 20 | 1335 |

| | | |
|---|---|---|
| 21 | 21 | 1833 |
| 22 | 22 | 689 |
| 23 | 23 | 908 |
| 24 | 24 | 636 |
| 25 | 25 | 1094 |
| 26 | 26 | 324 |
| 27 | 27 | 371 |
| 28 | 28 | 461 |
| 29 | 29 | 791 |
| 30 | 30 | 1016 |
| 31 | 31 | 356 |
| 32 | 32 | 504 |
| 33 | 33 | 1480 |
| 34 | 34 | 177 |
| 35 | 35 | 349 |
| 36 | 36 | 1053 |
| 37 | 37 | 901 |
| 38 | 38 | 1016 |
| 39 | 39 | 394 |
| 40 | 40 | 150 |
| 41 | 41 | 963 |
| 42 | 42 | 644 |
| 43 | 43 | 2550 |
| 44 | 44 | 543 |
| 45 | 45 | 849 |
| 46 | 46 | 577 |
| 47 | 47 | 952 |
| 48 | 48 | 432 |
| 49 | 49 | 135 |
| 50 | 50 | 488 |
| 51 | 51 | 345 |
| 52 | 52 | 282 |
| 53 | 53 | 884 |
| 54 | 54 | 2926 |
| 55 | 55 | 1367 |
| 56 | 56 | 2077 |
| 57 | 57 | 1814 |
| 58 | 58 | 1751 |
| 59 | 59 | 1169 |

| | | |
|---|---|---|
| 60 | 60 | 376 |
| 61 | 61 | 577 |
| 62 | 62 | 191 |
| 63 | 63 | 631 |
| 64 | 64 | 1429 |
| 65 | 65 | 1546 |
| 66 | 66 | 1234 |
| 67 | 67 | 1038 |
| 68 | 68 | 1260 |
| 69 | 69 | 1508 |
| 70 | 70 | 800 |
| 71 | 71 | 684 |
| 72 | 72 | 1630 |
| | GRAND TOTAL | 70203 |

அலுவலகக் குறிப்பு - மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். ந.க.எண். 1237/07/ME 6

**மா.ந.ம.தீர்மானம் எண் : 220 நாள் : 29.08.2008**

பதிவு செய்யப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 93

கோவை மாநகராட்சி - வடக்கு மண்டலம் - பொறியியல் பிரிவு எண்.1, வார்டு எண்.2,3-க்குட்பட்ட அவினாசி சாலையில் ஜி.ஆர்.ஜி. சிக்னலில் இருந்து பி.எஸ்.ஜி ஹெல்த் சென்டர் வரை சாலையின் மையத்தில் மின் கம்பங்களுடன் கூடிய தெரு விளக்குகள் அமைக்கும் பணிக்கு ரூ. 25.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி, பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.9611 / 2008 / எம்.டி.2

**மா.ந.ம.தீர்மானம் எண் : 221 நாள் : 29.08.2008**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. மின்கம்பம் மற்றும் தெருவிளக்கின் தன்மை குறித்து பணிகள் குழுவில் முடிவு செய்து கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 94**

கோவை மாநகராட்சி - வடக்கு மண்டலம் - பொறியியல் பிரிவு எண்.1, வார்டு எண்.3-க்குட்பட்ட அவினாசி சாலையில் சித்ரா சிக்னலில் இருந்து ஜி.பி.டி. மேற்கு பக்கம் வரை சாலையின் மையத்தில் மின் கம்பங்களுடன் கூடிய தெரு விளக்குகள் அமைக்கும் பணிக்கு ரூ25.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி, பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.9608 / 2008 / எம்.டி.2

**மா.ந.ம.தீர்மானம் எண் : 222 நாள் : 29.08.2008**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. மின்கம்பம் மற்றும் தெருவிளக்கின் தன்மை குறித்து பணிகள் குழுவில் முடிவு செய்து கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 95**

கோவை மாநகராட்சி, பொறியியல் பிரிவு VI, மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிக்கட்டிடம் (கிழக்கு மேற்கு பிளாக்) கட்டும் பணிக்கு ரூ 25,00,000/-ல் மதிப்பீடு தயார் செய்து தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும், இப்பணிக்கான நிதி முழுவதும் மாநகராட்சியின் வரவு செலவு திட்டம் 2008-2009ல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, இப்பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.11064 / 08 / எம்.டி.4

**மா.ந.ம.தீர்மானம் எண் : 223 நாள் : 29.08.2008**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 96**

கோவை மாநகராட்சி, பொறியியல் பிரிவு VI, மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி (தென்வடல் பிளாக்) கட்டும் பணிக்கு ரூ.25,00,000/-ல் மதிப்பீடு தயார் செய்து தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும், இப்பணிக்கு 2008-2009-ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, இப்பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி பொருள் மன்றத்திற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.11063 / 08 / எம்.டி.4

**மா.ந.ம.தீர்மானம் எண் : 224 நாள் : 29.08.2008**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 97

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டல அலுவலக் கட்டிடத்தின் இரண்டாம் தளத்தில் கூடுதலாக அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு ரூ 25.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி பணியை மேற்கொள்ள ரூ.25.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- அனுமதிக்கலாம் ந.க.எண்.10111 / 2008 / எம்.டி.2

மா.ந.ம.தீர்மானம் எண் : 225 நாள் : 29.08.2008

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 98

பொருள் - பணியமைப்பு -கோவை மாநகராட்சி- பெண் மருத்துவ அலுவலர் பணியிடங்கள் - மன்றத்தின் அனுமதி பெற்று அரசின் உறுதியாக்கத்திற்கு உட்பட்டு நியமனம் செய்தல் - தொடர்பாக.

இம்மாநகராட்சியில் காலியாக உள்ள 5 (ஐந்து) பெண் மருத்துவ அலுவலர் பணியிடங்களுக்கு நேரிடை நியமனம் செய்ய உதவி இயக்குநர், தொழில் மற்றும் செயல் வேலை வாய்ப்பு அலுவலகம், சென்னை அவர்களிடமிருந்து கடிதம் எண். எக்ஸ்.2ஜி0/692/07, நாள் 14.06.2008ல் 4 (நான்கு) பெண் மருத்துவ அலுவலர் பணியிடங்களுக்கு ( S.C. Priority நீங்கலாக) 1:5 என்ற விகிதாச்சார அடிப்படையில் தகுதியான நபர்களின் பெயர்ப் பட்டியல் பெறப்பட்டது.

இவர்களை 08.08.2008 அன்று மாலை 3.00 மணியளவில் மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் நியமனக்குழு முன்னிலையில் அனைத்து அசல் சான்றிதழ்களுடன் ஆஜராக கோரியதன் பேரில், கீழ்கண்ட இரண்டு நபர்கள் மட்டும் ஆஜரானார்கள். இவர்களை நியமனக்குழு தனது தீர்மான எண். 06, நாள் 08.08.2008ல் தேர்வு செய்துள்ளது.

கோவை மாநகராட்சி சட்டம் பிரிவு 106 (2) (b) ன் படி வகுப்பு II-ன் கீழ் வரும் பதவிகளை அரசின் உறுதியாக்கத்திற்கு உட்பட்டு மாமன்றம் நிரப்பலாம் என்பதால் மாமன்றத்தின் அனுமதி பெற்று அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு பெண் மருத்துவ அலுவலர் பணியிடத்தில் 8000-275-13500 என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் பணி நியமனம் செய்ய மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பெயர் / விலாசம் | இனவாரி சுழற்சி | பிறந்த தேதி | வயது | கல்வி தகுதி | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1) | எ.தீபலஷ்மி,<br>46, புதுநகர் காலனி,<br>திருப்பூர்,<br>திருப்பூர் தாலுக்கா,<br>கோயம்புத்தூர் – 641 601. | R.No.2<br>SC<br>Non Priority<br>(Women) | 04.02.80 | 28 | மருத்துவ பட்ட படிப்பு (மெடிசன் & சர்ஜரி எம்.பி.பி.எஸ்) | |
| 2) | எஸ். தீபா,<br>94, ஜீ.வி.ரெஸிடன்சி,<br>சௌரிபாளையம்,<br>கோயம்புத்தூர் – 641 028. | R.No.5<br>General<br>Turn<br>Non priority<br>(Women) | 03.05.74 | 35 | மருத்துவ பட்ட படிப்பு (மெடிசன் & சர்ஜரி எம்.பி.பி.எஸ்) | |

அலுவலகக்குறிப்பு- அனுமதிக்கலாம். ந.க.எண். 2377/2007/எம்.சி.1

**மா.ந.ம.தீர்மானம் எண் : 226 நாள் : 29.08.2008**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 99

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலம் பொறியியல் பிரிவு எண். 4, வார்டு எண். 33-ல் உள்ள அழகப்பா சாலையிலுள்ள டாடாபாத் ஆரம்பப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் பணிக்கு ரூ. 25,00,000/- க்கு மாமன்ற உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளின்படி மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்படி இப்பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 11134/2008/எம்.டி. 2

**மா.ந.ம.தீர்மானம் எண் : 227 நாள் : 29.08.2008**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 100

பொருள்: பணியமைப்பு –கோவை மாநகராட்சி– உதவி பொறியாளர் பணியிடங்கள் – மன்றத்தின் அனுமதி பெற்று அரசின் உறுதியாக்கத்திற்கு உட்பட்டு நியமனம் செய்தல் - தொடர்பாக.

* * * * * *

இம்மாநகராட்சியில் காலியாக உள்ள 5 (ஐந்து) உதவி பொறியாளர் பணியிடங்களுக்கு நேரிடை நியமனம் செய்ய உதவி இயக்குநர், தொழில் மற்றும் செயல் வேலை வாய்ப்பு அலுவலகம், சென்னை அவர்களிடமிருந்து கடிதம் எண். எக்ஸ் 2ஜி 0/818/07, நாள் 14.06.2008-ல் 4 (நான்கு) உதவி பொறியாளர் பணியிடங்களுக்கு (General Turn Priority நீங்கலாக) 1:5 என்ற விகிதாச்சார அடிப்படையில் தகுதியான நபர்களின் பெயர் பட்டியல் பெறப்பட்டது.

இவர்களை 08.08.2008 அன்று மாலை 3.00 மணியளவில் மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் நியமனக்குழு முன்னிலையில் அனைத்து அசல் சான்றிதழ்களுடன் ஆஜராக கோரியதன் பேரில், 10 நபர்கள் மட்டும் ஆஜரானார்கள். இவர்களின் கீழ்கண்ட தகுதியான நான்கு நபர்களை நியமனக்குழு தனது தனது தீர்மான எண். 07, நாள் 08.08.2008-ல் தேர்வு செய்துள்ளது.

கோவை மாநகராட்சி சட்டம் பிரிவு 106 (2) (b) ன்படி வகுப்பு II-ன்கீழ் வரும் பதவிகளை அரசின் உறுதியாக்கத்திற்கு உட்பட்டு மாமன்றம் நிரப்பலாம் என்பதால் மாமன்றத்தின் அனுமதி பெற்று அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு உதவி பொறியாளர் பணியிடத்தில் 6500-200-11100 என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் பணி நியமனம் செய்ய மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பெயர் / விலாசம் | இனவாரி சுழற்சி | பிறந்த தேதி | வயது | கல்வி தகுதி | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1) | டி. சிவபரஞ்ஜோதி,<br>சிவசக்தி இல்லம்,<br>பிளாட் எண். 11,<br>வி.கே.எல்.நகர்,<br>முதல் தெரு,<br>துடியலூர் போஸ்ட்,<br>கோயமுத்தூர்-641 034 | R.No.7<br>MBC &<br>DNT<br>Non<br>Priority<br>(Women) | 25.07.74 | 34 | P.G.<br>Engineering<br>(Civil<br>Engineering) | |
| 2) | பி. கணேசன்,<br>3/10-டி, முருகா நகர்,<br>ஆண்டாள் தோட்டம்,<br>குறிச்சி, சுந்தராபுரம்,<br>கோயமுத்தூர்-641 024 | R.No.10<br>B.C.<br>General<br>Turn<br>Non<br>Priority | 06.08.73 | 35 | P.G.<br>Engineering<br>(Civil<br>Engineering) | |
| 3) | பி. ராஜேஸ்குமார்,<br>53/டி, பெரியார் தெரு<br>கார்னர்,<br>சாஸ்திரி ரோடு,<br>ரத்தினபுரி,<br>கோவை-641 027 | R.No.13<br>MBC &<br>DNT<br>Non<br>Priority<br>(General) | 12.11.76 | 32 | P.G.<br>Engineering<br>(Civil<br>Engineering) | |
| 4) | எம். ஹன்னா ஏஞ்சலின்,<br>42/3 ஹட்கோ காலனி,<br>கிருஷ்ணம்மாள் கல்லூரி<br>எதிர்புறம், பீளமேடு,<br>கோயமுத்தூர்-641 004. | R.No.14<br>B.C.<br>General<br>Turn<br>Non<br>Priority | 22.08.80 | 28 | P.G.<br>Engineering<br>(Civil<br>Engineering) | |

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 2375/2007/எம்.சி.1

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 228 நாள் : 29.08.2008</u>

காலியாக உள்ள தொழில் நுட்ப உதவியாளர் மற்றும் உதவி பொறியாளர் பணியிடங்களில், மாநகராட்சி பணியாளர் தவிர்த்து வெளியிலிருந்து நியமனம் செய்யக்கூடாது என உயர்நீதிமன்றம் தடையாணை பிறப்பித்துள்ளது. எனவே தடைநீக்கம் செய்ய நடவடிக்கை எடுத்து, நீதிமன்ற முடிவின் அடிப்படையில் மேல் நடவடிக்கை தொடர தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 101

கோவை மாநகராட்சி – மேற்கு மண்டலம் - தடாகம் ரோடு – வார்டு எண். 12 - டி.எஸ்.நெ. 62/2,64, 65, 66 மற்றும் 67 பகுதி உள்ள 2.37.1/ 2 ஏக்கர் பரப்புள்ள இடத்தினை பாரதி மெட்ரிக் பள்ளிக்கு பல மாடிக் கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்து தருமாறு கோரி அரசு செயலாளர் அவர்களுக்கு மனுதாரர்களான திரு ஆர்.எஸ். சின்னசாமி மற்றும் திருமதி ஜெயாசின்னசாமி, பாரதி எஜுகேசனல் சொசைட்டி அவர்கள் விண்ணப்பித்துள்ளார்கள்.

----------

இம்மனையிடம் அங்கீகரிக்கப்பட்ட நகரமைப்புத் திட்ட எண். 6-ன் பகுதியில் அமைகிறது. இத்திட்டத்தின்படி இம்மனையிடம் கல்வி உபயோகம் கொண்ட பள்ளிக்கூடம் என குறிப்பிடப்பட்டு நிலையில் பள்ளிக்கூடமாகவும் உள்ளது. இம்மனைக்கு அணுகுபாதையாக நிலையில் உள்ள தடாகம் சாலை அமைகிறது. மற்றும் இம்மனையிடம் 2.37.1/ 2 ஏக்கர் பரப்பு கொண்டதாகவும் அமைகிறது.

இம்மனையிடம் குறித்து வருவாய் வட்டாட்சியர் வடக்கு அவர்கள் தமது அலுவலகக் கடிதம் எண். ப.மு. 465/ 2007 /அ8 நாள். 9.2.2007 அன்று கீழ்க்கண்டவாறு நடவடிக்கை ஏதுமில்லை எனக்கோரி சான்று வழங்கியுள்ளார்.

1) அரசு புறம்போக்கு நிலங்கள் ஏதுமில்லை.

2) நிலம் கையகப்படுத்தும் சட்டம் 1984 பிரிவு 4 (1)-ன்கீழ் இவ்வலுவலகத்தைப் பொருத்தமட்டில் அறிவிப்பு செய்யப்படவில்லை.

3) பிரஸ்தாப புலத்தில் ஏற்கனவே கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

4) நில ஆர்ஜிதப் பட்டியல் (Land Plan Schedule) இவ்வலுவலகத்தைப் பொறுத்தமட்டில் இல்லை.

5) வெள்ளப் பெருக்கால் பாதிப்பு இல்லை.

6) பிரஸ்தாபக் காலையில் உயர் மின் அழுத்தக் கம்பிகள் எதுவும் செல்வதில்லை.

மேலும் இம்மனையிடத்தில் பாரதி மெட்ரிகுலேசன் ஹையர் செகன்டரி ஸ்கூல் என்கிற பள்ளிக்கூடம் நிலையில் உள்ளது. இப்பள்ளி தொடர்பாக வட்டாட்சியர் அவர்கள் தமது அலுவலகக் கடித எண். ப.மு. 4985/ 2005/ அ8-ல் இப்பள்ளிக்கு வழங்கப்பட்ட உரிமத்தினை புதுப்பித்து அனுமதி வழங்கியுள்ளார்கள் . மற்றும் இப்பள்ளிக்கு தீயணைப்பு மற்றும் மீட்டுப்பணித் துறையிடம் தடையின்மைச் சான்றிதழ் பெறப்பட்டுள்ளது.

மற்றும் இப்பள்ளி வளாகத்தில் ஏற்கனவே பலஅடுக்குமாடி கொண்ட வகுப்பறைகளுடன் கூடிய கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இவற்றில் பிளாக் 1,2,3,4,5-ல் தரைத்தளம், முதல் தளம், 2-ம் தளம் கொண்டதாகவும், மேலும் பிளாக் 6,7 -ல் ஸெல்லார் தளம், தரைத்தளம், முதல் தளம், 2-ம் தளம், 3-ம் தளம், மேல்தளம் கொண்டதாகவும் அமைகிறது.

கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் உயரம் 15 மீட்டருக்கு அதிகமாக 15.89 மீட்டர் உயரத்தில் கட்டிடம் உள்ளதால் இக்கட்டிடத்திற்கு பல மாடி கட்டிட விதிகள் பொருந்தும். இதன்படி பலமாடி கட்டிட விதி 4 (a)- ன்படி மனையிடத்தை பலமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்யப்பட வேண்டும். இதன்படி மனுதாரர் இம்மனையிடத்தை பல மாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்யக் கோரியுள்ளார்.

எனவே மேற்படி இடத்தினை அடுக்குமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்ய மனுதாரரின் கோரிக்கையினை நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 3587 /2008 /எச் 1 (மே)

**மா.ந.ம.தீர்மானம் எண் : 229 நாள் : 29.08.2008**

கல்வி உபயோகத்திற்கு மட்டுமே பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள மனையிடம் பயன்படுத்தப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன் அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 102**

கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலம் வார்டு எண். 25 T.S, வார்டு எண். A(1), பிளாக் எண். 15 –ன் பகுதியில், ரேஸ்கோர்ஸ் சாலையில் உள்ள நகரளவு எண். 947 / 1 –ல் பின்பகுதியில் அமைந்துள்ள மனையிடத்தை குடியிருப்பு உபயோகத்திலிருந்து வணிக உபயோகத்திற்கும், T.S. No. எண். 947 –ல் அமைந்துள்ள பகுதியினையும், மேலும் T.S. No. 948 /1, டி.எஸ். எண். 948 / 2 – ல் உள்ள மனையிடத்தினை, பலமாடி வணிகக் கட்டிடம் கட்டும் பகுதியாக மாற்றம் செய்து தரக்கோரி, நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு, கோயம்புத்தூர் மாநகராட்சி மூலம் மனுதாரர் திரு. R. ராமசாமி – விண்ணப்பித்துள்ளார்.

உத்தேச நில உபயோக மாற்றம் மற்றும் பலமாடி வணிகப் பகுதியாக மாற்றம் கோரும் மனையிடம், கோயம்புத்தூர் விரிவு அபிவிருத்தித் திட்ட எண். 8 பகுதியில் அமைகிறது. மற்றும் முழுமைத் திட்டத்தின்படியும் இப்பகுதி குடியிருப்பாக அமைகிறது. இம்மனையிடத்திற்கு, அணுகுபாதையாக நிலையில் உள்ள மாநகராட்சியின் பராமரிப்பில் உள்ள 100 அடி அகல ரேஸ்கோர்ஸ் சாலை அமைகிறது.

மேலும். T.S. No. 947 – பகுதியில் உள்ள இடத்தை குடியிருப்பு நில உபயோகத்திலிருந்து, வணிக உபயோகத்திற்கு மாற்ற, இடத்தை பலமாடிக் கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிக்க, நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழு, தீர்மான எண். 53 நாள். 17.7.2008 – ல் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

எனவே T.S. No. 947 பகுதியில் உள்ள இடத்தை குடியிருப்பு நில உபயோகத்திலிருந்து, வணிக உபயோகத்திற்கு மாற்றம் செய்யவும், T.S. No. 947 –ல் அமைந்துள்ள பகுதியையும், T.S. No. 948 / 1, 948 / 2 –ல் உள்ள மனையிடத்தினை பலமாடி வணிகக் கட்டிடம் கட்டும் பகுதியாக மாற்றம் செய்யவும் மாமன்றத்திற்குப் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு . மாமன்றத்தின் முடிவுக்கு ந.க. எண். 10903 / 07/H1(S)

**மா.ந.ம.தீர்மானம் எண் : 230 நாள் : 29.08.2008**

பொருளில் பத்தி எண். 1, 3-வது வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நகரளவு எண் 947 என்பதாகும். நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழு தீர்மானம் எண். 53 நாள் 17.7.2008-ஐ ஏற்று நகரளவு எண். 947 –ல் பின்பகுதியில் உள்ள 640.50 ச.மீட்டர் பரப்பு இடத்தை குடியிருப்பு நில உபயோகத்திலிருந்து வணிக உபயோகத்திற்கு மாற்றம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

கோயம்புத்தூர் மாநகராட்சி, ரேஸ்கோர்ஸ் சாலையில் நகரளவு எண். 947, 948/1,2 –ல் உள்ள 2065.50 ச.மீட்டர் இடம் முழுவதையும் 30 மீட்டர் உயரம் உள்ள செமி பேஸ்மென்ட் தளம், தரைத் தளம் + 5 தளங்கள் கொண்ட பலமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 103**

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண். 40-க்குட்பட்ட உக்கடம் மாநகராட்சி நகர பேருந்து நிலையத்திற்கு மராமத்து பணிகள் செய்தல் மற்றும் கூடுதல் அபிவிருத்திப் பணிகள் செய்வதற்கென மதிப்பீடு ரூ. 25,00,000/-க்கு தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.

இப்பேருந்து நிலையத்தில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு நவீன முறையில் மராமத்து பணிகள் செய்ய மற்றும் கூடுதல் அபிவிருத்திப்பணிகள் செய்வதற்கென மதிப்பீடு ரூ. 25,00,000/- க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே இம்மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 10869 / 08/MD 4

**மா.ந.ம.தீர்மானம் எண் : 231 நாள் : 29.08.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## சிறப்புத் தீர்மானம் எண் 1

கோவை மாநகராட்சி 69-வது வார்டு சங்கனூர் பள்ளம் 7ஆம் நம்பர் பாலம் முதல் ரூட்ஸ் நிறுவனம் அமைந்துள்ள சங்கனூர் மெயின் ரோடுவரை தென்வடல் பிரதான சாலையின் பெயர் அமரர் ஜீவானந்தம் ரோடு ஆகும்.

கோவை மாநகராட்சி வருவாய் துறை ஆவணங்கள் மற்றும் சொத்துவரி கேட்பு அட்டை உள்ளிட்ட ஆவணங்களில் அமரர் ஜீவா வீதி என்று உள்ளது. சட்டமன்ற தொகுதி வாக்காளர் பட்டியல் மடற்றும் பாராளுமன்ற தொகுதி வாக்காளர் பட்டியலில் சுமார் 35 ஆண்டுகளுக்கு மேல் அமரர் ஜீவானந்தம் ரோடு என்றுதான் உள்ளது.

இதை வலியுறுத்தி அப்பகுதி பொதுநல அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகள் ஜீவா அவர்களின் பெயரை அச்சாலைக்கு வைத்து பயன்படுத்தி வருகின்றனர். இந்நிலையில் 8.8.08 அன்று சில சமூகவிரோதிகள் பெயர் பலகையை அழித்தும், ஸ்டிக்கர்களை கிழித்தும் அராஜகம் செய்துள்ளனர்.

ஆகவே வேதனை தரத்தக்க இச்சம்பவங்கள் முடிவுக்கு வரவேண்டுமென்றால் 35 ஆண்டுகளுக்கு மேலாக புழக்கத்தில் உள்ள அமரர் ஜீவானந்தம் ரோடு என்ற பெயரை எல்லா முனைகளிலும் பெயர்ப்பலகை வைப்பதற்கு தீர்மானம் நிறைவேற்றிட வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக் கொள்கிறது.

**மா.ந.ம.தீர்மானம் எண் : 232 நாள் : 29.08.2008**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி